Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா செய்தி : 021 493 0000 விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :31 மார்கழி 11 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 27 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## அகாலச் சாவு 4

யாழ்ப்பாணம், டிசெ. 27
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்றையதினம் மட்டும் நான்கு அகாலச் சாவுகள் பதிவாகியுள்ளன.

**சாவகச்சேரி**

சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னத்துரை கார்திகேசு (வயது -85) என்ற வயோதிபர் குப்பி விளக்கு தவறுதலாக விழுந்து தீப்பிடித்ததில் உயிரிழந்தார். இவர் கடந்த 14ஆம் திகதி மனைவி பிள்ளைகள் இல்லாத சமயம் வெளியி 23 ➤

## தீவிர சிகிச்சையில் ராஜித!

கொழும்பு, டிசெ. 27
நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன நாரஹன்பிட்டியில் உள்ள லங்கா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ராஜிதவுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவரின் வீடுகளில் பொலிஸார் சல்லடைபோட்டு தேடிவரும் நிலையில் அவர் இதய தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

## பொலிஸாருக்கு தண்ணிகாட்டும் ராஜித

கொழும்பு, டிசெ. 27
வெள்ளை வான் கடத்தல் விவகாரம் தொடர்பான வழக்கில் பிடி 23 ➤

முச்சந்தி முரளி




## தாய்மண் காக்க தாயகமே திரள்க

யாழ்ப்பாணம், டிசெ. 27
வெகுஜன அமைப்புகளின் ஏற்பாட்டில் 'சட்ட 06 ➤

## தமிழ் மொழி புறக்கணிப்பு
# பிளவுக்கே தூபமிடும்!

## கட்டளைத் தளபதி முன் மாவை எம்.பி கர்ச்சிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 27
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசு கையாளும் மாற்றமானது எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத விதத்தில் அமைந்துள்ளது. 23 ➤



## ஆழிப்பேரலையில் காவுகொண்ட உறவுகளை நினைந்துருகி சோகமயமானது தாயகம்!

### கல்லறைகளைக் கட்டியணைத்து சொந்தங்கள் கதறிக்கூக்குரல்

யாழ்ப்பாணம், டிசெ. 27
'சுனாமி' எனும் ஆழிப்பேரலையின் கோரத்தாண்டவத்தில் உயிர்நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு. 07 ➤

## கிளிநொச்சியில் சிமெந்து ஆலை

யாழ்ப்பாணம், டிசெ. 27
கிளிநொச்சி மாவட்டத்தின் வேரவில் பகுதியில் சிமெந்து ஆலை அமைப்பதற்கு இலங்கை முதலீட்டுச் சபை அனுமதி வழங்கியுள்ளது.
கிளிநொச்சி வேரவில் பகுதியில் ஆண்டுக்கு 7 லட் 08 ➤

## சாவகச்சேரியில்




## 3 கடைகள் நாசம்

யாழ்ப்பாணம், டிசெ. 27
தென்மராட்சி - சாவகச்சேரி நகரில், ஏ9 வீதியில் அமைந்துள்ள கடைத் 23 ➤

## சிங்களத்தில் கீதம் நல்லிணக்கத்துக்கு மிகப்பெரும் பாதிப்பு

### ஐ.தே.க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 27
சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையானது இன நல்லிணக்கத்துக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் செயலாகும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. 23 ➤



சிறுக சிறுக சேமித்து உங்கள் எதிர்காலத்தை வளமானதாக்குங்கள்

DFCC ஜூனியர்

DFCC ஜூனியர் சிறுவர் சேமிப்புக் கணக்கில் ரூபா.10,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்புச் செய்தால், புதிய வருடத்தில் முதலாம் தவணைக்காக பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கு பெறுமதிமிக்க பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதியும், தண்ணீர்ப் போத்தலும் பரிசாக வழங்கப்படும்.

ஒவ்வொரு பண வைப்புகளுக்கும் ஜூனியர் கணக்கில் மேலும் பல பெறுமதிமிக்க பரிசுகளையும் பெறும் வாய்ப்பு உங்களுக்குண்டு.

இந்தச் சலுகை 2019 டிசெம்பர் 15 முதல் 2020 ஜனவரி 15 வரை மட்டுமே.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது. கையிருப்பு உள்ள வரை மட்டுமே.

24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# தண்ணீரின் தழும்பை துடைத்தது கண்ணீர்!

வடமராட்சி, டிசெ. 27

சுனாமிப் பேரலையால் காவுகொள்ளப்பட்டு தமது இன்னுயிரை நீத்த பல்லாயிரக் கணக்கானோரின் நினைவஞ்சலி நேற்று உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

**வடமராட்சி**

ஆழிப்பேரலை இடரில் யாழ். மாவட்டத்தில் பெருந்தொகையானோரைக் காவு கொண்ட வடமராட்சி கிழக்கில் உடுத்துறை 10ஆம் வட்டாரம் கட்டைக்காடு, தாளையடி, மணற்காடு ஆகிய இடங்களிலும் வடமராட்சி வடக்கில் புலோலி, பொலிகண்டி ஆகிய இடங்களிலும் நிளைவஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆயிரத்து இருநூறு பேரை அடக்கம் செய்த உடுத்துறை சுனாமி நினைவு வளாக சதுக்கத்தில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் எஸ். தவராசா தலைமையில் பிரதான நிகழ்வு இடம்பெற்றது. கட்டைக்காட்டில் 31பேரை அடக்கம் செய்த நினைவிடத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், கட்டைக்காட்டு பங்குத் தந்தை ஆகியோரின் பங்குபற்றலுடன் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

மணற்காடு பகுதியில் 77 பேரை அடக்கம் செய்ய சேமக் காலையில் மணற்காடு பங்குத்தந்தையின் தலைமையில் விசேட பிரார்த்தனையுடன் நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. தாளையடி புனித அந்தோனியார் தேவாலய வளாகத்திலும் விசேட பூசைகள் ஆராதனைகளுடன் நினைவுதினம் கடைப்பிடிக்கப்பட்டது. பருத்தித்துறையில் 6 பேரை காவு கொண்டோரின் நினைவு புலோலி செபஸ்ரியார் தேவாலயத்தில் விசேட பூசை வழிபாடுகளுடன் இடம்பெற்றது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவிலும் சுனாமி நினைவுகள் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டன. சரியாக காலை 8.50 மணிக்கு பிரதான பொதுச்சுடர் ஏற்றப்பட்டதுடன், சம நேரத்தில் ஆழிப்பேரலையில் உயிர்நீத்த உறவுகளின் உருவப் படங்களுக்கு முன்பாகவும் சுடரேற்றப்பட்டு அஞ்சலி நிகழுவுகள் ஆரம்பித்தன.

தொடர்ந்து ஆழிப்பேரலையின்போது, மரணித்தவர்களின் உருவப் படங்களுக்கு உறவினர்களால் பூத்தூவி, மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டதுடன், அழு குரல்களுடனும், கண்ணீருக்கு மத்தியிலும் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த அஞ்சலி நிகழ்வில் முன்னள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் கலந்திருந்ததுடன், பெருந்திரளான மக்களும் கலந்துகொண்டனர்.

**புதுக்குடியிருப்பு**

ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்ட மக்களின் 15ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள சுனாமி நினைவாலயத்தில் நேற்று நடைபெற்றது. வன்னிக்குறோஸ் தாயக நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டின் அதன் தலைவர் முல்லை ஈசன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவு வணக்க நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், முன்னாள் வடமாகாணசபையின் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ.பிரதாபன், புதுக்குடியிருப்பு பிரதேசபையின் தவிசாளர் செ.பிறேமகாந், உபதவிசாளர் க.ஜெனமேஜயந், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உபதவிசாளர் இரவீந்திரன், உட்பட பலரும் கலந்துகொண்டனர்.


**வவுனியா**


வவுனியாவில் பூந்தோட்டம் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் சுனாமி நினைவலைகள் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டன. மூவினத்தையும் சேர்ந்த மதகுருக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், காதர்மஸ்தான், நகரசபை தவிசாளர் இ.கௌதமன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், நகர சபை உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் இந்த அஞ்சலியில் கலந்துகொண்டனர்.

**மன்னார்**

மன்னாரிலும் பரவலாக சுனாமி நினைவஞ்சலி கடைப்பிடிக்கப்பட்டது. மாவட்டச் செயலகத்திலும் பேசாலையிலும் முதன்மை நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து பல இடங்களிலும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

(ம-21,26,7,9,159,104,173,246,70,ரி3,213)





உடுத்துறை





கட்டைக்காடு





புதுக்குடியிருப்பு














முல்லைத்தீவு சுனாமி நினைவாலயம்

# கள்ளப்பாடு அ.த.க.பாடசாலையின் மாணவர்களுக்கும் நேற்று அஞ்சலி!

முல்லைத்தீவு, டிசெ. 27

முல்லைத்தீவு - கள்ளப்பாடு, அ.த.க பாடசாலையில் கல்விகற்கும் போது ஆழிப்பேரலையால் உயிரிழந்த மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.



கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலையினால், கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்ற 68 மாணவர்கள் உயிரிழந்தனர். சுனாமிப் பேரலையால் உயிர்நீத்தவர்களுக்கான 15ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வுகள் பல இடங்களிலும் இடம்பெற்றுவரும் நிலையில் கள்ளப்பாடு அ.த.க பாடசாலையில் கல்விகற்று உயிர்நீத்த மாணவர்களுடைய அஞ்சலி நிகழ்வும் நேற்று இடம்பெற்றது. பாடசாலையின் உபஅதிபர் திருமதி அகிலா விஜயரத்தினத்தின் தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில், ஆழிப்பேரலையில் உயிர் நீத்த மாணவர்களின் நினைவாக, பாடசாலை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள தூபிக்கு மலர் தூவி, தீபங்களேற்றி மாணவர்களின் பெற்றோர்களாலும், உறவினர்களாலும், பாடசாலை ஆசிரியர்களாலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-246)










சுனாமியால்

## இறந்த உறவுகளுக்காக குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், டிசெ. 27

சுனாமியில் உயிர்நீத்த உறவுகளுக்காக வடமராட்சி கிழக்கு வத்திராயன் சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்றுகுருதிக் கொடை முகாம் முன்னெடுக்கப்பட்டது. உடுத்துறை மகா வித்தியாலய மண்டபத்தில் நேற்றுக் காலை 10 மணி முதல் இந்தக்குருதிக் கொடை முகாம் இடம் பெற்றது. (ம-160)




## யாழ் மாவட்ட செயலகத்தில் சுனாமி அஞ்சலி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 27

ஆழிப்பேரலையில் உயிரிழந்த உறவுகளுக்காக அஞ்சலி நிகழ்வு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்டச் செயலர் நா.வேதநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் சூரியராஜா யாழ் விகாரை விகாராதிபதி, நாச்சியம்மன் கோவில் பிரதம குரு ஜெகதீஸ்வர சர்மா, அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் மற்றும் ஜும்மா பள்ளி மௌலவி முகைதீஸ் ஆகியோர் பங்குபற்றி ஆழிப்பேரலையில் சிக்கி உயிரிழுந்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தினர். அத்துடன் ஆராதனைகளும் இடம்பெற்றன. (ம-26,7)



# சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடு

வவுனியா, டிசெ. 27

சுனாமியால் காவுகொள்ளப்பட்ட உறவுகளின் 15ஆம் வருட நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் மற்றும் குருமன்காடு சித்தி விநாயகர் ஆலய நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் விசேட வழிபாடும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நேற்று இடம்பெற்றது. சிவ குகநாதக்குருகள் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்கள் நினைவாக ஆத்மசாந்தி பூஜைகள் இடம்பெற்றதுடன், நெய் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம-110)

## தென். பிரதேச செயலகத்தில் உறவுகளுக்கு நேற்று அஞ்சலி

சாவகச்சேரி, டிசெ. 27

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஆழிப் பேரலையின்போது காவு கொள்ளப்பட்டவர்களின் நினைவு அஞ்சலி நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. (ம-9)

## சுனாமியால் உயிரிழந்தோருக்கு மன்னார் பேசாலையில் அஞ்சலி

மன்னார், டிசெ. 27

சுனாமிப் பேரலையால் உயிரிழந்தோருக்கான அஞ்சலி நிகழ்வு மன்னார் பேசாலை கிழக்கு மாதர் சங்கத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி ஆணையாளர் நடராசா திலீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பேசாலை உதவி பங்குத் தந்தை, மன்னார் சாந்திபுரம் விகாராதிபதி, மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவை தலைவர் மஹா தர்மகுமார குருக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-56)



## சுனாமிப் பேரலை கொடுமையானது

கோத்தாபய அஞ்சலி

கொழும்பு, டிசெ. 27

'இலங்கை மக்கள் இதுவரை முகங்கொடுக்க நேர்ந்த மிகக் கொடூரமான இயற்கை அனர்த்தம் சுனாமி பேரலையாகும். அந்த பயங்கர அனுபவத்தின் துயர் மிகுந்த ஞாபகங்கள் ஒருபோதும் எமது மனங்களை விட்டு அகலாது' என்று அறிக்கை வெளியிட்டுள்ளார் ஜனாதிபதி கோத்தாபய.

அதனை ஒரு கடந்தகால அனுபவமாகக் கருதி எதிர்காலத்தில் அத்தகைய அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை தடுப்பதற்கான முன் ஆயத்தங்களை மேற்கொள்வது அவசியமானது. இதற்காக புதிய தொழிநுட்ப முறைகளுடன் இணைந்துகொள்ள வேண்டுமென்பதோடு, தொடர்ச்சியாக அவற்றை மீளாய்வுக்குட்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம)



## முருங்கன் மருத்துவமனையின் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்வு

மன்னார், டிசெ. 27
மன்னார் முருங்கன் மருத்துவமனைக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் அங்குள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார்.
மன்னார் மாவட்டத்தில் உள்ள ஆதார மருத்துவமனையாக தரமுயர்த்தப்பட்ட முருங்கன் மருத்துவமனையானது பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது. அந்தக் குறைபாடுகள் தொடர்பில் நிலைமைகளை அறிவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிமோகன் கடந்த திங்கட்கிழமை மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனை அபிவிருத்தி சங்கத்தினரிடம் கலந்துரையாடினார்.
சந்திப்பில் முருங்கன் மருத்துவமனை அதிகாரி திலீபன் மற்றும் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் தி.பரஞ்சோதி, நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்கள், முருங்கன் மருத்துவமனையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். கலந்துரையாடலில், முருங்கன் மருத்துவமனையின் பல்வேறு குறைகள் சுட்டிக்காட்டப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-213)

## வவுனியா பிரதேச அறநெறி விழா






வவுனியா, டிசெ.27
வவுனியா பிரதேச அறநெறி விழா கடந்த செவ்வாய்க்கிழமை காலை சாம்பல் தோட்டம் ஸ்ரீ சாய்சரவண கலாசார மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.
வவுனியா பிரதேச இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் குகனேஸ்வர சர்மா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் கலந்துகொண்டார்.
நிகழ்வுக்கான ஆசியுரையை விசாலாட்சி சமேத விஸ்வநாதப்பெருமாள் திருக்கோயிலின் பிரதமகுரு சிவஸ்ரீ.பா.கிருஷ்ணகுமாரக்குருக்கள் வழங்கியிருந்தார்.
நிகழ்வில் போட்டிகளில் வெற்றியீட்டிய அறநெறி மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.
நிகழ்வில் வவுனியா பிரதேச அறநெறி ஒன்றியத்தினர், அறநெறிஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ-110)

## காணாமற் போனோரின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.27
காணாமல் ஆக்கப்பட்டோரது பிள்ளைகளுக்கு தமிழ் மக்கள் கூட்டணியினரால் கற்றல் உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.
யாழ்ப்பாணம் ஒ.எம்.பி அலுவலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்திவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கே இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரும் பருத்தித்துறை தொகுதி அமைப்பாளருமான இரா மயூரதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் கூட்டணியின் ஊடகம் மற்றும் செயற்றிட்ட ஆக்கங்களுக்கான உப செயலாளர் த.சிற்பரன் உட்பட்ட மத்திய குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.
25 மாணவர்களுக்கு முப்பதாயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ-160)



## கலந்துரையாடல்

வவுனியா, டிசெ.27
வவுனியா மாவட்ட புகைப்படக் கலைஞர்களுக்கான டெங்கு விழிப்புணர்வுக் கருத்தமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நடைபெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் பொது சுகாதாரப் பரிசோதகர் க. சிவரஞ்சன் கலந்துகொண்டு வவுனியா மாவட்டத்தில் டெங்கு நுளம்பின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களத்துடன் புகைப்படக் கலைஞர்கள் இணைந்து பணியாற்றுகின்றமை தொடர்பிலும், டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடினார். (ஐ)



## ஒளிவிழா





யாழ்ப்பாணம், டிசெ.26
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய ஒளி விழா நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.
நிகழ்வில் அருட்பணி சாள்ஸ் ஜஸ்ரின் அடிகளார் ஆசியுரை நிகழ்த்தினார். கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயப் பங்கு மாணவர்களின் வரவேற்பு நடனம் மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.
நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் பணியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.
சங்கத்தின் தலைவர் என்.எஸ்.சத்தியதாசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (க-17)





வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தின் ஒளிவிழா நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. (ஐ-9)



மாந்தை கிழக்கு பிரதேச செயலக கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச கலைஞர்கள் ஒன்றுகூடலும், கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கல் நிகழ்வும் அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றன. (ஐ-9)



மாந்தை மேற்குப் பிரதேசத்தின் பல பகுதிகளில் கிறிஸ்மஸ் தாத்தாவின் வருகையால் மக்கள் மகிழ்ந்தனர்.
அடம்பன், ஆட்காட்டிவெளி, ஆண்டான்குளம் பகுதிகளில் கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடும் விதமாக கிறிஸ்மஸ் தாத்தாவாக வேடமிட்ட பலர் கடை வீதிகளிலும் வீடுகளிலும் மக்களுடன் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். (க-213)

# வவுனியாவில் விபத்தை ஏற்படுத்திய பொலிஸாரால் பதற்றம்


வவுனியா, டிசெ. 27

வவுனியா மன்னார் வீதி பட்டானிச்சூர் 5ஆம் ஒழுங் கைக்கு முன்பாக ஏற்பட்ட விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் பதற்றமான நிலை உருவானது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வவுனியாவிலிருந்து மன்னார் வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்த பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் பண்டாரிச்சூர் 5ஆம் ஒழுங்கைக்கு அருகே வீதியின் மறுபக்கம் மாற முற்பட்ட சமயத்தில் மன்னார் வீதியுடாக வவுனியா நகர் நோக்கி பயணித்த இளைஞனின் மோட் டார் சைக்கிள் மீது மோதுண்டு விபத்துக்குள்ளானது. இதையடுத்து இளைஞருக்கும் பொலிஸ் அலுவலருக் கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இதனால் சிறு பதற்றம் நிலவியது என்று தெரியவருகிறது.

(ம-ரி3)



## மரண அறிவித்தல்கள்

## குணலெட்சுமி இராமநாதன்



வேலணை வடக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் குணலெட்சுமி நேற்று (26.12.2019) வியாழக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நடராசா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராமநாதனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான குணரெட்ணம், ராஜரட்ணம், திருநாவுக்கரசு மற்றும் இரத்தினசபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வசீகரன் (அதிபர், யா/ ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம், காரைநகர்), குமுதா, சுதாகரன் (ஆசிரியர், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), அமுதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், மாலதியின் (ஆசிரியை, யா/வட்டு மேற்கு அ.மி.த.க பாடசாலை, வட்டுக்கோட்டை) அன்பு மாமியாரும் காலஞ் சென்ற தர்மலிங்கம் மற்றும் தில்லைம்மா (கனடா), காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் ஜீவநேசராசதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2019) வெள்ளிக்கிழமை பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேலணை சாட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேலணை வடக்கு,**
**வேலணை**

**தகவல் : குடும்பத்தினர்**
**077 899 6410, 077 955 0862**



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 | 26 |
| 06 | 12 |
| 1929 | 2019 |

## திருமதி மனோன்மணி செல்லத்துரைஐயர்

யாழ்ப்பாணம் காரைநகரை பிறப்பிடமாகவும், மட்டுவில் சந்திரபுரம் செல்லப் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி செல்லத்துரைஐயர் நேற்று **(26.12.2019)** வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காரைநகர் மணற்காட்டை சேர்ந்த காலஞ்சென்றவர்களான குமாரசாமி ஐயர்- உமை அம்மா தம்பதிகளின் துதிய புத்திரியும் காலஞ்சென்றவர்களான இராம சாமி குருக்கள் - மீனாட்சி அம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரைஐயரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவானந்தசர்மா மற்றும் செல்வநாதசர்மா, யோகேஸ்வரி, யோகானந்தசர்மா, சிவகுமாரகுருக்கள், ஸ்ரீதேவி, மனோராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மீனலோஜனா மற்றும் இந்துமதி, சுந்தரசர்மா, வனஜா, ஜெகதீஸ்வரசர்மா, ஸ்ரீகாந்தகுருக்கள் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(27.12.2019)** வெள்ளிக்கிழமை மட்டுவில் சந்திரபுரம் செல்லப்பிள்ளையார் கோவிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் **03.00** மணியளவில் மட்டுவில் வடக்கு சவுக்கடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**செல்வநாதசர்மா (சபேஸ்), யோகானந்தசர்மா (சின்னவி)**
**077 033 9581, 077 228 0042**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் செல்வி
## ஹம்சுஜா கணேசலிங்கம்

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 08.05.1992 | 27.12.2016 |

**நேற்று வரை எம்மோடு இருந்தாய்**
**எங்களில் ஒருத்தியாய் அன்போடு**
**வாழ்ந்தாய்**
**காலமெல்லாம் எம்மைக் காத்திடுவாய்**
**என்றெண்ணி நாமிருக்க நீயோ!**
**கண்ணீரைத் தந்துவிட்டு விண்ணோடு**
**சென்றது ஏனம்மா ஹம்சுஜா!**
**ஆற்றொணாத் துயரமது ஊற்றானதம்மா**
**உன் ஆத்மா சாந்தியுற வேண்டுகின்றோம்.**

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

*நீங்கா நினைவுடன்*
**குடும்பத்தினர்**

C12078(16/17)

## மரண அறிவித்தல்

## திருமதி பவானி மருதவாணர்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06.12.1946 | 25.12.2019 |

யாழ்ப்பாணம் வழக்கம்பரையை பிறப் பிடமாகவும் நல்லூரடியை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி பவானி மருதவாணர் கடந்த **(25.12.2019)** புதன்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் வழக்கம்பரையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் பவளமணி தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா மருதவாண ரின் (முன்னாள் இணைப்பாளர்- யாழ் அரசாங்க அதிபர்) அன்பு மனைவியும், கவீந்திரன் (ஹபரணை), யோகராணி (வட்டுக்கோட்டை), சேகரன் (கனடா) ஆகியோரது சகோதரியும் ரோகினி (ஆசிரியை - சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை), நந்தினி (கனடா), ரமணன் (சிங்கப்பூர்) ஆகியோரது பாசமிகு தாயாரும் சிவகணேசன் (இல.மின்சார சபை), தர்மராஜா (கனடா), சிந்து ஆகியோரின் மாமியாரும் மயூரேஷ், ஹரிகேஷ், ஆரன், அக்ஷயன், அஞ்சனா, யாதவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக **29.12.2019** ஞாயிற்றுக்கிழமை காலை **9.00** மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.40, சாமாதி ஒழுங்கை,**
**திருகோணமலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**071 686 7209, 076 776 1221**

CS30193(16/17)

இனிய வாழ்வு இல்லம், தேவிபுரம் ,
புதுக்குடியிருப்பு

**புதிய பயனாளிகளை இணைத்தல் - 2020**

மேற்படி தன்னார்வத் தொண்டு நிறுவனமான எமது இல்லத்தில் 2020 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர் களை சேர்த்துக்கொள்ள இருக்கின்றோம்.

**தகுதிகள்**
- கண்பார்வையற்ற அல்லது கண் பார்வை குறைந்தவராக இருத்தல் வேண்டும்.
- செவிப்புலன் குன்றிய அல்லது பேச்சுத்திறன் குன்றியவராக இருத்தல் வேண்டும்.
- 06-22 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்

**வசதிவாய்ப்புக்கள்**
- இலவச உணவு
- இலவச தங்குமிடவசதி
- இலவச உடை
- இலவச சுகாதார வசதி
- இலவச கற்றல் வசதி
- அரச பாடசாலையுடன் இணைந்த கற்பித்தல் செயற்பாடு

குறித்த தகுதிகளை உடையவர்கள் 15.01.2020 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக் குமாறு வேண்டுகின்றோம். பிள்ளையின் குறைபாடு தொடர்பான மருத்துவச்சான்றிதழ் இருத்தல் வேண்டும்

"மாற்றுவலு உள்ளவரால் மாற்றம் காணுவோம்"

மேலதிக தகவல்களிற்கு
முகாமையாளர்
இனிய வாழ்வு இல்லம்,
தேவிபுரம்.
077 710 0341
077 590 3184
021 206 1949

**1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 13 - 08 - 1952



மறைவு 06 - 01 - 2019

**வெற்றிவேலு ராஜ்குமார்**
(முன்னாள் அதிபர் - யா/சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம்)

ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எமது மனதை என்றும் விட்டகலாது
அன்பிற்கும் பாசத்திற்கும்
வரைவிலக்கணமாய்
அறிவின் சிகரமாய் உயர்ந்து நின்ற அன்புத்
தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுழிபுரம் மத்தி, சுழிபுரம் — குடும்பத்தினர்

**மரண அறிவித்தல்**

அருட்சகோதரி
**பெனிக்னஸ் நீக்கிலாப்பிள்ளை தி.கு**



நானாட்டானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். திருக் குடும்ப சபையைச் சேர்ந்த வருமான அருட்சகோதரி பெனிக்னஸ் நீக்கிலாப்பிள்ளை தி.கு. நேற்று (26.12.2019) வியாழக்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிப் பயணத் திருப்பலி இன்று (27.12.2019) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக் கப்பட்ட பின்னர், யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி.

121,பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(cs.30158) (13.17)

## தாய்மண்...

விரோத மண் அகழ்வைத் தடுப்போம்' எனும் தொனிப்பொருளில் கவனவீர்ப்புப் போராட்ட மொன்று இன்று இடம்பெறவுள்ளது. சாவகச்சேரி பேருந்து தரிப்பிடத்தில் இன்று மாலை மூன்று மணியளவில் இந்தப் போராட் டம் இடம்பெறவுள்ளது என்று அறிவித்துள்ள ஏற்பாட்டாளர்கள் கட்சி வேறுபாடுகள் இன்றி அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமா றும் அழைப்பு விடுத்துள்ளனர். (ம)

## மக்கள் வங்கியின் தலைவராக சுஜீவ ராஜபக்ச



சிரேஷ்ட பட்டயக் கணக்கா ளர் சுஜீவ ராஜபக்ச மக்கள் வங்கியின் தலைவராக ஜனாதிபதியால் நியமிக் கப்பட்டுள்ளார்.

பட்டயக் கணக்காளர் நிறு வனத்தின் முகாமைத்துவ பங்காளரான இவர் இலங்கை பட்டயக் கணக் காளர் நிறுவனத்தின் முன் னாள் தலைவராகவும் இருந்துள்ளார். சிறி ஜெய வர்த்தன பல்கலைக் கழ கத்தில் வியாபார முகாமைத்துவத்தில் முதுகலைமாணி பட்டம்பெற்ற இவர் கணக்கியல் கணக்காய்வுத் துறைகளில் 30 வருடத்துக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவர். (ம)

**தென்மராட்சி அபிவிருத்தி கழகம்**
பதிவு இலக்கம் TN/SS/TDAC/2019/01

தென்மராட்சி அபிவிருத்தி கழகத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் விரைவில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுவதால் கழகத்தில் புதிய அங்கத்தவர்களாக இணைய விரும்புவோர் தபால் மூலமோ. நேரடியாகவோ பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 10.01.2020 இற்கு முன்பதாக பூர்த்தி செய்த படிவங்களை குறித்த முகவரிக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் வசிப்பவர்கள் மட்டும் அங்கத்த வராக இணைய தகுதியுடையவர்கள் ஆவார்.

உறுப்பினர் வருட சந்தா - ரூபா 120.00
உறுப்பினர் ஆயுள் சந்தா - ரூபா 1000.00

தென்மராட்சி அபிவிருத்திக் கழகம்
தமோதரம் பிள்ளை வீதி,
சாவகச்சேரி.
தொலைபேசி இலக்கம் 077 316 4236 / 077 711 7030 / 077 314 4895

குறிப்பு :- பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் மட்டும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள முடியும்.

பேராசிரியர் க.கந்தசாமி
தலைவர்.
(IN/12074)(11,17)
யோ.ஜெயக்குமார்
செயலாளர்.

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் உபதலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகருமான

**திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்**



அவர்கள் கடந்த புதன்கிழமை 25.12.2019 அன்று இறைபதம் எய்தினார்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் பல்கலைக்கழக சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப்பாதங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.**

**கண்ணீர் அஞ்சலி**

**ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்**



(யாழ் பல்கலைக்கழக பிரதம நூலகர்)

தேகம் நடுநடுங்கிட சேதியும் வந்தது
நூலக தேசமும் ஒருகணம் உறைந்தது
மகளிரில் மாண்புற்ற ஆளுமை - பல
சிகரங்களை தொட்ட பெண் தலைமை
உங்கள் இழப்பை தாங்கிட
எங்கள் இதயம் மறுக்கின்றதே
போய்வா தாயே இனி புத்தகங்கள் கூட
உன் புகழ் பாடிடும் போய்வா

அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ். பொதுசன நூலக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்
CS/133/16-17

## கிளி. விபத்தில் முதியவர் காயம்

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி, ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கி முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி பொது மருத் துவமனைக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த முதியவரை மோட்டார் வண்டியில் வந்தவர் மோதி தள்ளியதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணத்திலிருந்து வவு னியா நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்துடனும் மோட்டார் சைக்கி ளில் சென்றவர் மோதுண்டார் என்று அங் கிருந்தவர்கள் தெரிவித்தனர். எனினும் மோட்டார் சைக்கிள் சாரதி காயங்கள் ஏது மின்றி உயிர் தப்பினார். (ஐ)





## திருவாசக பெருவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையின் திருவாசகப் பெருவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இந்து சமயப் பேரவை யில் காலை 7 மணிக்கு நடைபெறவுள் ளது.

தொண்டமானாறு செல்வச்சன்னிதி முரு கன் அலய பூசகர் குகசிறி ஆறுமுகசாமி ஐயர் சிவசண்மக ஐயர், சிவத்திரு வீ. தி.அ.தில்லைநாதர், சிவத்திரு வேலாயுத பிள்ளை விநாசித்தம்பி ஆகியோருக்கு பௌராணிகர் விருது வழங்கப்படவுள்ளது. (ஐ)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 27

கட்டுவன் ஸ்ரீ ஐயப்பன் கோவில் தேர்த் திருவிழா ஐயப்பன் மண்டல விரத பூர்த்தி தினமான இன்று வெள்ளிக்கி ழமை காலை 9 மணியளவில் வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து நடை பெறும். (ம)

## மரண அறிவித்தல்கள்



மலர்வு 21 ... 08 ... 2000

உதிர்வு 22 ... 12 ... 2019

### செல்வன் ரசிக்குமார் ரதுஷன்

ஜேர்மன் ருட்லிங்கனை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ரசிக்குமார் ரதுஷன் கடந்த **(22.12.2019)** அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம் - இராசாம்பாள் தம்பதிகள், முத்துக்குமார் - ஆச்சிக்குட்டி தம்பதிகள் மற்றும் புஸ்பம் ஆகியோரின் பாசமிகு பேரனும் ரசிக்குமார் - புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மகனும், மதுஷனின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் பாலகுமார் (லண்டன்), ஜெயராணி (கனடா), இன்பராணி, ஜெயபவானி (ஜேர்மன்), ஜெயந்தி (இலங்கை) ஆகியோரின் அன்புப் பெறாமகனும் நித்தியமலர், சாந்தினி, சர்மிளா ஜெகநாதன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மருமகனும் ராகினி (லண்டன்), இந்திரநாதன் (கனடா), கிருஷ்ணமூர்த்தி, தர்மசேனன் (ஜேர்மனி), லம்போதரன் (இலங்கை) ஆகியோரின் பெறாமகனும் S.சிவானந்தன், N.சிவானந்தன், ரவிச்சந்திரன், மஞ்சுளா (இலங்கை) ஆகியோரின் அன்பு மருமகனும் மருஜன், மதுஜன், இந்துஜன், அபினுகா, வினுஜா, மஞ்சுஜன், றேனுஷன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாருகா (லண்டன்), பிரணவன், பிரஷா, லதீஸ், கிருஷாந்தினி, நிமலினி, குகன், தர்மிஷா, தர்மிலன், தர்மிரா (ஜேர்மன்), வர்ஜன், வர்டஜா (இலங்கை) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **30.12.2019** திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கலட்டி அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**அத்தைமார், மாமன்மார்.**

ரசிக்குமார் (தந்தை - ஜேர்மனி) 00497 4617 70763, 0160 9680 3525
பாலகுமார் (சித்தப்பா - லண்டன்) 00447 4243 11820
ரவிச்சந்திரன் (மாமா - இலங்கை) 077 9064 595

CS11012(16/17)

### உறவுகளை...


கிழக்கு உட்பட நாடெங்கிலும் நேற்று அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

உயிர்நீத்த உறவுகளுக்காக நேற்றுக் காலை 09.25 தொடக்கம் 09.27 வரை இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனர்த்தத்தில் காவுகொள்ளப்பட்ட உறவுகளின் கல்லறைகளுக்கு அவர்களின் சொந்தங்கள் சுடர் ஏற்றினர். அவர்கள், கல்லறைகளைக் கட்டியணைத்து கதறியழுதனர். ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து இன்றுடன் 15 ஆண்டுகள் கடந்துவிட்டாலும் அந்தப் பேரவலம் ஏற்படுத்திவிட்ட வலிகளிலிருந்து இன்னமும் மக்கள் மீளவில்லை என்பதற்கு இந்தக் கண்ணீர் கதறல் காட்சி சான்றாக அமைந்தது. (ம-22)

## நினைவலைகள்

14ஆம் ஆண்டு நினைவஞ்சலி | முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





**கதிரேசு பொன்னுத்துரை**
அன்னை மடியில் 14.02.1940
ஆண்டவன் அடியில் 11.12.2005

**பொன்னுத்துரை நகுலேஸ்வரன்**
அன்னை மடியில் 17.11.1966
ஆண்டவன் அடியில் 07.01.2019

விழியோடு நிழலாகி கனவோடு தழலாகி
கடலோடு கரைந்தீர்களே நிலையற்ற
கூடோடு நிலைபெற்று
நித்திலம் உறவோடு வாழ்ந்தீர்களே!
புவிலோக சாம்ராஜ்ய புண்ணிய
வீதிகளில் கலந்துநீர் சென்றீரே
நாமூன்று மாதங்கள் / பதின்நான்கு வருடங்கள்
சென்றாலும்

இன்றுமே நம் மனதில் வாழ்கிறீரே
தந்தையும் தனயனும்
தேவனில் சேவையில்
இறைபதம் பெற்றீர்களே
அழிவற்ற உங்களின் ஆத்மாக்கள்
தன்பெறும் சிவமதில் சாந்தியாய்
மிளிர்ந்திட ஆண்டவன் பாதம்
தொழுவோம்

**குடும்பத்தினர்.**



### திருமதி புனிதவதி தேவராசன்

செட்டியார்மடத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி தேவராசன் நேற்று (26.12.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை இரத்தினவல்லி தம்பதிகளின் அன்பு மருமகளும் அப்பாப்பிள்ளை தேவராசனின் அன்பு மனைவியும் முரளிதரன் (France), பகீரதன் (London), மோகனசுந்தரன் (London), தயா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுகிர்தலட்சுமி, விக்கினேஸ்வரன், மகேசன், நித்தியலட்சுமி (கனடா), சிற்சபேசன், (France) ஆகியோரின் சகோதரியும், கலாஜோதி (France), ஹர்ஷினி (London), கல்யாணி (London), Dr.டனராஜ் (சத்திரசிகிச்சை நிபுணர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிலக்ஷினி, நிஷிஷன், நிஷாஷினி, ஷஷிலஜன், ஷிலஷிகா, வர்ணன், கௌதம், மகதி, ஹரிஷன், கிரிஷா, ரோஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் , மயிலாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**"தயா இல்லம்"**
**கந்தரோடை,சுன்னாகம்.**

(CS/24233/15/17)

**தகவல்: குடும்பத்தினர்**
**021 224 1786**

தயா - 076 652 3070 | முரளிதரன் - 0033663797447
பகீரதன் - 00447414101033 | மோகனசுந்தரன் - 004479 57285530

## மரண அறிவித்தல்



மண்மகிழ 01 . 02 . 1942

மண்நெகிழ 24 . 12 . 2019

### இராமையா மகாலிங்கம்

புத்தூர் கிழக்கைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமையா மகாலிங்கம் கடந்த (24.12.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமையா தெய்வானை தம்பதிகளின் மகனும் பாக்கியலட்சுமியின் அன்புக்கணவரும் சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுந்தரம் பராசக்தி தம்பதிகளின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற செல்வநாயகம், செல்லத்துரை (கனடா), காலஞ்சென்ற தவமலர் மற்றும் மகேஸ்வரி, செல்வரத்தினம், அருளம்மா, சிவஞானம் (ஜேர்மனி), யோகநாதன் ஆகியோரின்அன்புச் சகோதரனும் சுகிர்தா (கனடா), சுதாகர் (இலண்டன்), நிஷாந்தன் (பின்லாந்து) ஆகியோரின் அன்புத்தந்தையும் நவனீஸ்வரன் (கனடா), சர்மிளா (இலண்டன்), சரண்யா (பின்லாந்து) ஆகியோரின் அன்பு மாமாவும் றிதுஷன், யாதுஷா, சஸ்மிகா, சஸ்வின், துவிஸ்தா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், பாலகிருஷ்ணன் மற்றும் பாலச்சந்திரன், கமலாம்பாள், லோகசறோசா (கனடா), பத்மராணி, கௌரி (ஜேர்மனி), ருக்குமணி, வேலுப்பிள்ளை, பாலகிருஷ்ணன், யோகேஸ்வரன், சறோஜினிதேவி (இலண்டன்) பத்மாவதி, பத்மநாயகி (இலண்டன்), தனபாலசிங்கம் (இலண்டன), சுபாஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அந்திரானை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/30194/15/17)

**புத்தூர் கிழக்கு, புத்தூர்**

**தகவல்: குடும்பத்தினர்**

## மாநகரசபையின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 27
யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆதன வரி செலுத்துதல் தொடர்பான நடமாடும் சேவை இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

யாழ் மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நிலுவை அறவீடுகளை மேற்கொள்ளல், பெயர்மாற்றப்பட்டியல் வழங்கல், 2020ஆம் ஆண்டிற்கான ஆதன வரி அறிவித்தல்கள் வழங்கல் ஆகிய செயற்பாடுகள் காலை 9 மணிமுதல் மாலை 3 மணி வரை யாழ்ப்பாணம் குருநகர் சென். றோக்ஸ் சனசமூக நிலையத்தில் இடம்பெறும் என யாழ் மாநகர சபை பிரதி ஆணையாளர் அ. சீராளன் தெரிவித்துள்ளார்.

(ம-104)

## மனித மேம்பாட்டுக் கல்வி விழா

யாழ்ப்பாணம், டிசெ. 27
மனித மேம்பாட்டுக் கல்வி விழா இன்று வெள்;ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சத்திய சாயி சேவா நிலைய மனித மேம்பாட்டு கல்விப் பிரிவினரால் திருநெல்வேலி பாரதிபுரத்தில் அமைந்துள்ள மனித மேம்பாட்டு கல்வி மண்டபத்தில் நிகழ்வு இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தின் தலைவர் தி. பிரதீபன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் விருந்தினராக கிராம அலுவலர் வ.வசந்தரூபன் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் சிறப்புரையை சத்திய சாயி நிலைய மனித மேம்பாட்டு கல்விப்பிரிவின் இணைப்பாளர் டாக்டர் இ.கணேசமூர்த்தி ஆற்றவுள்ளார்.

(ம-104)

## மாணவர் அனுமதி

யாழ்ப்பாணம், டிசெ. 27
யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 2020ஆம் ஆண்டுக்கான தரம் 6 மாணவர்களை சேர்ப்பதற்கான புதிய அனுமதிகள் கோரப்பட்டுள்ளன. நாளை 28ஆம் திகதி காலை 8 மணி முதல் புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும் என கல்லூரியின் அதிபர் மு.செல்வஸ்தான் கூறியுள்ளார்.

(ம-104)

## கிளிநொச்சியில்...

சத்து 50 ஆயிரம் மெற்றிக்தொன் சிமெந்து உற்பத்தி செய்யக் கூடிய வகையில் ஓர் உற்பத்தி தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது. இவ்வாறு ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற்சாலைக்கு உரிய அனுமதிகள் தற்போது பெறப்படும் நிலையில் இதற்கு முதலீட்டுச் சபை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி தொடர்பான சூழல் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கை மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த அறிக்கையிலேயே வேரவில் சீமேந்து தொழிற்சாலைக்கான அனுமதி வழங்கப்பட்டமையும் குறிப்பிடப்பட்டள்ளது.

இதன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களின் அனுமதியும் பெறப்பட்டு எதிர்காலத்தில் அமைக்கப்படும் சிமெந்து தொழிற்சாலைக்கான மூலப்பொருள்கள் காங்கேசன்துறை துறைமுகம் ஊடாக வெளியில் இருந்தே எடுத்துவரப்படும். அதேநேரம் உள்ளூர் பாவனை தவிர்ந்த ஏனையவை துறைமுகம் ஊடாக சந்தைப்படுத்த முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-105)

Macktiles LANKA

65% வரை விலைக்கழிவு

ஏற்றுமதியிலிருந்து அகற்றப்பட்ட
உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான

மெக்டைல்ஸ்
கையிருப்பை நிறைவு செய்வதற்கான..
மாபெரும் சேல்...

வாருங்கள், உங்கள் இல்லத்துக்கு, அலுவலகத்துக்கு, வியாபார நிலையங்களுக்கு பொருத்தமான சகல வடிவங்களிலுமான கவர்ச்சிகரமான டைல் வகைகள் ஒரே கூரையின் கீழ்....

2'x2' ரூ.475/=

- மொரட்டுவ - அட்பாம் 071 6 095 886
- கடுவெலை - ஷெஹான் 070 3 551 552
- ராஜகிரிய - பர்ஹான் 071 0 676 161
- கொல்லுப்பிட்டி - ஷஹீர் 070 4 312 547
- தளவத்துகொடை - காமினி 071 0 745 638
- திஹாரிய - பைசால் 077 1 782 992
- தம்புள்ளை - பண்டார 071 4 524 346
- நீர்கொழும்பு - ஷெஹான் 070 3 551 552
- பதுளை - நஜீப 071 9 800 322
- யாழ்ப்பாணம் - நதீர் 071 0 943 524
- சம்மாந்துறை - நபாத 071 0 300 434
- காலி - நஜீப் 071 9 800 322
- மாத்தறை - சஜாத் 071 3 173 212

காலை 09.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை திறந்திருக்கும்.

Macktiles LANKA
MACKSONS HOLDINGS




### வெளிவந்துவிட்டது

A/L முதல் பட்டதாரிகளுக்கு அமைவான பாடத்திட்டத்தின்படி எழுதப்பட்ட
**(காலந்தோறும் தமிழ் இலக்கணம்)**
நூல் விற்பனையாகின்றது.

ஆக்கியோன் - தமிழ் பேராசான் நா.குழந்தைவேலு M.A.Q (Cey)
கிடைக்கும் இடம் - ஞானம் புத்தகசாலை, 1024 K.K.S, வீதி, யாழ்ப்பாணம்

T.P. 021 221 6243

### விற்பனைக்கு

யாழ். பிறவுண் வீதியில் நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 5 பரப்பில் வீடும் காணியும், யாழ். சிவகுருநாதன் வீதியில் 4 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

077 723 2535

### காணி விற்பனைக்கு

யாழ் மாநகரசபை எல்லைக்குள் தபால்கட்டைச் சந்தி, அரியாலையில் யாழ் நகரிலிருந்து 5 நிமிட பயணத் தூரத்திலமைந்த நல்ல அயலுடன் கொண்டமைந்த 1 1/2 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்பிற்கு - 076 978 2940
077 706 6000

YAMAHA வழங்கும் புத்தாண்டு பரிசு மழை

சிறப்பு விலைத் தள்ளுபடி
15,000/- முதல்
125,000/- வரை

இச்சலுகை டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ் இடம் இருந்து மட்டுமே




20,000/= பெறுமதியான Oppo A1K 2GB Ram 32GB Mem ஒன்றை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

ஒன்றை கொள்வனவு செய்து




25,000/= பெறுமதியான Oppo A5s (Finger Print) ஒன்றை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்

ஒன்றை கொள்வனவு செய்து

5 இலவச சேவை
2 வருடம் 30000 KM Warranty
Jacket இலவசம்

(நிபந்தனைக்குட்பட்டது) தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளுக்கு மட்டுமே

காட்சியறை:
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 554 5843 | 077 662 3824

### மாற்றுக் கட்சிகளைக் கலங்கடிக்கக் காத்திருக்கும்

# தமிழ் அரசுக்கட்சியும் தமிழ்க் கூட்டமைப்பும்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தாமே வெற்றிவாகை சூடலாம் என்ற நிலைப்பாட்டில் பல கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவும் தமிழ் அரசுக்.கட்சி மற்றும் அதன் தலைவர் சம்பந்தனுக்கு எதிராகவும் பல குற்றச்சாட்டுக்களை வைத்து சில ஊடகவியலாளர்களின் துணையைக் கொண்டு தீவிர பரப்புரைகளைச் செய்து வருகின்றன. பொய்யான அறிக்கைகளையும் விமர்சனங்களையும் வெளியிட்டு வருகின்றனர்.

**தியாகங்களை மறக்கார் தமிழர்**

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், சமஷ்டி ஆட்சிக்காகவும் 1948 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையும் தமது உயிர்களைத் தியாகம் செய்து வந்தவர்கள் தந்தை செல்வநாயகத்தின் வழி வந்த தமிழ் அரசுக் கட்சியும், அதனுடன் பின் நாள்களில் இணைந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமாகும். அந்த வழியில் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், யோசப் பரராசசிங்கம், ரவிராஜ், சிவமகாராஜா இன்னும் பலர் இருக்கின்றனர். சம்பந்தன் உட்பட தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதன் ஆதரவாளர்களும் பலமுறை சிறை சென்றுள்ளனர். பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். தமது வீடு வாசல்களை விற்று ஏழையானவர்களும் இருக்கின்றனர். பணத்துக்காக, பதவிக்காக ஆசைப்படாமல் தமிழர் தாயகத்தின் விடுதலைக்காக இன்று வரை போராடிவரும் ஓர் இயக்கம் தமிழ் அரசுக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமாகும். இதனை தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள்.



**தீர்மானங்கள் கிடப்பில்**

19.12.2019 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சி மாநாட்டில் நாங்கள் பலமான அரசியலில் இருக்கிறோம். உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் ஒப்புதலைப் பெற்றிருக்கிறோம். அவை எழுத்து வடிவில் இருப்பதுடன் அவை நிறைவேற்றப்பட வேண்டியவையாகவும் இருக்கின்றன என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறிவைத்தார். அவை 13 ஆவது திருத்தம், ஒஸ்லோ, திம்பு தீர்மானங்கள், 2015 ஐ.நா. சபை தீர்மானங்கள் எல்.எல்.ஆர்.சி கற்றறிந்த பாடங்கள் சம்பந்தமான அறிக்கைகள் என்று பல ஒப்பந்தங்க்ள். 1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது சர்வதேச ஒப்பந்தமாகும். இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இது சர்வதேசத்தின் கடமையாகும்.

**கூட்டமைப்பின் நிலைப்பாடு**

1988ஆம் ஆண்டு 13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் அரசியல் சாசனத்தில் நிறைவேற்றப்பட்டது. காய்க்கிற மரத்துக்குத்தான் கல்வெறி என்பார்கள். மத்தளத்துக்கு இரண்டு பக்கத்தாலும் அடியென்பார்கள். இதுதான் இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலையாகும். தங்களுடைய சுதந்திரத்துக்கு விடுதலைப் புலிகள் தடையாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் சில ஆயுதக் கட்சிகளிடம் மேலோங்கி இருந்தது. ஆனாலும் விடுதலைப் புலிகள் மறைந்த பின்பு தமிழ் அரசுக் கட்சியின் செயற்பாடுகள் இந்தக் குழுக்களுக்கு சாதகமாக இருக்கவில்லை. காரணம் தமிழ் மக்கள் தமிழ் அரசுக் கட்சியில் அளப்பெரிய மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார்கள். தமிழ் மக்களுக்கு ஒரு பலமான அரசியல் கட்டமைப்பு தேவை என்ற நோக்கத்தினால் தமிழ் அரசுக் கட்சியுடன் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், இலங்கை தமிழ் காங்கிரஸ் இவற்றை இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இவை பலமாக இயங்கிவந்தன.

**கட்சிகளுக்கிடையே பிளவுகள்**

இன்று இந்தக் கட்சிகள் தமக்கு கூடுதலான எம்.பிமார் தேவை என்றும் மேலதிகமாக நியாயமான எம்.பிமார் வேண்டுமென்ற நிலைப்பாட்டில் கூட்டமைப்பில் இருந்து விலகிச் சென்றுள்ளன. ஊடக செய்திகளின்படி பிரிந்த கட்சிகள் சில ஒன்று சேர்ந்து கடந்த கால போராட்டங்களில் ஈடுபடாத அரசியல் அனுபவம் குறைந்த விக்னேஸ்வரன் தலைமையில் ஒரு மாற்று அணியை ஸ்தாபித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தோற்கடிப்பதற்கு ஒரு பெரும் செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றன என அறிய வருகின்றது. விடுதலைப் புலிகள் மௌனித்த பின்பு தமிழ் அரசுக் கட்சியையும் மௌனிக்கப் பண்ணினால் தாம் வெற்றி வீரர்களாக வடக்கு கிழக்கு மாகாணத்தை ஆளலாம் என்ற நிலைப்பாடு இவர்களிடம் உண்டு. இந்த விடயத்தை தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். சம்பந்தனின் வேண்டுகோளின்படி தமிழ் கட்சிகள் ஒரு குடையின் கீழ் ஒன்று சேர வேண்டும். வேற்றுமைகளை மறந்து பல வழிகளிலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும், தமிழர் தாயகத்தையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு பெரும் வெற்றியடைய வேண்டும். அந்த வெற்றியைக் கண்டு சர்வதேசமும் ஐ.நா.சபையும் புறையோடிப் போய் இருக்கும் தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்க்க முன்வரவேண்டும் என்பது முக்கியமாகும்.

**பெரும் சவால்**

இந்தப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பெரும் சவால்களையும், சிறைவாசங்களையும் சில வேளைகளில் இறப்புக்களையும் எதிர்கொள்ள வேண்டி வரும். கடந்த 70ஆண்டு சரித்திரம் மக்களுக்கு நன்கு தெரியும். 80 வீதம் உள்ள சிங்கள மக்களும், பௌத்த பிக்குகளும், சிங்கள அரசியல் தலைவர்களும் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைகளைக் கொடுக்க முன்வரமாட்டார்கள் என்பது கடந்த 70 ஆண்டு சரித்திரம் படிப்பித்துள்ளது. நமக்குள்ள ஒரே ஒரு வழி ஐ.நா. சபை மூலமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடுதலாகும். விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு உதவிய சர்வதேச நாடுகள் அந்தப் போர்வையில் ஒன்றரை லட்சம் சாதாரண குடிமக்களையும் வீடுகள் கட்டடங்களைப் போர் விமான குண்டுத் தாக்குதல் மூலம் அழித்துள்ளன. அதே நாடுகள் இன்று தமிழ் மக்களுக்குரிய உரிமைகளையும் புனர் அமைப்புக்களையும் செய்ய வேண்டிய கடமை உடையவர்களாக இருக்கிறார்கள்.

**சந்தர்ப்பத்தை பயன்படுத்துவோம்**

எனவே இப்போதைய சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் சரியாகப் பயன்படுத்தி ஆக வேண்டும். தமிழ் அரசுக் கட்சியின் தலைமையில் வட-கிழக்கு மாகாணங்களில் 20 ஆசனங்களைக் கைப்பற்றி எமது பலத்தை சர்வதேசத்துக்குக் காண்பித்து எமது சுயநிர்ணய உரிமை, சமஷ்டி ஆட்சி என்பவற்றைக் கைப்பற்ற வேண்டும். தந்தை செல்வா தமிழ் அரசுக் கட்சியை 1949ஆம் ஆண்டு ஆரம்பித்தார். அதற்கு federal part என்ற ஆங்கிலப் பதத்தை பிரயோகித்தார். அதன் அர்த்தம் சமஷ்டி ஆட்சியாகும். இந்த சமஷ்டி ஆட்சி என்ற பதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சொந்தமான சொத்தாகும். ஏன் என்றால் தமது உயிர்களைத் தியாகம் செய்த நாடாளுமன்ற பிரதிநிதிகளின் ஆவிகளும் மரித்த தமிழ் பேசும் மக்களின் ஆவிகளும் மரித்த விடுதலைப் புலிகளின் ஆவிகளும் இறுதிக் கட்டத்தில் ஒரு நல்ல சமாதானமான முடிவைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் உண்டு. எமது இந்தப் போராட்டத்தில் முன்பின் பங்குபற்றாதவர்களும் அரசியல் அனுபவம் குறைந்தவர்களையும் பெரும்பான்மை மக்களுடன் சம்பந்தம் உள்ளவர்களையும் எமது கட்சிக்குள் இணைத்து 70 வருட போராட்டத்தை நசுக்குவது நன்மை பயக்காது. இந்தப் போராட்டத்தைத் தலைமை தாங்கி வழி நடத்தக் கூடிய சிறந்த அனுபவம் உள்ள மாவை சேனாதிராசா போன்றவர்கள் எம்முடன் இருக்கிறார்கள். அதையும் விட இன்னும் தலை சிறந்த கல்விமான்கள், சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், சட்ட மேதைகள் எமது நாட்டிலும் புலம் பெயர்ந்தும் இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக சர்வதேசத்தில் புலம்பெயர்ந்துள்ள நமது உறவுகளும் இருக்கிறார்கள். இன்னும் கத்தோலிக்க ஆயர்கள், துறவிகள், சைவக் குருக்களும் வேறு மதத் தலைவர்களும் இருக்கின்றனர். இவர்களின் உதவியையும் ஆலோசனைகளையும் பெற்று எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் வெற்றியை அடைய முடியும். இதற்காக தேர்தல் முடியும் வரையும் சகல வணக்கத் தலங்களிலும் ஆராதனைகளையும் ஜெப வழிபாடுகளையும் நடத்துவது சாலச் சிறந்ததாகும்.

கட்டுரையாளர்:
பீ.ஏ. அந்தோனிமார்க், தலைவர்,
மன்னார் சமாதான அமைப்பு.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சிங்களப் பேரினவாதம்!

சுதந்திர தினத்தன்று தனிச் சிங்களத்தில் தேசியகீதம் இசைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணைந்து அமைத்த கூட்டாட்சியில் சுதந்திர தினத்தின்போது தமிழிலும் தேசிய கீதம் பாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்டவுடன் கொண்டுவரப்பட்ட இந்த நடைமுறைக்கு மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக்களும் அப்போதிருந்தே கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். தற்போது ராஜபக்ஷக்களிடம் மீண்டும் அதிகாரம் சென்ற கையுடன் தமிழ் மொழி தூக்கி எறியப்பட்டு தனிச் சிங்களம் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்த கோத்தாபய, தனிச் சிங்கள வாக்குகளால் மட்டுமே தான் வெற்றி பெற்றிருப்பதாக ஏற்கனவே அறிவித்திருந்தார். சிங்களப் பேரினவாதம் என்ற பிம்பத்தின் தொனிப்பாகவே இவரது அறிவிப்புப் பார்க்கப்பட்டது. இந்த நிலையில் அதை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளது தனிச் சிங்களத்தை மையப்படுத்தி வெளிவந்திருக்கும் இந்த அறிவிப்பு.

இலங்கையைப் பொறுத்தவரையில் தேர்தல் வெற்றியென்பது 'சிங்கள பௌத்த பேரினவாதம்' என்பதைச் சுற்றித்தான் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பது மலையில் ஏற்றிவைத்த தீபம் போன்று வெளிப்படையானது. ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய தரப்பினர் முன்வைத்த பரப்புரைகள், அதற்கு முன்னர் ரணில் அரசுக்கு எதிராக அவர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் இதை நன்றாகவே எடுத்தியம்புகின்றன. இந்த நிலையில் தேசிய கீதத்தைத் தனிச் சிங்களத்தில் பாடுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முடிவில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் கடுமையான எதிர்ப்பொன்று பதிவுசெய்யப்பட்டேயாகவேண்டும்.

மஹிந்தவின் சகாக்களில் ஒருவரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், முன்னாள் தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சரவை வாசுதேவ நாணயக்கார தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பைப் பதிவுசெய்திருக்கின்றார். சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதத்தை இசைப்பது நிச்சயம் தமிழர்களுக்கு மனவருத்தை ஏற்படுத்தும், இரு மொழிகளிலும் தேசியகீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் நான் உள்ளேன். இது தொடர்பில் அரசுடன் பேச்சு நடத்துவேன் என்று தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் அவர். இத்தகைய அடிப்படை மாற்றம் அரசியலுக்கு அப்பாற்பட்டதாக அனைத்து அரசியல்வாதிகளிடத்திலும் ஏற்படல் வேண்டும்.

தனிச் சிங்களத்தை முதன்மைப்படுத்தி தமிழ் மொழியை முற்றாகப் புறக்கணித்து இந்தத் தீர்மானத்தை அமைச்சரை மேற்கொள்கின்றபோது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இருவரும் தமிழ் அமைச்சர்கள் என்ற வகையில் தமது எதிர்ப்பை வலுவாகப் பதிவுசெய்திருக்க வேண்டும். பதவிமோகத்துக்குள் உரிமைகளைத் தொலைத்துவிட்டு பின்னர் மக்கள் மன்றின் முன்னால் நின்றுகொண்டு 'உரிமை... உரிமை...' என்று கூக்குரலிடுவதால் ஒன்றும் நடந்துவிடப் போவதில்லை. மக்கள் மதியுள்ளவர்கள் அமைச்சர்களே!.

# நீதி சாகவில்லை மனம் தளராதீர்!

### சம்பிக்க, ராஜிதவை தேற்றுகிறார் ரணில்



**கொழும்பு, டிசெ.27**

**இலங்கையில் இந்த ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி நள்ளிரவுடன் ஜனநாயக ஆட்சி செத்துவிட்டது. ஆனால் நீதித்துறை இன்னமும் சாகவில்லை. அதனால் ராஜபக்ஷ குடும்ப அரசின் அரசியல் பழிவாங்கல்களால் மனம் தளராமல் கொண்ட கொள்கையில் உறுதியுடன் செயற்படுங்கள்.**

இவ்வாறு 'அரசியல் பழிவாங்கல்' நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கிய முன்னாள் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன ஆகியோரிடம் தெரிவித்துள்ளார் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

வருட இறுதி ஓய்வுக்காக தமிழக ஊட்டி சென்ற ரணில், விபத்து தொடர்பான வழக்கில் கைதுசெய்யப்பட்டு பிணையில் வந்த முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் வெள்ளை வான் கடத்தல் தொடர்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பு வழக்கில் சிக்கியுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோருடன் தொலைபேசி ஊடாகக் கடந்த செவ்வாய்க்கிழமை பேசினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மீண்டும் சர்வாதிகாரப் போக்கில் செல்லும் ராஜபக்ஷக்களின் சர்வாதிகார ஆட்சிக்கு விரைவில் முடிவு கட்டுவோம். இந்த அரசின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு நீதிமன்றம் பதிலடி கொடுக்கும். அதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

ஏனெனில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியில் நீதித்துறையில் நிறைவேற்று அதிகாரத்தின் தலையீடு இருந்தது. அன்று நீதித்துறை மரணித்து இருந்தது என்றுதான் சொல்ல முடியும். ஆனால், தற்போதைய கோத்தாபய தலைமையிலான ஆட்சியில் நீதித்துறை இன்னமும் உயிர்ப்புடன்தான் இருக்கின்றது. அதில் இந்த அரசு இன்னமும் கைவைக்கவில்லை. அதனால்தான் தங்களில் ஒருவருக்கு(சம்பிக்கரணவக்க) பிணை அனுமதி கிடைத்தது.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக நாம் நிலைநாட்டிய ஜனநாயக ஆட்சியை இல்லாதொழித்து ஜனநாயக விரோத ஆட்சிக்கு சர்வாதிகார ஆட்சிக்கு காட்டாட்சிக்குப் புத்துயிர் கொடுத்த ராஜபக்ச அணியினரின் பயணம் நெடுநாள் நீடிக்காது. பொதுத் தேர்தலுடன் அவர்களின் ஆட்டங்கள் அனைத்தும் முடிவுக்கு வரும் - என்றார். (எ-22)

சிப்பாயைத் தாக்கிப் பறித்த

# துப்பாக்கி மீட்பு இருவர் கைது

### துழாவுகின்றது இராணுவ பொலிஸ்

வவுனியா, டிசெ. 27

வவுனியா போகஸ்வெவ பகுதி இராணுவ முகாமில் பணியாற்றும் இராணுவச் சிப்பாயைத் தாக்கி துப்பாக்கி பறிக்கப்பட்ட நிலையில், அந்தத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். விசாரணையில் மற்றொருவரும் கைது செய்யப்பட்டார். இருவரும் அதே முகாமில் பணியாற்றும் சிப்பாய்கள் என்றும், தாக்கப்பட்ட சிப்பாய் அநுராதபுரம் இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

போகஸ்வெவ பகுதியின் 7ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவ முகாமின் முன்னரங்கப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியளவில் தனது பணியை முடித்துக்கொண்டு இராணுவ முகாம் நோக்கிச்சென்றபோது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தி கத்தியால் குத்தியுள்ளனர் என்றும் துப்பாக்கியைப் பறித்துச் சென்றிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இராணுவ பொலிஸார் விசாரணையைத் துரிதப்படுத்தினர். ஒருவரை கெக்கிராவைப் பகுதியில் வைத்து கைதுசெய்திருந்தனர்.

காணாமற் போனதாகத் தெரிவிக்கப்படும் ரி56 ரக துப்பாக்கி அவரிடமிருந்து மீட்கப்பட்டது. சந்தேகநபர் குறித்த இராணுவ முகாமில் சமையல் பகுதியில் பணியாற்றி வருபவர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் அதே இராணுவ முகாமில் பணியாற்றும் மற்றொரு இராணுவச்சிப்பாயும் கைதுசெய்யப்பட்டார். கத்திக்குத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்தவர். அநுராதபுரம் இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார். (து-110)

# வீட்டுக்கு தண்டம்!

கொழும்பு, டிசெ.27


உத்தியோகபூர்வ இல்லங்களை இதுவரை கையளிக்காத முன்னாள் அமைச்சர்களிடம் தண்டம் அறவிடுவதற்குப் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சுத் தீர்மானித்துள்ளன.

முன்னாள் அமைச்சர்கள் சிலரே இதுவரை தங்களின் உத்தியோகபூர்வ இல்லங்களைக் கையளித்துள்ளனர் என்று அமைச்சின் செயலாளர் சிறிபாலஹெட்டியாரச்சி குறிப்பிட்டுள்ளார்.

பெரும்பாலான முன்னாள் அமைச்சர்கள் இதுவரைதங்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை கையளிக்கவில்லை என அவர் கூறியுள்ளார்.

வீடுகளைக்கையளிக்குமாறு கோரி இரண்டாவது தடவையாகவும் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-22)

# துயர்ச் சாவுகள் மலிந்த பூமி...!



இ.ஷயனுதா
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

"தூக்கில் தொங்கி மாணவி சாவு"
" கிணற்றில் வீழ்ந்து இளைஞன் தற்கொலை"
"விஷமருந்தியவர் சடலமாக மீட்பு"
"ரயில் முன் பாய்ந்தவர் உயிரை மாய்த்தார்"

**பெருகிவரும் போதைப்பழக்கத்தால் நிலைகுலையும் இளம் சமுதாயம் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும் நிலையை இழக்கின்றது.**

இப்படிவிதவிதமானமுறைகளில் தங்கள் உயிரை மாய்ப்போர்பற்றிய செய்திகள், ஊடகங்களில் தினமும் ஆகக்குறைந்தது ஒன்றாவது வந்தபடியே தான் உள்ளது. அந்தளவுக்குதற்கொலைகள்மலிந்ததேசமாகி விட்டது. நம் நாடு, அதிலும் தமிழர் தாயகம் மாறிக்கொண்டே வருகின்றது. ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்துவரும் தற்கொலை செய்துகொள்வோரின் எண்ணிக்கை,புள்ளிவிவரம் எல்லாம் நம்மைக் கலங்கடிக்கின்றது. அதிலும் இன்று தற்கொலை செய்து கொள்பவர்களில் அதிகமானோர் இளையோராக அதிலும் 16 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்களாக இருக்கின்றமை இன்னும் கலக்கத்தை அதிகரிக்க வைக்கின்றது. நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பவர்களாகவும் வருங்காலத் தலைவர்களாகவும் மிளிர்பவர்கள் நாளுக்கு நாள் தம் நிலையிழந்து தற்கொலையை நாடுவதனால் எதனைத் தான் பெற்றுக் கொள்கிறார்கள்? மாறாக சில காலத்துக்கு சமூக வலைத்தளங்களில் பேசு பொருளாகவே மட்டும் உள்ளனர். சிறிது காலம் போக அதனை மறந்து இன்னோர் விடயம் வர அதிலே மூழ்கிறது இன்றைய உலகம்.

இந்த இளம் வயதில் தற்கொலை செய்து கொள்ளக் காரணம் என்னவாகவிருக்கும் என எம்மில் பலர் யோசிப்பது யதார்த்தமானது. வயதில் மூத்தவர்கள் கூறுவார்கள் "இளம் வயதில் தடுமாற்றம் அதிகம் வரும்." என்று. அந்த சிறுநேரத் தடுமாற்றத்தை தணிக்க யாரேனும் ஒருவர் அவர்களுடைய மனதைப் புரிந்து கொண்டால் போதுமே என்று தோன்றுகிறது. தற்கொலை செய்து கொள்ளும் இளையோரில் அதிகமாக பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தான் உள்ளடங்குகின்றனர். . இளவயதுப் பருவப் பிரச்சினைகள், பரீட்சைகளில் ஏமாற்றம், போதைப் பழக்கம், குடும்பச்சூழல்,மனஅழுத்தம் போன்ற பல காரணங்கள் இளையோரைத் தற்கொலை நோக்கி உந்தித் தள்ளுகின்றன.

பரீட்சையில் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்காத போது, மாணவர்கள் விரக்தியின் காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் பல சம்பவங்கள் தொடரத் தான் செய்கின்றன.

பெருகிவரும் போதைப்பழக்கத்தால் நிலைகுலையும் இளம் சமுதாயம் எதிர்காலத்தைப்பற்றி சிந்திக்கும் நிலையை இழக்கின்றது. போதைப் பழக்கத்தால் சமூகத்தில் கௌரவத்தினை இழக்கும் போது அது மன உளைச்சலை ஏற்படுத்துகிறது. அதன் விளைவாகத் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

இவர்களுடைய தற்கொலை முடிவுக்கு அவர்களுடைய செயற்பாடுகள் மற்றும் தவறான போக்குகள் மட்டுமே காரணம் எனக்கூற முடியாது. ஒருவரின் வாழும் சூழல் மற்றும் குடும்பப் பின்னணி என்பனவும் அவரவர் மனதின் தன்மையைத் தீர்மானிக்கும். அந்த வகையில் குடும்பங்களில் அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகள், சிக்கல்கள் காரணமாகவும் மனவுளைச்சலைச் சந்திக்கும் நிலை ஏற்படுகின்றது. இதனாலும் அநேகரினுடைய முடிவு தற்கொலையாக மாறிவிடுகின்றது.



## இளம் சமுதாயத்தினை மீட்க என்னதான் வழி?

மனதளவில் தைரியத்தினை இழக்கும் நிலையிலேயே பெரும்பாலானோர் தற்கொலையை நாடுகின்றனர்.

ஆகையால் மனதளவில் தைரியத்தைக் கொடுக்கும் போதே அந்நிலையிலிருந்து அவர்கள் மீள முடியும். இதற்கென பாடசாலைகளில் மாணவர்களுக்கு உளவியல் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.

பாடசாலைகளில் உளவியல் ஆலோசனை வழங்கவென பிரத்தியேகமாகப் பயிற்றப்பட்ட ஆசிரியரை நியமிக்கும் போது மாணவர்களினுடைய சிந்தனை மாற்றம், நடத்தை மாற்றம் என்பனவற்றினை அவதானிப்பதோடு, அதற்கேற்ப அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்க முடியும். அத்தோடு, போதைப் பொருள் பாவனை மூலம் ஏற்படும் விளைவுகளையும் அவற்றினால் ஏற்படும் தாக்கங்களையும் பற்றிய விழிப்புணர்வினையும் பாடசாலைகளில் ஏற்படுத்த வேண்டும்.

இத்தகைய விழிப்புணர்வுச் செயற்பாடுகள் பாடசாலைகளை மட்டும் சார்ந்ததாக இல்லாமல் ஒவ்வொரு வீட்டிலும் முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. வீட்டில் நடைபெறும் ஏராளமான சம்பவங்கள் பிள்ளைகளின் மனதைப் பெரிதும் பாதிக்கின்றன. ஆகையால் பிள்ளைகளின் நலனைக் கருத்திற்கொண்டு வீட்டில் சுமுகமான நிலையைப்பேண வேண்டும். இது மட்டுமல்லாமல் பெற்றோருக்கும், வீட்டில் இருப்பவர்களுக்குமே பிள்ளைகளின் நடத்தைகளில் ஏற்படும் மாற்றம் மற்றும் அவர்களின் மனதிலுள்ள தாக்கம் என்பவை தொடர்பாக அதிகம் புரிந்து கொள்ளக் கூடிய தன்மையுண்டு. அவ்வாறான சந்தர்ப்பத்தில் பிள்ளைகளுக்குப் புத்திமதி சொல்லியும் ஆறுதலாகப் பேசியும் அவர்களைக் குழப்பத்திலிருந்து வெளிக்கொண்டு வர வேண்டியது பெற்றோரின் கடமையாகின்றது.

வெறுமனே வார்த்தைகள் வழியான ஏட்டுச்சுரைக்காய்த்தனமான புத்திமதிகளை மட்டும் அள்ளி வழங்கினால் அது இளையோரிடத்தே உரிய மாற்றத்தை ஏற்படுத்துமா என்பது சந்தேகமே. எனவே தற்கொலையால் வரும் பின்விளைவுகளை அவர்களுக்கு உணரும் வகையில் எடுத்துச் சொல்லலாம். தற்கொலை செய்து கொண்ட ஒருவரின் குடும்பம் அதன் பின்னால் எதிர்கொள்ளும் நெருக்கீடுகளை அவர்களுக்கு நேரடியாக காட்டியும் விளக்கலாம். அதன் மூலம் அவர்கள் தற்கொலை செய்யும் எண்ணத்துக்கு உட்பட்டாலும், அந்த முடிவால் தங்கள் குடும்பமும் அப்படி அவலத்துக்குள் அமிழ்ந்துவிடுமே என்ற உண்மையை உணர்ந்து தற்கொலை எண்ணத்தை உதறும் நிலை ஏற்படும்.

சில வருடங்களுக்கு முன்னர் ஓர் இளம் குடும்பஸ்தர் , கடன் தொல்லையால் தவித்தார். கடன் கொடுத்தோரின் நெருக்குதலில் இருந்து தப்பிக்க , தற்லொலை செய்வதுதான் ஒரேவழி என்று நினைத்து, விஷமருந்தி இறந்தும்போனார். அவர் தான் அந்தத் தொல்லையில் இருந்து தப்பிக்க முடிந்ததே தவிர, அவரின் குடும்பத்தவர்களால் தப்ப முடியவில்லை. இப்போது கடன்கொடுத்தவர்கள் தங்கள் பணத்தைத் திருப்பித் தரச் சொல்லி, அவரின் மனைவிக்கு கடும் அழுத்தம் கொடுத்தார்கள். தரக்குறைவான வார்த்தைகளால் வசைபாடினார்கள். இதையெல்லாம் தாங்க முடியாத மனைவி, ஒரு நாள் ஐஸ்கிறீமில் விஷம் கலந்து பிள்ளைகளுக்கு கொடுத்து விட்டு , தானும் குடித்து இறந்து போனார். குடும்பத் தலைவர் எடுத்த தற்கொலை என்ற தவறான முடிவால், ஒட்டுமொத்தக் குடும்பமுமே சிதைந்து போனது.

இத்தகைய தவறான முன்னுதாரணங்களை செய்திகள் மூலமோ, வேறு வகையிலோ பிள்ளைகளை அறியச் செய்தலின் ஊடாக, தமது முடிவால் வரும் விளைவுகளை இளையோர் ஒருகணமாவது மீள்பரிசீலனை செய்யக் கூடும். வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் ஊசலாடும் அந்தத் தருணத்தில் இத்தகைய மீள் பரிசீலனை தற்கொலை முடிவைத் தவிர்க்கவும் செய்யும்.

இளையோரிடத்தில் உளவரணை அதிகரிப்பதற்கான சகல வழிகளையும் கண்டறிந்து அவற்றை உடனடியாக பிரயோகிக்கவும் வேண்டும். இதன் மூலம் தற்கொலையற்ற ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

## கலை விழாவும் பரிசளிப்பும்

கொடிகாமம்,டிசெ.27

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் கலைவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

முன்பள்ளியின் மூத்த ஆசிரியர் திருமதி ரவீந்திரன் மகேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் நா.கருணாகரன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ பிரதாப், மதிப்புறு விருந்தினர்களாக கைதடி தெற்கு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.அனுராகரன், கைதடி தெற்கு கிராம அலுவலர் செல்வி வி. நியுறிசா, சமுர்த்தி உத்தியோகத்தர் ப.துசீபன், கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலைச் செயலாளர் நி.ஹரன், உவரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி மு.குகனேஸ்வரி சாய்ராம், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.ஜானகி ஆகியோர் கலந்துசிறப்பிக்கவுள்ளனர். (ஐ-159)

## மருத்துவ முகாம்

சாவகச்சேரி,டிசெ.27

தென்மராட்சி பிரதேச சமூக சேவைகள் அலகினரின் ஏற்பாட்டில் வரணி இடைக்குறிச்சிப் பிரிவு முதியவர்களுக்கான தொற்றாநோய் தொடர்பான இலவச மருத்துவ முகாம் நேற்று வரணி இடைக்குறிச்சி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய முதியவர்களுக்கான செயலக வழிகாட்டலில் பிரதேச சமூக சேவைகள் அலகினர், சாவகச்சேரி மருத்துவமனையினர், சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் ஆகியோர் இணைந்து இந்த மருத்தவ முகாமை நடத்தினர். (ஐ-9)

## சிவப்பான வெள்ளையரிசி: ‘சாய’வர்த்தகர் சிக்கினார்

வவுனியா, டிசெ. 27

வவுனியா வர்த்தக நிலையங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் நடத்திய விசேட சோதனையில் சாயம் கலந்து விற்பனை செய்யப்பட்ட அரிசியை மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.



வவுனியா மன்னார் வீதியில் அமைந்திருந்த பல வர்த்தக நிலையங்களில் நேற்றுமுன்தினம் சோதனை நடத்தப்பட்டது. வேப்பங்குளம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் வெள்ளை அரிசிக்கு நிறப்பூச்சுப் பூசப்பட்டு விற்பனை செய்யப்பட்டதாகத் தெரிவித்த பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர், அந்த அரிசி மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக மூன்று பொதிகளில் பெறப்பட்டு சீல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர்.

அத்துடன், வவுனியா நகர்ப் பகுதியில் கடந்த நாள்களாக மேற்கொள்ளப்பட்ட சோதனையில் வர்த்தமானியில் நாடு மற்றும் சம்பா ரக அரிசிகளுக்கு அரசு அறிவித்த விலையான 98 ரூபாவுக்கும் கூடிய விலைக்கு குறித்த அரிசிகளை விற்பனை செய்தமை, காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, அதிக விலையை காட்சிப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக ளுக்காக 9 வர்த்தகரும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டடர். பின்னர் விடுவிக்கப்பட்டனர். (து-ரி4)



## மருத்துவமனைக்கு கட்டில் அன்பளிப்பு

பருத்தித்துறை,டிசெ.27

பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனைக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தி சிகிச்சை பெறுவதற்கு பொருத்தமான மரத்திலான கட்டில் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

மருத்துவமனையில் இயங்கும் தசைநார் எலும்பு சிகிச்சைப் பிரிவுக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலரால் சிகிச்சை உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

கரவெட்டியைச் சேர்ந்த ஆசிரியை எஸ்.நவரஞ்சினி நோயாளர்களின் நலன்கருதி மரத்திலான கட்டிலை அண்மையில் அன்பளிப்புச் செய்துள்ளார். (ஐ-159)



# விவசாய நிலங்களில் தொழிற்சாலைகளா?

### கேள்வியெழுப்புகின்றனர் விவசாயிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 27

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாய நடவடிக்கைக்கான நிலங்கள் கட்டுமானங்களுக்காக நிரவப்படும் நிலை நீடிக்கின்றது. இதைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.



யாழ்ப்பாணத்தில் தற்போது 62 ஆயிரத்து 269 விவசாயக் குடும்பங்கள் வசிக்கின்றன. அவர்களில் விவசாயத் தொழிலாளிகளாக 30 ஆயிரத்து 408 பேர் உள்ளனர். இவர்கள் விவசாயம் செய்ய குடாநாட்டில் மேட்டு நிலமாக 8 ஆயிரந்து 499 ஹெக்ரேயரும், வயல் நிலமாக 13 ஆயிரத்து 102 ஹெக்ரேயரும் உள்ளன. இவர்களின் விவசாய நடவடிக்கைக்காக 15 விவசாய சேவை நிலையங்களும் 262 கமக்கார அமைப்புக்களும் உள்ளன. 992 குளங்களும், கிணற்று நீர்ப்பாசனத்துக்காக 17 ஆயிரத்து 383 விவசாயக் கிணறுகளும் உள்ளன.

விவசாயக் காணிகள் பல கட்டட இடிபாடுகள் மற்றும் கழிவுகள் கொண்டு நிரபப்பட்டு கட்டுமான உபயோகத்துக்காக மாற்றப்படுகின்றன.

வாழ்வதற்கான வீடு அமைப்பதைப் பரிசீலிக்கலாம். ஆனால், பெரும் தொழிற்சாலைகள் மற்றும் இதர பயன்பாட்டு அலுவலகக் கட்டுமானங்கள் அமைப்பதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. இதனால் வயல் நிலங்கள் மற்றும் தோட்டக் காணிகள் அரிதாகும் நிலைமையே காணப்படுகின்றது.

எனவே இது தொடர்பில் உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை முன்வைக்கின்றனர். (து-105)

## சான்றிதழ்கள் தாமதம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

2009 ஆண்டு முதல் ஆசிரிய கலாசாலைகளில் ஈராண்டு பயிற்சியை நிறைவு செய்து, தற்போது பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் பரீட்சைச் சான்றிதழ்கள் பரீட்சைத் திணைக்களத்தால் இதுவரையில் அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனால் ஆசிரியர்களின் பதவியுயர்வு, சம்பள உயர்வு என்பன தடைப்பட்டுள்ளன. அதனால் ஆசிரியர்கள் மிகுந்த மனவேதனையில் உள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு சான்றிதழ்களை விரைவாக அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

## ‘கஞ்சா’ சூத்திரதாரியை தேடும் பொலிஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 27

இலங்கைக்குக் கடத்தவிருந்த 85 கிலோகிராம் கஞ்சா இந்தியாவில் கைப்பற்றப்பட்டு, கடத்தலில் ஈடுபட்டனரென்று இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், முக்கிய சந்தேகநபரை தமிழகப் பொலிஸின் தனிப்படை தேடி வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் கடல் வழியாக இலங்கைக்கு கஞ்சா கடத்த முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் சொகுசு காருடன் ராஜா, ரமேஷ் ஆகிய இருவர் கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர். விசாரணையில் சாக்குப் பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 39 பொதிகளில் சுமார் 81 கிலோகிராம் கஞ்சாவையும் சொகுசுக் காரையும் மீட்டிருந்தனர். இருவரும் ராமேஸ்வரம் நகர பொலிஸ் நிலையத் தில் விசா ரணையிலுள்ளனர். முக்கிய சந்தேகநபரான ராமேஸ்வரத்தைச் சேர்ந்த செல்வகுமாரைப் பிடிக்கவே பொலிஸார் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். மீட்கப்பட்ட கஞ்சாவின் சர்வதேச மதிப்பு ஒரு கோடியே 10 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (து-105)

# 3 வருடங்களில் மட்டும் 20,984 வெடிபொருள்

## கிளி.-முல்லையில் அகற்றப்பட்டன



யாழ்ப்பாணம், டிசெ. 27
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டானின் அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளியின் முகமாலையிலுமாக ஒன்பது இலட்சத்து 50 ஆயிரத்து 511 சதுரமீற்றர் பரப்பளவிலிருந்து 20 ஆயிரத்து 984 அபாயகரமான வெடிப்பொருள்கள் அகற்றப்பட்டுள்ளன என்று 'ஸார்ப்' நிறுவன நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தொடந்தும் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் பளை மற்றும் கிளாலி பகுதிகளில் நடைபெறும் எனவும் தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்தில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் 'ஸார்ப்' மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனம் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2019 டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இவற்றை அகற்றியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து)

# சிறுவர் உரிமைகள் மாநாடு



யாழ்ப்பாணம்,டிசெ.27
சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் 30 ஆவது வருட நிறைவை முன்னிட்டு சிறுவர் உரிமைகள் மாநாடு கடந்த திங்கட்கிழமை ரில்கோ நகர விடுதியில் காலை 9 மணியளவில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வானது சி.சி.எச் ( Center for children's happiness (Get) Ltd )நிறுவனத்தின் ஏற்பாட்டில்,
குளோபல் மார்ச் இன் அனுசரணையுடன் நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடக்கு மாகாண மற்றும் யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு ஆகியவற்றுடன் இணைந்து நடைபெற்றது.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான அங்கஜன் இராமநாதன், சிறுவர் நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வடக்கு மாகாண ஆணையாளர் ரி.விஸ்பரூபன், சிறுவர் பாதுகாப்பு வைத்தியர் கோபித், சி.சி.எச் நிறுவனத்தின் பணிப்பாளர் ரி.ரி.மயூரன், சட்டவல்லுநர் தற்பரன், மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு இணைப்பாளர் மனோகரன், திணைக்களப் பணிப்பாளர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.
இந்த மாநாட்டின் முக்கிய அம்சமாக சிறுவர் பாதுகாப்பு, உடல்.ஆரோக்கியம் அவர்களின் உள சமூக ஆரோக்கியம், சிறுவர்களுக்கான நட்புறவு சூழல், சிறுவர்களுக்கான ஓய்வும் பொழுதுபோக்கும், சிறுவர்களின் கல்வி உரிமை, முன் பிள்ளைப்பருவ விருத்தி, விசேட தேவை உடைய சிறுவர்களுக்கான வாய்ப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (ஐ)

# சிங்களத்தில் தேசிய கீதம் என்னும் முடிவால் மகிழ்ச்சி

## வவு. பிரஜைகள் குழு கூறுகின்றது

வவுனியா, டிசெ.27
சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதத்தைச் சிங்கள மொழியில் மட்டும் இசைக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதாக அறியக் கிடைக்கின்றது. இந்த முடிவுக்கு அமோக வரவேற்பளிக்கின்றோம். இந்த அறிவிப்பால் இலங்கை பல்லின கலாசாரங்களையும் கொண்டிருக்கும் மக்கள் வசிக்கும் நாடு அல்ல என்பது புலப்படுகின்றது.
இவ்வாறு வவுனியா மாவட்டப் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.
அந்தக் குழு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இலங்கைக்குள் உலக சமூகங்களால் அங்கீகரிக்கப்புட்ட மூவகைத் தேசிய இனங்கள் உண்டு. தமிழ்த் தேசிய இனத்துக்கு என்றும் சங்க கால இலக்கியங்கள் உண்டு. போர்க்காலப் பாடல்கள் உண்டு. இதிகாசங்கள் உண்டு. காப்பியக் கதைகள் உண்டு. எங்கள் வாழ்வை, எங்கள் வலிகளை, எங்கள் வரலாற்றை, எங்கள் மொழியில் நாமே பதிவாக்குவோம்.
சிங்கள தேசிய இனக் குடிமக்கள் தங்களுக்கென்றே உரித்தான தேசிய கீதத்தை சிங்கள மொழியில் பாடித்தான் ஆக வேண்டும். அதில் வேற்றுத் தேசிய இனக் குடிமக்கள் அதிகாரம் செலுத்தவோ, அதை நிராகரிக்கவோ முடியாது.
இப்படியான சம்பவங்கள் மூலம் இலங்கை பல்லினகலாசாரங்களையும் கொண்டிருக்கும் மக்கள் வசிக்கும் நாடு அல்ல, அதற்கு ஜனநாயக பண்புகள் என்று எவையும் கிடையாது. அது மனித உரிமைகளுக்கு கிஞ்சித்தும் மதிப்பளிக்காத, பௌத்த பேரினவாத சிந்தனைக்குள் ஊறி, உப்பி உருப்பெருத்து நாறிக் கிடக்கும், இனத்துவேசங்களால் நிரம்பி வழியும், பக்கச் சார்பை அதிகம் அதிகம் வெளிப்படுத்தும் ஒரு காட்டாட்சியை கொண்டிருக்கும் நாடு என்பது புலப்படுகின்றது.
நாங்கள் ஒற்றையாட்சிக்குள் இவர்களோடு சேர்ந்து வாழ முடியாது. தமிழ்த் தேசமாக சுயநிர்ணய உரிமையோடு பிரிந்து செல்வது தான் தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தர பாதுகாப்பையும், இனப்பிரச்சினைக்கு உயரிய தீர்வையும் தரும் என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது-என்றுள்ளது. (எ)

# மன்னாரில் முப்படையினர் பாதுகாப்பு

மன்னார்,டிசெ.27
மன்னார் நகரில் நத்தார் பண்டிகை முன்னிட்டு முப்படையினரால் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மன்னார் செபஸ்தியார் ஆலயம், பள்ளிமுனை, தாழ்வுபாடு போன்ற பெரிய ஆலயங்களில் இராணுவத்தினர், பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் இருந்தனர்.
பிரதேச ரீதியாக வாகனங்களில் விஷேட அதிரடிப்படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.
சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச்சாவடிகளில் வாகனங்கள் சோதனையின் பின்னர் உட்செல்ல அனுமதிக்கப்பட்டன. (க-213)

# திருவள்ளுவர் மகா சபையின் மாநாடு

மாகியப்பிட்டி,டிசெ,27
அகில இலங்கைத் திருவள்ளுவர் மகா சபையின் 70 ஆவது வருடாந்த மாநாடு, கல்விசார் ஊக்குவிப்பு வழங்கல், பொதுக் கூட்டம் மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு என்பன இடம்பெறவுள்ளன.
மாகியப்பிட்டி சூரியோதய சனசமூக நிலையத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைகாலை 9 மணிக்கு மாநாடு நடைபெறும்.
அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபைத் தலைவர் நாகன் கிருஷ்ணபிள்ளையின் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக மல்லாகம் மக்கள் வங்கி முகாமையாளர் சி.சிவகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

# வடமராட்சி கிழக்கு வீதிகள் சீரமைப்பு



மருதங்கேணி,டிசெ.27
வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் உள்ள வீதிகளின் சீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.
குடாரப்பிலிருந்து கட்டைக்காடு வரையான 18 கிலோ மீற்றர் வீதியும், நாகர்கோவில் சந்தியிலிருந்து கடற்கரை வரையான வீதி, கட்டைக்காட்டில் இரண்டு சிறிய வீதிகள் உட்பட மொத்தமாக வடமராட்சி கிழக்கின் 24 கிலோ மீற்றர் வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன.
இந்த வீதிகளின் சீரமைப்பின் போது ஏற்படும் பின்னடைவுகள் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதற்க்காக ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் வீதம், வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதிநிதிகள் உள்ளடங்கலாக நிர்வாக குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.
மாமுனையிலிருந்து கட்டைக்ாடு வரையான வீதியானது பல தசாப்தங்களாக சீரமைக்கப்படாது காணப்பட்ட நிலையில் தற்போது சீரமைக்கப்படுவது வரப்பிரசாதம் என்று பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.ச.அரியகுமார், மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை 12 வட்டாரமான முள்ளியான் வட்டார உறுப்பினர் செபஸ்தியன் ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.
இந்த வீதிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படவுள்ளன.
இக் கலந்துரையாடலுக்கு வடமராட்சி கிழக்கு பிரதி பிரதேச செயலர் தயானந்தன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.ச.அரியகுமார்.பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் செபஸ்ரியன், வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர்கள், கிராம அலுவலர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-160)

# யாழில் மணல் அகழ்வதற்கு யாருக்கும் அனுமதியில்லை

## மாவட்டச் செயலர் தெளிவுபடுத்தினார்



**யாழ்ப்பாணம், டிசெ. 27**

**யாழ்ப்பாண மாவட்டத்தின் எந்தவொரு பகுதியிலும் மணல் அகழ்வுக்கான அனுமதியைத் தாங்கள் வழங்கவில்லை என்று புவிச்சரிதவியல் திணைக்களம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அறிவித்துள்ளது.**

எனவே வீதியில் இனி எவர் மணல் கொண்டுசென்றாலும் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் 3 பகுதிகளும் கடலால் சூழப்பட்ட நிலையில், கடற்கரையோரங்களில் மணல் அகழ்ந்து செல்கின்றனர். இதனைத் தடுப்பது தொடர்பில் இரு நாள்கள் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடலும் இடம்பெற்றது.

அதன்போது மாவட்டச் செயலர், மாவட்டத்தில் தற்போது மணல் அகழ்வதற்கு அனுமதிக்கப்பட்ட இடம் தொடர்பில் புவிச்சரிதவியல் திணைக்களத்திடம் கோரியுள்ளார்.

அதற்குப் பதிலளித்த திணைக்களத்தினர், "யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது எந்தவொரு இடத்திலும் மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. முன்னர் வழங்கிய அனுமதிகள் அனைத்தும் காலாவதியாகிவிட்டன" என்று பதிலளித்துள்ளனர்.

அதன்படி, மணல் அகழ்வுக்கு அனுமதி தற்போது யாருக்கும் வழங்கப்படவில்லை. வீதிகளில் மணல் கொண்டுசெல்வதற்கு தடை இல்லை. ஆனால் மணலை வீதிகளில் கொண்டுசெல்வதாக இருந்தால், மணல் அகழ்வதற்கு அனுமதி எதுவமில்லாத நிலையில், வீதியிலும் கொண்டுசெலமுடியாதல்லவா. எனவே வீதியில் மணல் கொண்டு சென்றால் அதைக் கொண்டு செல்பவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார். (த-105)

கிளிநொச்சி மாவட்டத்தில்

# மணல் அகழ்வதற்கு அனுமதி நிறுத்தம்

## ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் அகழ்வதற்கான சகல அனுமதிப் பத்திரங்களும் மறு அறிவித்தல் வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தலை கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்குமாறு மாவட்டச் செயலகத்திடம் தெரிவித்துள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த மாவட்டங்களின் பல இடங்களிலும் சட்டவிரோத மணல் அகழ்வு மிக மோசமாக இடம்பெற்று வருகிறது. இதைக் கட்டுப்படுத்தும் வகையில் கணியவளத் திணைக்களத்தின் தீர்மானத்தை உடனடியாக சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினர்களுக்கும் அனுப்பி வைக்குமாறு நான் மாவட்டச் செயலகத்தைக் கோரியுள்ளேன்.

இதனையடுத்து கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மணல் அகழ்வதற்கான அனுமதி பத்திரங்களை இரத்துச் செய்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் இந்த அறிவித்தலின் பிரதி அனுப்பப்பட்டுள்ளது.

இது பற்றி கனிய வளத் தினணைக்களத்திடம் கேட்டபோது, "மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சுழல் பாதிப்புக்களை அடுத்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் தீர்மானங்களுக்கு அமைய மறுஅறிவித்தல் வரை மணல் அகழ்வதற்கான அனுமதி இரத்துச் செய்யப்பட்டுள்ளது. எனவே மாவட்டத்தின் எந்த இடத்திலும் தற்போது மணல் அகழ்வை மேற்கொள்ள முடியாது. எவரேனும் மணல் அகழ்வில் ஈடுபட்டால் அது சட்ட விரோதம்." என்று தெரிவித்துள்ளனர். (த-35)



# வடக்கு, கிழக்கில் சிறியளவில் மழை



கொழும்பு, டிசெ.27

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிறிதளவில் மழை பெய்யும். சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மாவட்டத்திலும் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று பொதுமக்களுக்கு அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

# நத்தார் தினத்தில் மது விற்றவர் கைது

வவுனியா, டிசெ. 27

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொரவப்பொத்தான வீதி மதுக் கடையில் நத்தார் பண்டிகையான நேற்று முன்தினம் மதுபானம் விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 180 மில்லி லீற்றர் கொள்ளளவுடைய 38 மதுப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. 43வயதுடைய சந்தேகநபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

# ஊடக சந்திப்புக்காக கைது செய்ய முடியாது

## அஜித் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.27

ஊடக சந்திப்பு ஒன்றில் கூறப்பட்ட விடயங்களுக்காக ஒருவரைக் கைது செய்யும் முறை எதுவும் குற்றவியல் சட்டத்தில் இல்லை என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொய்யான தகவல் ஒன்றைச் செய்தியாளர் சந்திப்பில் கூறினால் கூட ஒருவரைக் கைது செய்யச் சட்டத்தில் இடமில்லை.

பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு வழங்கப்பட்ட பிணையால் அரசுக்கு ஏற்பட்ட பின்னடைவை மாற்றும் வகையிலேயே தற்போது ராஜித சேனாரத்னவைக் கைது செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது- என்றார். (எ)

# சஜித்துக்கும், ரணிலுக்கும் அடுத்தடுத்துக் கதிரைகள்

கொழும்பு, டிசெ.27

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ஆசனத்துக்கு அடுத்ததாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திரா பெர்ணாந்து தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் எதிர்வரும் 3ஆம் திகதி கூடும்போது பதவி நிலை உறுப்பினர்களுக்கு ஆசனங்கள் ஒதுக்குவது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடாளுமன்றம் எதிர்வரும் 3ஆம் திகதி கூட இருக்கின்றது. அதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்குச் சபையின் முன் வரிசையில் எட்டாவது ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அதற்கு அடுத்தபடியாக இருக்கும் முன்வரிசையில் 7ஆவது ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சபையில் எதிர்க்கட்சி முன் வரிசையில் 8ஆவது ஆசனம் கடந்த காலம் முழுவதும் தொடர்ச்சியாக எதிர்க்கட்சித் தலைவருக்கே ஒதுக்கப்பட்டு வந்திருக்கின்றது. நாடாளுமன்றத்தில் மூத்த நிலைமையைக் கருத்தில் கொண்டு அதற்கு முன்னுரிமை வழங்கியே ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் முன் வரிசையில் எட்டாவது ஆசனம் ஜனாதிபதிக்கும், 7ஆவது ஆசனம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்ற சபை முதல்வர் மற்றும் ஆளும் கட்சியின் முன்வரிசையின் ஆறாவது ஆசனம் சபை முதல்வருக்கும் 5 ஆவது ஆசனம் ஆளும் கட்சிப் பிரதம கொறடாவுக்கும் ஒதுக்கப்படவுள்ளன-என்றார். (எ)

# முன்னேற இடமுண்டு

## பவ்ரல் கூறுகின்றது



கொழும்பு, டிசெ.27

இலங்கை அரசியல் வரலாற்றில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலே நீதியான முறையிலும், எவ்வித படுகொலைச் சம்பவங்களும் நடைபெறாமலும் முடிந்துள்ளது. ஒரு சில குறைப்பாடுகள் காணப்படுகின்றன. அடையாளப்படுத்தப்பட்ட குறைப்பாடுகளை தேர்தல் ஆணைக்குழு பொதுத்தேர்தலில் திருத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பவ்ரல் அமைப்பின் தலைமை காரியாலயத்தில் நேற்று நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பாரதூரமான பிரச்சினைகள் ஏதுவும் பதிவாகவில்லை. இருப்பினும் ஒரு சில குறைப்பாடுகளும் காணப்பட்டன. ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோற்றம் பெற்ற பிரச்சினைகள் பொதுத்தேர்தலிலும் இடம் பெறுவதற்கு இடமளிக்கக் கூடாது.

ஜனாதிபதித் தேர்தலில் பக்கச்சார்பான முறையில் செயற்பட்டதைப் போன்றல்லாமல் அனைத்து வேட்பாளருக்கும் சமமான நேரத்தை ஊடகங்கள் வழங்க வேண்டும். ஜனாதிபதி தேர்தலின் போது தேர்தல் பரப்புரைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த வேளையில் சமூக வலைத்தளங்களில் ஊடாக ஒரு தரப்பினருக்கு ஆதரவாக இடம் பெற்ற தேர்தல் பரப்புரைகள் தேர்தல் சட்டங்களுக்கு முற்றிலும் விரோதமானது.

இடம் பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் விசேட தேவையுடையோரில் 14 சதவீதமானோர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மதத் தலங்களில் வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படுவதை தவிர்க்க வேண்டும். நாடு தழுவிய ரீதியில் உள்ள வாக்களிப்பு மத்திய நிலையங்கள் பொதுத்தேர்தலுக்கு முன்னர் மீண்டும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் தனியார் ஊழியர்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் தூதரங்களின் ஊடாக வாக்களிப்பதற்கான நடவடிக்கைகளை பொதுத்தேர்தலில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமாகும்-என்றார். (எ)

## நினைவு தினமும் பூங்கா திறப்பும்

கொடிகாமம், டிசெ.27

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய நிறுவுநர் பொன் நாகமணியின் 23 ஆவது ஆண்டு நினைவு தினமும், சிறுவர் பூங்கா திறப்பும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கல்விக் கழக அரங்கில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சனசமூக நிலையத் தலைவர் சி.டினேசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் ப.செல்வம், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வே.தபேந்திரன் கௌரவ விருந்தினர்களாக தென்மட்டுவில் கிராம உத்தியோகத்தர் திருமதி அ.ஜெயப்பிரியா, மட்டுவில் நுணாவில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ந.சுபோதினி, தென்மராட்சி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.கயுந்தன், விசேட விருந்தினர் கனடாக் கிளையின் கல்விக்கழக இணைப்பாளர் பொன் கந்தையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)

## நாமலுக்கு மறியல்

கொழும்பு, டிசெ.27

ஊழலுக்கு எதிரான படையணியின் நடவடிக்கைப் பணிப்பாளர் என அறியப்படும் அத்தநாயக்க முதியன்சலாகே நாமல் குமாரவுக்கான மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து வடமேல் மாகாணத்தில், குருநாகல், சிலாபம், பிங்கிரிய, தும்மலசூரிய, நாத்தாண்டிய உள்ளிட்ட பகுதிகளில் முஸ்லிம்களை இலக்கு வைத்த தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணையின் அடிப்படையிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுத் தற்போதுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று மீண்டும் அவரை ஹெட்டிபொல நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போது நீதிவான் அவரை எதிர்வரும் ஜனவரி 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (எ)

## பெண் ஊழியர் மீது தாக்குதல்:

# கடைக்கு 'ஆப்பு'?

வவுனியா, டிசெ. 27

இரண்டு பிள்ளைகளின் தாயாரான பெண் ஊழியரைத் தாக்கிய இளைஞர் தண்டிக்கப்படவேண்டும். அது மட்டுமன்றி, நகரசபைக்குச் சொந்தமான காணியில் அமைந்துள்ள குறித்த கடையின் ஒப்பந்தத்தை சபை மீளப் பெறவேண்டும் என்று வவுனியா நகரசபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம் தெரிவித்தார்.

நகரசபைக்கு சொந்தமான காணியில் அமைந்துள்ள அந்தக் கடையில் பணிபுரியும் இரண்டு பிள்ளைகளின் தாய் இளைஞரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். அவர் முன்னரும் அப்படி நடந்துகொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது அடிப்படை மனித உரிமை மீறல். குறித்த வட்டாரத்தின் நகர சபை உறுப்பினர் என்ற வகையில் இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன். குறித்த குற்றவாளி சட்டத்துக்குட்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும். என்று தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (த-110)

# வஞ்சகம் இருப்பின் எப்படி வருவார்?

## ஜெஸ்மன்ராஜ் அடிகள் மறையுரை



தலைமன்னார், டிசெ. 27

போட்டி, பொறாமை, வஞ்சகம் இவற்றையெல்லாம் நாம் எம்மிடையே வைத்துக்கொண்டு ஆண்டவர் வருவார் வருவார் என்றால் எப்படி வருவார்? ஒன்றை இழப்பதன் மூலம்தான் இன்னொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

என்று மன்னார் மறை மாவட்ட உதவிப் பங்குத் தந்தை அருட்பணி ஜெஸ்மன்ராஜ் அடிகள் தமது மறையுரையில் தெரிவித்தார்.

சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்களாகவும் ஒதுக்கப்பட்டவர்களாகவும் இருந்தாலும் ஆண்டவரை மட்டுமே நம்பியிருக்கின்றபொழுது ஆண்டவரின் தரிசனம் கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

கிறிஸ்து பிறப்பு விழாவை யொட்டி மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் பேராலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற கூட்டுத்திருப்பலியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒன்றை இழப்பதன் மூலம் தான் இன்னொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது கிறிஸ்தவர்களின் நம்பிக்கை. இறைவனின் தரிசனத்தை, ஆசீர்வாதத்தைப் பெற நாம் எதை இழக்கின்றோம் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இயேசுவின் காலத்தில் தலைமைக் குருக்கள் இருந்தார்கள். சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்தார்கள். மத ஆசாரங்களைச் செய்தார்கள். இவர்களைப் போன்று நாமும் ஆலயம் வருகின்றோம். நாளாந்த திருப்பலிகளில் பங்குபற்றுகின்றோம். ஆனால் நாம் மதச்சடங்குகளோடு மட்டும் இருந்து விடுகின்றோம். இயேசு கொண்டு வந்த தாழ்ந்த உள்ளம் எம்மிடையே உள்ளதா என்பதையும் சிந்திக்க வேண்டும்-என்றார். (த-60)

# ஜனாதிபதியின் பெயரை பயன்படுத்துவோர் கவனம்

கொழும்பு, டிசெ.27



ஜனாதிபதியின் பெயரைப் பயன்படுத்தி மக்களை ஏமாற்றுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் ஆலோசகர் என்று கூறிக் கொண்டு மொரட்டுவவில் உள்ள பிரபல பாடசாலையின் அதிபருக்கு அழுத்தம் கொடுத்த நபர் ஒருவர் பற்றி அறிய முடிகின்றது.

அவர் தொடர்பாகக் கொழும்புக் குற்றத்தடுப்புப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக அண்மையில் சில ஊடகங்களிலும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஜனாதிபதியுடன் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது என்று கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றி வருவோர் தொடர்பாகத் தகவல் தெரிந்தால் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டும் என்று உள்ளது. (எ)

## சமுர்த்திக் கட்டுபாட்டு சபை நேற்று தெரிவு

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி வங்கிகளின் அடுத்த ஆண்டுக்கான கட்டுப்பாட்டுச் சபைகளின் தெரிவுகள் நேற்று அந்தந்த சமுர்த்தி வங்கிகளில் இடம்பெற்றன.

கொடிகாமம், வரணி, கைதடி, சாவகச்சேரி ஆகிய சமுர்த்தி வங்கிகளின் கட்டுப்பாட்டுச் சபையினரால் பிரதேச மகாசங்க கட்டுப்பாட்டுச் சபைக்கான தெரிவு எதிர்வரும் திங்கட்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று பிரதேச சமுர்த்திஅலகின் தலைமைக் காரியாலயமுகாமையாளர் இ.அன்ரனி தெரிவித்தார். (ஐ-9)

# சுனாமியில் அழிவுண்டு போகாமல் மன்னாரைக் காத்த மணல் திட்டுகள்

## கடற்றொழில் பரிசோதகர் தகவல்

மன்னார், டிசெ.27

மன்னார் மாவட்டம் சுனாமியின் தாக்கத்தில் இருந்து தப்புவதற்கு, அங்கு காணப்படும் மணல் திட்டுக்களே காரணம் என்று மன்னார் மாவட்டக் கடற்றொழில் பரிசோதகர் பவநிதி தெரிவித்தார்.



கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலையால் இலங்கையின் கரையோர மாவட்டங்கள் அனைத்தும் பலத்த பாதிப்புக்கு உள்ளாகின. எனினும் மன்னார் மாவட்டத்தில் பாதிப்புகள் ஏற்படவில்லை.

சுனாமி தொடர்பாக அன்று மீனவர்களாகவும், தற்போது மீனவர் சங்கங்களின் தலைவர்களாகவும் உள்ளவர்களிடம் கருத்துக் கேட்ட போது அவர்கள் தெரிவித்ததாவது:

"அன்றையதினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் எவரும் தொழிலுக்குச் செல்லவில்லை. அன்று பேரழிவு இடம்பெற்றதை அறிந்தோம். எமது கடல்பகுதிகளில் எந்தவொரு சலனமும் ஏற்படவில்லை. ஆனால் சுனாமியின் முதல் இரண்டு நாள்கள் அமோகமாக மீன்பாடு எமக்கு கிடைத்திருந்தது. கடலின் அடியில் ஏதோ ஓர் ஆபத்தை உணரும் போது அவை பாதுகாப்பான பிரதேசம் தேடிச் செல்லும் என்று சுனாமியின் பின் தெரிந்து கொண்டோம்" என்று முத்தரிப்புத் துறை மீனவர் சங்கத்தலைவர் ஜஸ்டின் தெரிவித்தார்.

"நாட்டின் பல பகுதிகளிலும் சுனாமியால் உயிர்கள் காவு கொள்ளப்பட்டமையைக் கேள்விப்பட்டவுடன் பாதுகாப்புக் கருதி கடற்கரையில் உள்ள மக்களை வெள்ளாங்குளம் பகுதிக்குத் தற்காலிகமாக இடம் பெயரச் செய்திருந்தோம்" என்று மாந்தை மேற்கு தேவன் பிட்டி மீனவர் சங்கத்தலைவர் தெரிவித்தார்.

" சுனாமி வந்துள்ளதைக் கேள்விப்பட்ட பின் வேடிக்கை பார்ப்பதற்காக மன்னார் தாழ்வுபாடு கடற்கரைக்குச் சென்றிருந்தோம். வழமை போலவே படகுகள் அமைதியாக இருந்தன. எமது கடற்பகுதியை ஆழிப்பேரலை தாக்குவது கடினம். ஏன் எனில் கரையில் இருந்து ஐந்து கிலோ மீற்றருக்கு அப்பால் சல்லி எனப்படும் திட்டுக்கள் உண்டு. அலைகள் பெரிதாக வந்தாலும் அதன் திட்டுக்களில் மோதி வீரியம் இழந்த பின் தான் கரைக்கு வரும்" என்று மன்னார் தாழ்வுபாடு மீனவர் சங்கத்தலைவர் தெரிவித்தார்.

"மீனவர்களின் கருத்துக்களில் உண்மையுண்டு. மன்னார் இலங்கையின் கழுத்துப்பகுதியாக இருப்பது சுனாமியால் தாக்க முடியாமைக்கான முக்கிய காரணம். சுமாத்திரா தீவுக்கு எதிரே உள்ள முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற கடற்பகுதிகள் பாதிக்கப்பட்டிருந்தன. அத்துடன் மன்னாரில் திகிடைப்பகுதிகளில் மணல் திட்டுக்கள் அதிகமாக காணப்படுவதும் இதற்கான காரணமாகும். சுனாமி அழிவை மன்னார் கடல் முன் கூட்டியே அறிந்திருக்க வாய்ப்பு உள்ளது. அதிலும் 2004 சுனாமியின் தாக்கத்திலிருந்து மன்னார் தப்புவதற்கு மன்னாரில் காணப்படும் மணல் திட்டுக்கள் முக்கிய காரணம்" என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் பவநிதி தெரிவித்தார். (க-213)





# 250 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 250 பேருக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

நெல்லியடி - மாலைசந்தை மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் உதவும் அமைப்பான 'மைக்கலின் நேசக்கரம்' ஆரம்பிக்கப்பட்டு முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை வாழ்வாதார உதவியாக சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் செ. ரஜிவர்மனின் குடும்பத்துக்கு வீடு திருத்துவதற்கு 50 ஆயிரம் ரூபாவும், கிளிநொச்சியில் இலவசக் கல்விக்கான கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கு எழுக அமைப்பிற்கு ஒரு லட்சம் ரூபாவும், அல்வாய் கிழக்கைச் சேர்ந்த சிறுவன் ஒருவரின் மருத்துவச் செலவுக்கு 35 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

மாலை சந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் மைக்கலின் நேசக்கர பொறுப்பாளர் த. வேணுகானன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக சமூக சேவையாளர் எஸ். பிறேம்குமார் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் எஸ் சேதுராஜா, யாழ்ப்பாண ஊடக அமைய நிறுவுநர் சிரேஷ்ட ஊடகவியலாளர் இ.தயாபரன், உகரம் அறக்கட்டளை இணைப்பாளர் கு.நேருஜன், சிறகுகள் அமையம் இயக்குநர் த.சுஜீபன், சைவ மகா சபை உபதலைவர் ந.பொன்ராசா, உலகத் தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ம.தனுஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# அரிசியை அதிக விலைக்கு விற்ற 500 பேர் சிக்கினர்

கொழும்பு, டிசெ.27



அரிசிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்கும் மேலதிகமாக அரிசியை விற்பனைசெய்த 500க்கும் மேற்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்தையில் கட்டுப்பாடற்ற விதத்தில் அரிசியின் விலை அதிகரித்ததால் 98 ரூபா என்ற கட்டுப்பாட்டு விலையை அரசு விதித்தது. அந்த விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்யப்படுகிறதா என நாடு முழுவதும் நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகார சபை தொடர் தேடுதல் வேட்டைகளை நடத்தி வருகிறது.

கட்டுப்பாட்டு விலைக்கு எதிராக அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையாக சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ள நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகார சபை, இதுவரை 500க்கும் மேற்பட்டோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பெரும்போகத்தில் அறுவடை செய்யப்படும் நெல்லின் பெரும் பகுதியை கொள்வனவு செய்ய அரசு தீர்மானி த்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற வாழ்க்கைச் செலவுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நெல் கொள்வனவு சபையின் ஊடாக இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். (எ-24)

# பாதை துண்டிப்பு

கனமழை காரணமாக கேரதீவு அறுகுவெளிப் பகுதியில் வாழும் மக்களுடைய போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது .

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு அறுகுவெளிப் பகுதியிலும் வெள்ளம் புகுந்ததால், அங்கு வாழும் எட்டுக் குடும்பங்கள் அசௌகரியங்களுக்கு உட்பட்டுள்ளன.

அந்தக் குடும்பங்கள் போக்குவரத்துச் செய்யும் வீதியில் வெள்ளம் நிறைந்துள்ளதால் அதனூடான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது .

வீதியில் காணப்படும் இரண்டு அடி வெள்ளம் தொடர்பில் பலருக்கு அறிவித்தும் அது தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ஐ-9)

# மணல் டிப்பரை மடக்கிய மக்கள்

மருதங்கேணி, டிசெ. 27

சட்டவிரோதமாக மணல் ஏற்றிய டிப்பரை சாரதியுடன் மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் அந்தப் பகுதி மக்கள்.

இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

மணலை டிப்பரில் ஏற்றிக்கொண்டிருந்தபோது மக்கள் அதை மடக்கிப் பிடித்தனர். பளைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர். அங்கு சென்ற பொலிஸார் டிப்பருடன் சாரதியை பொலிஸ் நிலை யத்துக்குக் கொண்டுசென்றனர். சாரதி நீதிவானிடம் முற்படு த்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். டிப்பர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. வழக்கு ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (து-160)



# இயற்கை அழிவுக்குக் காரணம் ஒட்டுண்ணி உறவுமுறைதான்

## ஐங்கரநேசன் சுட்டிக்காட்டுகின்றார்



*யாழ்ப்பாணம், டிசெ. 27*

*பூமியை நாம் தாய் என்று அழைத்தாலும் அந்தத் தாயின் மீது பற்றுள்ள பிள்ளைகளாக நாம் நடந்து கொள்வதில்லை. குருதியைப் பாலாக்கித் தருகின்ற தாயின் முலையில் குருதியைச் சுவைக்கக் கேட்கும் மகவு போன்று, நுகர்வுப் போதை தலைக்கேறி பூமியின் வளங்களை அடியொற்றி உறிஞ்சத் தலைப்பட்டுள்ளோம்.*

பூமித்தாயுடன் நாம் கொண்டிருக்கும் இந்த ஒட்டுண்ணி உறவு முறையே இன்றைய இயற்கைப் பேரழிவுகளுக்கான அடிப்படைக் காரணமாக உள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார். கடற்கோள் நினைவுதினத்தையொட்டி ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பூமியின் வளங்கள் யாவும் மனிதன் உட்பட உலகின் அத்தனை உயிரிகளுக்கும் அவற்றின் வருங்காலத் தலைமுறைகளுக்குமானவை. ஆனால், மனிதர்களாகிய நாம் இயற்கை வளங்களை எமக்கானதாக மட்டுமே கருதி, எமது சந்ததிகளுக்குக்கூட மிச்சம் மீதி வைக்க விரும்பாதவர்களாகச் சூறையாடத் தலைப்பட்டுள்ளோம். பெற்றோலிய எரிபொருள்களின் மிதமிஞ்சிய நுகர்வு, காடுகளின் கபளீகரம், கட்டுப்பாடற்ற மணல் அகழ்வு, கடலையே கருவாடாக்கும் மீன்பிடி, நீரின் அடிமடியில் கைவைக்கும் ஆழ்குழாய்க் கிணறுகள், இயற்கைச் சுழற்சிக்கு உட்படாமல் மலைபோலக் குவியும் பிளாஸ்ரிக் கழிவுகள் என்று பூமியைப் புண்ணாக்கி வருகின்றோம்.

மனிதனில் ஒட்டுண்ணிக்கிருமிகள் தொற்றிப் பெருகும்போது உடலின் நோய் எதிர்ப்பு ஆற்றல் விழித்துக் கொண்டு கிருமிகளைத் தாக்கத் தலைப்படும். மனிதர்களுக்கும் கிருமிகளுக்கும் இடையிலான இந்த மோதலில் மனிதன் கையோங்கும் போது கிருமிகள் அழிவதும், கிருமிகள் மேலோங்கும்போது மனிதர்கள் நோயுற்று மடிவதும் நியதி.

இதேபோன்றே பூமித் தாயும் தனைப் புண்ணாக்கும் ஒட்டுண்ணி மனிதர்களிடம் இருந்து தன்னைத் தற்காக்கும் மோதலை ஆரம்பித்துள்ளாள்.

கடும் வறட்சி, காலம் தப்பிய அடைமழை, கடல்மட்ட உயர்வு, அடிக்கடி வேகம் பெறும் சூறாவளிகள் போன்ற இயற்கையின் சீற்றங்கள் இந்த மோதலின் வெளிப்பாடுகளாகும்.

மனிதரின் உடலில் காணப்படும் இ.கோலி பக்ரீரியங்கள் மனிதனுக்கு நன்மை செய்து மனிதர்களிடம் இருந்தும் நன்மையைப் பெறுவது போன்று, மனிதர்களும் பூமித்தாய்க்குநன்மைசெய்து பூமித்தாயிடமிருந்தும் நன்மை பெறுகின்றனர் ஒன்றையொன்று விருந்தோம்பும் ஓம்புயிரிகளாக, ஒன்றியவாழிகளாக வாழ முற்பட்டாலொழிய இயற்கையின் இடர்களிலிருந்து மனுக்குலம் தப்பிக்கவே இயலாது. என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (து)

## வடக்கு தேர்தலில் போட்டியிட பிரியப்படுகிறார் பிரியபந்து!

கொழும்பு, டிசெ.27

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அழைப்பு விடுத்தால் வடக்கு மக்களின் ஆசியுடன் பொதுத் தேர்தலில் போட்டியிடுவேன் என்று முல்லைத்தீவு, விஸ்வமடு சிவில் பாதுகாப்பு படைப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த லெப்டினென்ட் கேர்ணல் ரத்னபிரிய பந்து தெரிவித்தார்.

வடக்கு மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு ஏதேனுமொரு வழியில் வாய்ப்புக் கிடைத்தால் அதனை ஏற்பதற்கு எந்நேரத்திலும் தயாராக இருக்கின்றேன் என்றும் அவர் கூறினார்.

விஸ்வமடு சிவில் பாதுகாப்பு படைப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த கேர்ணல் ரத்னபிரிய பந்துவுக்கு 2018 ஜனவரியில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு முல்லைத்தீவு பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், தாம் அவரைக் காவலனாகக் கருதுவதாகவும் குறிப்பிட்டனர். எனினும் இடமாற்றம் உறுதிபடுத்தப்பட்டது.

மக்கள் கண்ணீருடன் அவருக்கு பிரியாவிடை கொடுத்த காணொலி சமூக வலைத்தளங்களிலும் பரவியது. பலர் வரவேற்றும், மேலும் சிலர் கடுமையாக விமர்சித்தும் கருத்துகளை முன்வைத்தனர். இடமாற்றம் காரணமாக பதவிகாலம் முடிவடைவதற்கு முன்னரே இராணுவ சேவையிலிருந்து கேர்ணல் ரத்னபிரிய பந்து ஓய்வுபெற்றார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு அவர் ஆதரவு வழங்கியிருந்தார். அடுத்த பொதுத் தேர்தலில் அவர் வடக்கு மாகாணத்தில் போட்டியிடத் தயாராகி வருகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக அவரிடம் 'உதயன்' வினவியது.

"வடக்கு மக்களின் தேவை, விருப்பங்களை நன்கறிந்தவன் நான். விஸ்வமடு சிவில் பாதுகாப்பு படைப் பிரிவு ஊடாக் பல சேவைகளைச் செய்தேன். மக்கள் அவற்றை வரவேற்றனர். எனினும், அம்மக்களுக்கான சேவையைத் தொடர்வதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இடமாற்றம் வழங்கப்பட்டது. மக்களை நான் அதிகம் நேசிக்கின்றேன். அவர்களுக்குச் சேவைசெய்ய வாய்ப்புக் கிடைத்தால் நிச்சயம் ஏற்பேன். ஜனாதிபதித் தேர்தலின்போது தற்போதைய கோத்தாபய ராஜபக்ஷவுக்கே ஆதரவு வழங்கினேன். அவரோ அவர் தலைமையிலான அரசோ அல்லது வடக்கு மக்களோ எனது சேவை தேவையெனக் கருதி அழைப்பு விடுத்தால் நிச்சயம் தேர்தலில் போட்டியிடத் தயாராகவே இருக்கின்றேன்-என்றார். (எ)

## மீண்டும் இயங்கவுள்ள இரு முன்பள்ளிகள்

சாவகச்சேரி, டிசெ.27

சாவகச்சேரி நகரசபையின் முன்பள்ளிகள் இரண்டு 2020 ஆம் ஆண்டு தொடக்கம் மீண்டும் இயங்கவுள்ளன.

அதற்கான விண்ண ப்பங்கள் மாணவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

நகரசபையால் மட்டுவில் தெற்கு மற்றும் சாவகச்சேரி கோவில் குடியிருப்பு ஆகிய இரு இடங்களில் ஆசிரியைகள் நியமிக்கப்பட்டு முன்பள்ளிகள் நடத்தப்பட்டன.

அங்கு கடமையாற்றிய ஆசிரியைகள் ஓய்வுபெற்றதால், முன்பள்ளிகள் கல்வி வலயத்தால் பொறுப்பேற்ற பின்னர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பதவிகள் நகரசபையில் வெற்றிடமாக காணப்பட்டன.

தற்போது மாகாண கல்வி அமைச்சால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கிடையில் நடத்திய போட்டிப் பரீட்சையில் தென்மராட்சிகல்விவலயத்தில் 5 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவற்றில் இருவர் சாவகச்சேரி நகரசபைக்குநியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து மீண்டும் முன்பள்ளிகளை இயக்குவதற்கு மாணவர்களிடமிருந்து விண்ண ப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம்திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார். (ஐ-9)

# ஒரு மொழிக் கொள்கை அழிவையே ஏற்படுத்தும்

## ஜனாதிபதிக்கு மனோ கடிதம்

கொழும்பு, டிசெ.27

நடைபெறவுள்ள சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்படாது என்று துறைசார் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் அறிவித்துள்ளார் என்று வெளியான செய்தி இலங்கை வாழ் தமிழ் மொழி பேசும் மக்களை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. இது இலங்கையை இன ரீதியாகப் பிரிக்கும் ஒரு பிரிவினைவாதச் செயல் என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டியுள்ளார். ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உங்கள் பதவியேற்பு நிகழ்வின் 'அனைத்து இலங்கையர்களுக்குமான ஜனாதிபதியாகச் செயற்படுவேன்' என்று நீங்கள் நாட்டுக்குத் தந்த உங்கள் உறுதிமொழியின் அடிப்படையில் தமிழ் மொழியிலான தேசிய கீதத்தை அகற்றும் இந்த முடிவை ரத்து செய்ய துறைசார் அமைச்சருக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"ஒரே நாடு, மூன்று மொழிகள்" என்ற அடிப்படையில் இந்த நாட்டை ஒன்று சேர்த்து, சிங்கள, தமிழ், முஸ்லிம் அடிப்படைவாத, பிரிவினைவாதிகளைத் தோற்கடிக்கும் அரிய சந்தர்ப்பத்தை தவறவிட வேண்டாம் என உங்களை வேண்டுகிறேன்.

உங்கள் அரசில் இருக்கின்ற சிலர், "ஒரே மொழி" என்ற கொள்கையை முன்னெடுக்க முயல்கின்றனர். இத்தகைய கொள்கைதான் 1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு அடுத்து வந்த பல்லாண்டுகளாக இந்த நாட்டை படு குழியில் தள்ளியது. உண்மையில் ஒரே மொழி என்று சொல்லும் போது ஒரே நாடு என்ற கொள்கைதான் பலவீனமாகிறது.

சிங்கள, தமிழ் நாடுகளை தவிர்த்து, இலங்கை நாட்டைக் கட்டி எழுப்புங்கள். தமிழிலும் இலங்கையயின் தேசிய கீதத்தை பாடுவது தேசாபிமான நடவடிக்கை ஆகும். சில போலி தேசிய வாதிகள், மொழி இனங்களை ஒன்று சேர்க்கும் இந்த தேசாபிமான நடவடிக்கையை நிறுத்தி விட முயல்கிறார்கள். அதற்கு இடம் கொடுக்க வேண்டாம் என உங்களை நான் கோருகிறேன்-என்றுள்ளது. (எ)

## வெள்ளி விழா நிகழ்வுகள்



சாவகச்சேரி, டிசெ.27

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் சாவகச்சேரி ஐங்கரன் மணிமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.

நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக முன்னாள் செயலர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.

நிலையச் சிறார்களின் கலைநிகழ்வுகளும், வெள்ளி விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

அத்துடன் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய ஆசிரியர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-9)

# கோத்தாவால் தமிழருக்கு பேராபத்து என்பது பொய்

## திஸ்ஸ விதாரண கூறுகின்றார்



கொழும்பு, டிசெ.27

ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ஷ வெற்றி பெற்றால் தமிழ் மக்கள் பழிவாங்கப்படுவர் என ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் போலித்தனமானதும் விசமத்தனமானதுமான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் கோத்தாபய ராஜபக் ஷ வெற்றி பெற்றும் தமிழ் மக்களுக்கு எதிராக எவ்வித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை. சகலருக்குமான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சிறிலங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளரும் ஆளுநருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னரான நிலைமைகள் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து கோத்தாபய ராஜபக் ஷ வெற்றிபெற்றால் வெள்ளை வான் கலாசாரம் உருவாகும் என்று போலித்தனமானதும் விசமத்தனமானதுமான பரப்புரைகளை மேற்கொண்டனர்.

அது மட்டுமல்லாமல், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தி இரண்டு நபர்களை அழைத்து வந்து கோத்தாபய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரிலேயே வெள்ளை வானில் தமிழ் மக்களை கடத்திச் சென்று கொலை செய்தனர் என்று கூறப்பட்டது.

தற்போது அது பொய் என நிரூபிக்கப்பட்டுள்ளது. அதன் சாரதிகள் என சந்தேகத்தின் பேரில் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். விசாரணைகளின் இறுதியில் உண்மை தெரியவரும்.

கோத்தாபய ராஜபக்ஷ இனவாதி அல்லர். தான் எதிர்பார்த்தளவு தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லையென்றாலும் அந்த மக்களை அரவணைத்து நாட்டை அபிவிருத்தி செய்வேன் என அவர் பதவியேற்ற தினத்தில் கூறியமை வரவேற்கக்கூடிய விடயம். எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சி மூன்று பிரிவுகளாக செயற்படுவதால் பொதுஜன முன்னணி அதிக ஆசனங்களைக் கைப்பற்றும். எனவே தமிழ் மக்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.-என்றார். (எ)



# செஞ்சோலைக் காணிகளை மீள ஒப்படைக்க கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.27

கிளிநொச்சி மலையாளபுரத்தில் செஞ்சோலை சிறுவர் இல்லம் அமைந்திருந்த தமது காணிகளைத் தம்மிடம் மீளக் கையளிக்க வேண்டும் என்று காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் நேற்றுக் கிளிநொச்சியில் அவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:-

1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் போர் காரணமாக இந்தியாவுக்குச் சென்று அங்கு முகாம்களில் வாழ்ந்து வந்தோம். போர் முடிந்த பின்னர் எமது காணிகளில் குடியேறுவதற்காக வந்தபோது அந்தக் காணிகளில் படையினர் முகாம் அமைத்திருந்தனர். படையினர் முகாம்களை அகற்றி காணிகளை விடுவித்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆதரவுடன் அந்தக் காணிகள் செஞ்சோலையில் இருந்து வளர்ந்தவர்கள் என குறிப்பிட்ட சிலரின் குடும்பங்களுக்குக் பகிர்ந்தளிக்கப்பட்டன.

நாங்கள் உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வாழ்கின்றோம். அந்தக் காணிகளுக்கான ஆவணங்கள் எமது கையில் உள்ளன. அந்த ஆவணங்களையும் மீறி அந்தக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்தோம். அந்தக் காணிகளை எமக்கு வழங்க வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளது. எமது காணிகளை எமக்குப் பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். என்றனர்.

இந்தக் காணிகள் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் வளர்ந்த சுமார் 25க்கும் மேற்பட்டவர்களுக்குக் கடந்த ஆண்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. (எ-6)

## சிவில் பாதுகாப்புக் குழுக்கள் ஊடாக

# குற்றச் செயல்களை தடுத்து நிறுத்துவேன்!

## வன்னி டீ.ஐ.ஜி. சூளுரை

வவுனியா, டிசெ. 27



வவுனியாவில் பல கிராமங்களில் இடம்பெறும் குற்றச்செயல்களை, அந்தந்தப் பகுதிகளிலுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களைப் பயன்படுத்தி கண்காணித்து கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளேன் என்று வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட றொகான் ஜெ சில்வா தெரிவித்தார்.

கிறிஸ்மஸ் தினமான கடந்த புதன்கிழமை வசதியற்ற மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அண்மையில் இடம்பெற்ற வெள்ள இடர் காரணமாக வவுனியாவில் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டுள்ளன. அந்தக் குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கவேண்டும் என்ற நோக்குடன் இதனைத் தமிழ் விருட்சம் அமைப்பினூடாக மேற்கொண்டுள்ளேன்.

பல்வேறு கிராங்களில் அண்மைய காலங்களாக அதிகரித்துச் செல்லும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு சகல மக்களுடனும் இன மதபேதமின்றி செயற்படுவதற்குத் தயாராக உள்ளேன். இதற்கான நடவடிக்கையாக கிராமங்களிலுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களைப் பயன்படுத்தி அந்தக் கிராங்களில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என்று தெரிவித்தார்.

வவுனியா தாலிக்குளம் அமெரிக்க மிஷன் சென்.தோமஸ் ஆலயத்தில் வைத்து அந்தப் பகுதிகளிலுள்ள வசதியற்ற மாணவர்கள் 60 பேருக்கு தனது சொந்த நிதியிலிருந்து வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தமது குடும்ப உறவுகளுடன் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (கு)

### நூல் வெளியீடு

சைவாலயக் கிரியைகளுக்கான சிவாகம சுலோகங்களின் தமிழ் விளக்கங்களுடன் "சிவாகம ப்ரமான சங்கிரகம்" எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் அனுசரணையுடன் சர்வானந்தமய பீடம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ பண்டிதர் து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட பீடாதிபதி கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் மொடேன் இந்து ஆகம கலை கலாசார வேத ஆகம பாடசாலை மாணவர்களின் வேத திருமுறைப் பாராயணம் இடம்பெறவுள்ளது. (ஐ-159)

# சுகாதாரத் துறையிலுள்ள குறைபாடுகள் நீக்கப்படும்

## பவித்திரா உறுதியளிப்பு

இலவச சுகாதாரத்தை மக்களுக்கு வழங்குவதில் காணப்படும் குறைப்பாடுகள், தடைகள் மற்றும் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்படும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளினதும் பணிப்பாளர்கள் மற்றும் வைத்தியர்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இலவச சுகாதாரத்தை வினைத்திறன் மிக்க விதத்தில் மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பது மற்றும் வைத்தியசாலைகளில் நிலவும் குறைப்பாடுகள், பிரச்சினை களுக்குத் தீர்வுகாண்பது தொடர்பில் இந்தச் சந்திப்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைச் சேவைகளுக்குத் தேவையான உபகரணங்கள், மருந்து வகைகள், உடனடித் தேவைகள், மனிதம் மற்றும் சுகாதார வளங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

வைத்தியசாலைகளில் தீர்வுகாணப்பட வேண்டிய சில உடனடிப் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது அமைச்சருக்கு, பணிப்பாளர்கள் விளக்கமளித்தனர். அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளையும் அவர்கள் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டினர்.

வைத்தியசாலைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களில் நிலவும் அனைத்துக் குறைப்பாடுகளையும் சுபீட்சமாக நோக்கி என்ற எமது தேர்தல் வாக்குறுதியின் பிரகாரம் விரைவாக தீர்வுகாண நடவடிக்கையெடுக்கப்படும் என்று அமைச்சர் வைத்தியசாலைப் பணிப்பாளர்களுக்கு உறுதியளித்துள்ளார். (எ-24)

## சீருடைக்கான உறுதிச் சீட்டு அடுத்தவாரம்

சாவகச்சேரி, டிசெ. 27

பாடசாலை மாணவர்களுக்கு 2020 ஆம் ஆண்டுக்கான இலவச சீருடைத் துணிகள் கொள்வனவு செய்வதற்கான உறுதிச்சீட்டுக்கள் அடுத்தவாரம் பாடசாலைஅதிபர்களால் விநியோகிக்கப்பட வுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. சீருடைக்கான வவுச்சர்களை கல்வி அமைச்சு அந்தந்தக் கல்வி வலயங்களின்அதிகாரிகளிடம் இன்று கையளிக் கவுள்ளது. அவை அடுத்த வாரம் அதிபர்களிடம் கையளிக்கப்பட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் என்று கல்வி வலயத்தினர் தெரிவித்தனர். (த-9)

**டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

பூச்சி நீக்கி தடுப்பூசி போடப்பட்ட டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**077 552 7892 - சித்தங்கேணி**

### தவறவிடப்பட்டது

கொடிகாமத்திற்கும் கனகன்புளியடிக்கும் இடையே எனது வங்கிப்புத்தகம் Nokin கைத்தொலைபேசி அடங்கிய பச்சை கறுப்பு நிற கைப்பை (பேர்ஸ்) தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் தயவுசெய்து தந்து உதவும்படி கேட்கின்றேன்.

**076 252 3674, 077 287 6865**

## ஓராண்டு சிரார்த்த தின பிரார்த்தனை



கடந்த 06.01.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

### அமரர் சொக்கலிங்கம் சிவநாயகம்

அவர்களின் ஓராண்டு சிரார்த்ததின கிரியைகள் இன்று (27.12.2019) வெள்ளிக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெற்று அதன் பின்னர் நண்பகல் 12.00 மணியளவில் இல.37, சேர். பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள "சரஸ்வதி மண்டபத்தில்" (A1 ராஜா கிறீம் ஹவுஸ்) ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெற வுள்ளது. அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

**இல.43, மனல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முத்தம்மா ஆறுமுகம்



நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தம்மா ஆறுமுகம் 25.12.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - தங்கமுத்து தம்பதிகளின் பாசமிகு மகளும், ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, சின்னத்துரை, பாலர், பாலசிங்கம், இலட்சுமி மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நவரத்தினம் (கொழும்பு), ஞானமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவநாதன், கலாவாணி (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும், சித்திரேஸ்வரன், விஜிதா, கேதீஸ்வரன், கவிதா (கனடா), ரூபன் - ஜனனி (கொழும்பு), நிராகுலன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மிஷாளன், சதுர்த்திகன், திஷான் திஸ்மியா, தார்மிகா (கனடா) ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**

**நவக்கிரி,புத்தூர்.** (CS/30181)(11,17) **குடும்பத்தினர்.**

## நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்

### பெறுகைக்கான அழைப்பு


**நந்தவனம் பாதுகாப்பு இல்லம் கிளிநொச்சிக்கான புதிய உலர் உணவுப் பொருள்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகமும் - 2020/2021**

வடமாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் பெறுகை குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவுப் பொருள்கள், சமைத்த உணவு மற்றும் தொற்று நீக்கிப் பொருள்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை பின்வரும் நிறுவனங்களுக்குக் கோருகின்றார்.

| பெறுகை விடயம் | பெறுகை இல |
|---|---|
| புதிய உலர் உணவுப் பொருள்கள் விநியோகமும் தொற்று நீக்கிப் பொருள்கள் விநியோகமும் 2020 -2021 | NP/30/20/05/ Fo Sup/Na 2020 -2021 |

01. விலைக் கேள்விதாரர் உலர் உணவு விநியோகத்திற்கான வியாபார பதிவுடைய ஒரு நபராக் அல்லது தனிப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
02. பொருத்தமான உத்தரவாதமுறி பெறப்பட்டு பெறுகையுடன் இணைக்கப்படல் வேண்டும். உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும். உத்தரவாத முறி பணம் காலம் (23.01.2020 - 22.04.2020 ) உத்தரவாத முறி பணம் ரூபா 50,000.00 ஐ மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் வைப்புச்செய்யப்படல் வேண்டும்
03. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர் இத்திணைக்களத்தில் கிடைக்கும் "Application for Bid Documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா.1000/= னை காசாக செலுத்தி தமிழ் மொழியிலான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாள்களில் 27.12.2019 தொடக்கம் 22.01.2020 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். மேலும் 13.01.2020 மாலை 2.00 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக் கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்துகொள்ளலாம்.
04. விலைக் கேள்விகள் 23.01.2020 ந் திகதி 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ இத் திணைக்களத்தில் ஆணையாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக் கேள்விகள் 23.01.2020 ந் திகதி 10.45 மணிக்கு விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
05. தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ் காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல. 021 222 4782)
06. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகள் நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தி.விஸ்வரூபன்**
**தலைவர், திணைக்கள பெறுகைகள் குழு,**
**நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களம் வ.மா,**
**மீனாட்சி அம்மன் வீதி,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி :- 021-205-7102 தொலைநகல் 021-205-7103** (IN/12023)(11,17)



## கந்தையா பத்மநாதன்

யாழ். கோண்டாவில் குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும், இத்தாலி Genoa, இலங்கை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா பத்மநாதன் 24-12-2019 செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இரத்தினேஸ்வரி (பூபதி- இத்தாலி) அவர்களின் அன்புக் கணவரும், ஜீவராணி (இத்தாலி), பாஸ்கரன் (சுவிஸ்), விஜயராணி (சுவிஸ்), பிரசாத் (இங்கிலாந்து), சுமித்திரா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், குருபரன்தாஸ் (இத்தாலி), மதிவதனி (சுவிஸ்), காயத்திரி (இங்கிலாந்து), சஜந்தன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நல்லருளானந்தம் (கனடா) மற்றும் பூபாலசிங்கம் (இலங்கை), மங்கையற்கரசி (கொழும்பு), பூபதிதேவி (இந்தியா), துரைராசா (கனடா), பாலச்சந்திரன் (இந்தியா), குணசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சரஸ்வதி (இந்தியா) மற்றும் பரமேஸ்வரி (ராசாத்தி- இத்தாலி), அரியரத்தினம் (இலங்கை), காலஞ்சென்ற சீவரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஞ்ஜீகா (இத்தாலி), ரம்மிகா (இத்தாலி), பிரநேஸ் (சுவிஸ்), பிரநிதி (சுவிஸ்), சுகிந்தன் (சுவிஸ்), சுகிர்தா (சுவிஸ்), சஞ்ஜீவன் (சுவிஸ்), சவீனா (இங்கிலாந்து), அன்சிகா (இங்கிலாந்து), நிஷ்மிதா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-12-2019) வெள்ளிக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் குமரக்கோட்டம் இல்லத்தில் நடைபெற்று பின்னர் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/30176)(11,17) **தகவல்:- குடும்பத்தினர்.**

**077 248 7835**

**அனைத்தும் தனித்துவமான கனினி வடிவமைப்புடன்**

**ES Printers**



**பனர் பிரிண்ட் (Banner),**

சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற. வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில். விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர்பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills),நோட்டீஸ் (Notice) மற்றும் அனைத்து ஒவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்

Rubber stamp

மக் பிரிண்ட் (MUG)



# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472
கிளை அலுவலகம்:-
New Market, 1st Floor, Chavakachcheri
021 492 7432
கரடிப் போக்குச் சந்தி, ஏ-9 வீதி, கிளிநொச்சி.
021 492 7454
esprintersjaffna@gmail.com

# வாசிப்பாற்றலை வளர்த்த உதயனுக்கு கைதடி பொது நூலகத்தால் கௌரவம்





கொடிகாமம் டிசெ. 27

வாசிப்பாற்றலை வளர்ப்பதில் உதயன் ஆற்றிய அரும்பணிக்காக, அதன் பணிப்பாளர் திருமதி யசோதை சரவண பவனைக் கௌரவித்து, அவருக்கு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தின் வாசிப்பு மாத நிறைவு தின நிகழ்விலேயே இவ்வாறு கௌரவம் வழங்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தின் வாசிப்பு மாத நிறைவு தினமும், பரிசளிப்பு நிகழ்வும் கடந்த சனிக்கிழமை மாலை சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க வாமதேவன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெகதீசன் செல்வராணியும், கௌரவ விருந்தினராக கைதடி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் நா.கருணாகரன், பரிசில் வழங்குநர்களாக உதயன் குழுமப் பணிப்பாளர் திருமதி யசோதை சரவணபவன், பிரதேச சபைச் செயலாளர் திருமதி கிரிஜா வாசுதேவன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

உதயன் பத்திரிகையானது வாசிப்பாற்றலை வளர்ப்பதில் அளப்பரிய பங்களிப்பு செய்தது என்று தெரிவித்த கைதடி பொதுநூலகச்சமூகத்தினர், அந்தச்சேவையைக் கௌரவிக்கும் வகையில், உதயன் குழுமத்தின் பணிப்பாளர் திருமதி யசோதை சரவணபவனைக் கௌரவித்தனர். அவருக்கு நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது.. வாசிப்பு மாதப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற முன்பள்ளி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், வாசகர்கள் ஆகியோருக்கான பரிசில்களும் நிகழ்வில் வழங்கப்பட்டன. (ஐ-159)

*டெங்கு பரவும் சூழல்:*

## வழக்குப் பதிய பொலிஸார் தயார்

சாவகச்சேரி, டிசெ. 27

தென்மராட்சியில் படையினரும் பொலிஸாரும் இணைந்து வீடு வீடாகச் சோதனையில் ஈடுபடவுள்ளனர். இதன்போது டெங்கு பரவும் சூழலைப் பேணுவோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். டெங்கு நுளம்பு உற பத்தியாகக் கூடிய நீரேந்து கொள்கலன்கள் மற்றும் தண்ணீர் தேங்கியுள்ள இடங்களை குடியிருப்பாளர்கள் உடனடியாக இல்லாமல் செய்யவேண்டும்.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேசத்திலுள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் ஒரேநாளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நீரேந்து கொள்கலன்கள் காணப்படின் அவற்றை அப்புறப்படுத்த அந்தந்தக் கிராம அலுவலர் மூலமாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு பெருமளவு மக்கள் ஒத்துழைப்பு வழங்கினர். எனினும், சில குடியிருப்பாளர்கள் பங்களிப்புச் செய்யவில்லையென்று கூறப்பட்டுள்ளது. எனவே இந்த முறை பொதுமக்கள் சகலரும் ஒத்துழைக்கவேண்டும். தவறின் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-9)

# இடமாற்றங்கள் அனைத்தும் 'அவுட்'

## *அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கு அமைச்சரவை அறிவிப்பு*

*யாழ்ப்பாணம், டிசெ. 27*

*எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மேற்கொள்ளவிருந்த சகல வருடாந்த இடமாற்றங்களையும் இடைநிறுத்துமாறு அமைச்சரவைத் தீர்மானம் மேற்கொண்டுள்ளமை தொடர்பில் அதிகாரிகள், அலுவலர்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.*

நாடு முழுவதும் சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகளின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் இடமாற்றத்தின் அடிப்படையில், இடமாற்றத்துக்கு விண்ணப்பித்த பலரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றத்தை எதிர்பார்த்துள்ளனர்.

மார்ச் மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுத் தேர்தல் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் இடமாற்றம் இடம்பெறாத தன்மையே ஏற்படும். கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் எடுத்ததெற்கெல்லாம் போராட்டம் நடத்தி இயல்பு நிலையைப் பாதிப்படையச் செய்த தொழிற் சங்கங்கள் தற்போதைய அரசின் காலத்தில் வாய்மூடி மௌனிகளாக அல்லது அரசின் அடிவருடிகளாக இருக்கின்றனர் என்றும் பலரும் விமர்சிக்கின்றனர். வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து நெடுங்கேணி, மடு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் கிராமங்களில் 7 ஆண்டுகளாக பணியாற்றும் ஆசிரியர்கள் கூட இது பற்றி வாய் திறக்கவில்லை என்றும் விமர்சிக்கப்படுகின்றது. (து-105)



## நத்தார் வழிபாடு

மருதங்கேணி,டிசெ.27


வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலயத்திலும் பாலன் இயேசு பிறந்த நாளைக் கொண்டாடும் நத்தார் தின வழிபாடுகள் நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றன. நேற்று முன்தினம் இரவு 11.20 மணியளவில் திருச்செபமாலையுடன் ஆரம்பமான வழிபாட்டு நிகழ்வில், திருப்பலிப் பூசையை கட்டைக்காட்டு பங்குத்தந்தை அன்ரனி அன்ரோ டெனிசியஸ் ஒப்புகக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து புனித அந்தோனியார் இளைஞர் மன்றத்தினரால் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பாலகன் குடிலில், பிறந்த பாலகன் இயேசுவை ஆலயத்திலிருந்து பவனியாக எடுத்து வந்து குடிலில் வைத்து வழிபடும் நிகழ்வு இடம்பெற்றது. (க-70)


## கலந்துரையாடல்

வலி.மேற்கு சமூகமட்ட அமைப்புக்களுடனான கல்வி விழிப்புணர்வுக் கலந்துரையாடல் அராலி மேற்கு முத்தமிழ் சனசமூக நிலையமண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சமூக நீதிக்கும் உரிமைக்குமான மாற்றுத்தலைமுறை நிறுவனத்தின் அனுசரணையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

வறுமை நிலையில் உள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான கல்வி உதவிகளை வழங்குவதென முடிவுசெய்யப்பட்டு அதற்காக கல்விக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ)

# அனைவரின் கவனத்தையும் ஈர்த்த சூரிய கிரகணம்











யாழ்ப்பாணம், டிசெ.27

10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்படும் சூரிய கிரகணம் இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று மிகத் துல்லியமாகத் தோன்றியது. வடக்கு மாகாணத்தில் தோன்றிய சூரிய கிரகணத்தை பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உரிய உபகரணங்களின் மூலம் கண்டுகளித்தனர். இன்னும் பலர் கறுப்புக் கண்ணாடிகள் மூலமாகவும், வாளிக்குள் தண்ணீர் நிரப்பி அதிலும் பார்வையிட்டனர்.

இலங்கை நேரப்படி காலை 8.09 மணிக்கு ஆரம்பமாகி முற்பகல் 11.21 வரை சுமார் 3 மணித்தியாலங்களும் 12 நிமிடங்களும் சூரிய கிரகணம் நீடித்திருந்தது. 3 நிமிடங்களும் 8 வினாடிகளும் மோதிர வடிவிலான கங்கண சூரிய கிரகணம் மிகத் தெளிவாகக் காட்சியளித்தது என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

வானில் சூரிய கிரணம் தென்படத் தொடங்கியதிலிருந்து குறிப்பிட்ட நிமிடங்களுக்கு வானம் இருள் சூழ்ந்ததாகக் காணப்பட்டது. மஞ்சள் நிற மின்குமிழ் ஒளிரவிட்டிருக்கும் நிலையை சூரிய கிரகணத்தின்போது குறிப்பிட்ட சில நிமிடங்கள் அவதானிக்க முடிந்தது.

தவிர, மரக்கிளைகள் ஊடாக சூரிய ஒளி நிலத்தில் விழும்போது அதன் அப்போதைய காட்சிகள் சிற்பங்கள் செதுக்கி வைத்தமைபோன்று காணப்பட்டன. வளையங்களாகவும் இன்னும் பல வடிவங்களிலும் காட்சியளித்தன.

வெற்றுக் கண்ணால் சூரிய கிரகணத்தைப் பார்ப்பதைத் தவிர்க்கும் வகையில் சூரிய கிரகண அவதானிப்பு முகாமுக்கு வருகை தந்தவர்களுக்கு சிறப்பு பார்வைக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. அவற்றைப் பயன்படுத்தி பெருமளவான மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மோதிர வடிவிலான கங்கண சூரிய கிரகணத்தைப் பார்த்து மகிழ்ந்தனர். வெல்டிங் வேலை செய்பவர்கள் தாங்கள் பயன்படுத்தும் கண்ணாடிகளைக் கொண்டு சூரிய கிரகணத்தைப் பார்த்தனர். சூரிய கிரகணம் தொடர்பான ஒளிப்படங்கள் முகநூல் தளங்களில் அதிகம் பகிரப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வானியல் தொடர்பான் விரிவுரைகளை நடத்தி, கொழும்புப் பல்கலைக் கழகம், மேற்கு நோர்வே பிரயோக விஞ்ஞானப் பல்கலைக்கழகம், விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் சூரியகிரகண அவதானிப்பு முகாம்களை அமைத்திருந்தன. கிரகணத்தின்போது விஞ்ஞான ஆய்வுக்குத் தேவையான அளவீடுகளை மேற்கொள்ளவும் அமெரிக்காவிலிருந்து ஆய்வுக்குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தனர்.

தவிர யாழ்ப்பாணக் கோட்டையை அண்டிய பகுதிகளிலும், சில பாடசாலைகளிலும் சூரிய கிரகணத்தைப் பார்ப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சூரியனுக்கும்பூமிக்குமிடையில் சந்திரன் நேர்கோட்டில் சந்திக்கும்போது, சூரியகிரகணம் நிகழ்கின்றது என்பதை சங்ககால இலக்கியக் கர்த்தாக்களும், பின்வந்த தத்துவஞானிகளும் எடுத்துரைத்துள்ளனர். கிரகண நிகழ்வுகளின் திகதிகளையும், நேரங்களையும் நவீன விஞ்ஞானம் மிகத் துல்லியமாகக் கணக்கிட உதவியபோதிலும், கிறிஸ்துவுக்கு முற்பட்டகாலத்தி லேயே இந்துக்களின் பண்பாட்டின் ஓர் அங்கமாகத் திகழும் பஞ்சாங்கத்தில் முன்னரே சூரிய கிரகணம் உள்ளிட்ட ஏராளமான விடயங்களை மிகத் துல்லியமாகக் கணித்துள்ளனர். சூரிய கிரகணங்களின் போது நடத்தப்பட்ட அளவீடுகள் பல பௌதிகத் தோற்றப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளன. நேற்று கங்கண சூரிய கிரகணம் ஓர் அரிய நிகழ்வாகக் கருதப்பட்டது.

சூரியகிரகணத்தின் தோற்றம், விஞ்ஞான ஆய்வு மற்றும் மனிதஒற்றுமையை வளர்ப்பதற்கான ஓர் அரிய வாய்ப்பாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டது. மன்னாரில், கடுவத்தைமொறட்டுவவானிலை ஆராய்ச்சி திணைக்களம் ஆதர் சி கிளாக் நிறுவனம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் என்பன இணைந்து சூரியகிரகணத்தைப் பார்வையிட ஏற்பாடுகளைச் செய்திருந்தன. இங்கு வைக்கப்பட்டிருந்த தொலை நோக்கி மூலமாக சூரிய கிரகணத்தைப் பலரும் கண்டு மகிழ்ந்தனர்.

வானிலைஆராய்ச்சிக்குழுவினர் கருத்து தெரிவிக்கையில், "இறுதியாக 2010 டிசெம்பரில் இலங்கையில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. இலங்கை போன்ற சிறிய நாட்டில் ஏற்படுவது மிக அரிது." என்று தெரிவித்தனர்.

சூரிய கிரகணத் தொழுகை வவுனியா பண்டாணிச்சூர் ஜும் இய்யதுல் உலமா பள்ளிவாசலில் நேற்றுக்காலை இடம்பெற்றது. சூரிய கிரகணத் தொழுகையில் 50க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

வவுனியாமற்றும்முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மக்கள் ஆர்வத்துடன் சூரிய கிரகணத்தைப் பார்வையிட்டிருந்தனர். இங்கு மட்டுமன்றி, கிழக்கு மாகாணத்திலும், மலையகத்திலும் இவ்வாறு சூரிய கிரகணத்தைப் பார்க்க முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

(கு21,7,110,213,⁻6,106,ரி4)



# மார்கழி மாத ராசிபலன் 2019-2020



## அதிர்ஷ்டத்தை அள்ள போகும் ராசிக்காரர்கள் யார்?

### மேடம்

மார்கழி தட்சிணாயன புண்ணிய காலத்தின் கடைசி மாதம். தனுசு ராசியில் சூரியன் சஞ்சரிப்பதால் தனுர் மாதம் என்றும் அழைக்கின் றனர்.

தனது ஆற்றலை முழுமையாக பயன்படுத்தி காரிய சாதனை செய் யும் மேஷ ராசி அன்பர்களே.

உங்கள் ராசி நாதன் செவ்வாய் உங்கள் ராசிக்கு 7 ல் இருப்பதால் உங்கள் ஆளுமை அதிகரிக்கும். எந்த சூழ்நிலையையும் போராடி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் தனித்தன்மையை நிரூபிப்பீர்கள். இருப்பினும் மாதப் பிற் பகுதியில் கவனம் தேவை. வீண் பிரச்னைகளில் தலையிட வேண் டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். வாகன பயணங்களில் கவனம் தேவை. எனினும் எதிர்பாராத தனவரவு உண்டு.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பொருளாதார நிலையில் நல்ல முன் னேற்றம் ஏற்படும். நீண்ட நாளாக நிலுவையில் இருந்த பணம் கை வந்து சேரும்.

பேச்சை விட செயலில் அதிக கவனம் செலுத்துவீர்கள். மனதில் உற்சாகம், தைரியம் அதிகரிக்கும். உங்கள் பிரச்னைகளை தீர்க்க சரியான முடிவை எடுத்து, தைரியமாக செயல்படுத்துவீர்கள். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. தாயின் உடல்நிலை ஆரோக்கியம் அடையும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள். பூர் வீக சொத்துக்கள் வந்து சேரும். எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு. கணவன் மனைவிக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். உங்கள் வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இருப் பார்கள்.

தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. தந்தையுடன் வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சிறு, சிறு பிரச்னைகள் இருந்தாலும், அவற்றை சமாளிக்கும் திறனை பெறு வீர்கள்.

வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டு. கூட்டாளிகளால் ஆதா யமடைவீர்கள். சொந்தத்தொழிலில் இருப்பவர்கள் தங்கள் திறமை யாலும், கடின உழைப்பாலும் அதிக வருமானம் பெறுவீர்கள்.

**அதிர்ஷ்டமான நாள்கள்:**
டிசெம்பர் 19, 20 ,21, 28, 29, 30, 31.

### இடபம்

பல மடங்கு பலம் இருந்தாலும், அன்பிற்கு அடங்கி நிற்கும் ரிஷப ராசி அன்பர் களே, உங்கள் ராசி நாதன் சுக்கிர பகவான் 9 ல் சஞ்சரிப்பது அனுகூலமான பலன்களைத் தரும். தந்தை வழியில் ஆதாயத்தை ஏற்படுத்தும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு முயற்சிகளை ஆரம்பிக்க சரியான நேரம். ஆன்மிகத்தில் நாட் டம் அதிகரிக்கும்.

நல்ல அதிர்ஷ்ட வாய்ப்புக்களும், மூத்தோர்களின் உபதேசமும் கிடைக்கும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் நீங்கும். பொருளாதார நிலையில் நல்ல முன் னேற்றம் ஏற்படும். எதிர்பாராத தன வரவு உண்டு. இருந்தாலும் வாகன பயணங் களில் கவனம் தேவை. குடும்பத்தில் அனைவருடனும் இணைந்து பயணம் செல்வதை தவிர்ப்பது நல்லது. தேவையற்ற பிரச்னைகள் மற்றும் வீண் விவா தங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. சகோதர, சகோதரிகளால் ஆதாயம் உண்டு. புதிய தங்க நகை ஆபரணங்களை வாங்குவீர்கள். உங்கள் முயற்சிக ளில் சிறு, சிறு தடைகள் வந்து நீங்கும். உடல் ஆரோக்கியத்தில் சிறு பாதிப்புக்கள் வந்தாலும் உடனடியாக மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது. குழந்தைகள் உடல் நலனில் கவனம் தேவை.

குழந்தைகளை கண்காணிப்பில் வைத்து அன்புடன் அரவணைத்துச் செல்வது நல்லது. பூர்வீக சொத்து பிரச்னைகளில் தலையிடாமல் தள்ளிப்போடுவது நல்லது. எந்த விஷயத்திலும் பொறுமையும், நிதானமும் அவசியம்.வீண் கோபத்தை தவிர்ப்பது நல்லது. இல்லற வாழ்வில் அதிக கவனம் தேவை. கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வதால் வீண் பிரச்னைகளை தவிர்க் கலாம். தொழில் மற்றும் உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிக விழிப்புடன் இருங்கள். தங்கள் பணிகளில் அதிக கவனம் செலுத்துங்கள். சக ஊழியர்களை முழுமையாக நம்ப வேண்டாம். உயரதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

**அதிர்ஷ்டமான நாள்கள்:**
டிசெம்பர் 21 ,22, 23, 30, 31. ஜனவரி 1, 2, 3 ,4

# 12 ராசியினரும் வழிபடவேண்டிய கணபதி ரூபங்கள்..!!

**மேடம்:** மனோதைரியம் மிக்கவர். நீங்கள் செவ்வாயின் ஆதி கத்தை பெற்ற நீங்கள் வீரம் மிக்கவர்கள் எவருக்கும் அஞ்சாதவர் கள். நீங்கள் வழிபட வேண்டியவர் வீர கணபதி.

**ரிஷபம்:** நீங்கள் சுக்கிரனின் ஆதி[illegible]த்தை பெற்று அமபிகையின் பரிபூரண அருளுக்கு பாத்திரமானவர்கள். நீங்கள் வழிபட வேண் டியர் ராஜ ராஜேஸ்வரியின் அம்சத்தில் உள்ள ஶ்ரீவித்யா கணபதி.

**மிதுனம்:** பல்வேறு திறமையை உடைய உங்களின் திறமைக்கும் வளர்ச்சிக்கும் மறைமுகமாக வந்து சேர்கின்ற தாக்குதல்களிலி ருந்து விடுபட நீங்கள் வழிபட வேண்டியவர் லட்சுமி கணபதி.

**கடகம்:** நீங்கள் ஒரு நேரம் சாந்தம் ஒரு நேரம் கோபம் என முகத் தில் நவரசத்தையும் காட்டுபவர். நீங்கள் அமைதியான முறையில் அடுத்தவர்களை வழிநடத்தும் திறன் மிக்கவர்கள். நீங்கள் வழிபட வேண் டியவர் ஹேரம்ப கணபதி.

**சிம்மம்:** இயற்கையில் தைரிய குணமிக்க உங்களுக்கு என்றுமே வெற்றித் திருமகள் துணை நிற்பாள். அசாத்தியமான மனவலிமையுடன் என்றென் றும் வெற்றியினை ருசித்து வரும் நீங்கள் வழிபட வேண்டியர் விஜய கண பதி.

**கன்னி:** மென்மையான குணத்தினை உடையவர் நீங்கள். உங்களின் வாழ்க்கைத் துணையுடன் இணைந்து செயல்படும்போது உங்களை வெல்ல எவராலும் இயலாது. உங்களின் வழிபாட்டிற்குரிய மோகன கணபதி.



**துலாம்:** அயராத உழைப்பினை உடைய நீங்கள், மேற்கொண்ட லட்சியத்தினை அடையும் வரை ஓயமாட்டீர்கள். உங்களின் வழி பாட்டிற்கு உரியவர் வெற்றி கணபதி.

**விருச்சிகம்:** மிகவும் சுறுசுறுப்பான குணத்தினை உடைய நீங்கள் ஓரிடத்தில் அமர்ந்திருக்காது. சதா பணியாற்றிக் கொண்டிருப்பாவர் கள். எப்போதும் பரபரப்புடன் இயங்கி வரும் நீங்கள் வழிபட வேண் டியர் சக்தி கணபதி.

**தனுசு:** குருபகவானின் ஆதிக்கத்தை பெற்ற நீங்கள் நேர்மையை மிகவும் நேசிப்பவர்கள். தர்மநெறியில் செல்வதால் அடிக்கடி தர்ம சங்கடத்தை சந்தித்து வரும் உங்களுக்கு சங்கடஹர கணபதியே வழிபாட்டிற்கு உகந்தவர்.

**மகரம்:** தியாக உள்ளம் கொண்டவர் நீங்கள். உங்கள் மனதினை அடக்கியான கற்றுக் கொண்டீர்களேயானால் வெற்றி நிச்சயம் நீங்கள் வழிபட வேண்டியர் யோகக் கணபதி.

**கும்பம்:** புதிய விஷயங்களையும் எளிதில் கற்றுக்கொள்ளும் தனித்திறமை பெற்றவர் நீங் கள். அனுபவ அறிவின் மூலமாக அடுத்தவர்களை அடக்கியாள நினைப்பீர்கள். நீங்கள் வழிபட வேண்டியவர் சித்திக் கணபதி.

**மீனம்:** கள்ளம், கபடம் இல்லாத குழந்தைத்தனமான குணத்தினை உடையர்வகள் நீங்கள். தான் நினைத்ததை அடைந்துவிடவேண்டும் என்ற பிடிவாத குணத்தினை உடையவர்கள். உங்களுடைய வழிபாட்டிற்கு உரியவர் பாலக் கணபதி.

# ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 27

ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இணுவிலில் ஒருவரை நேற்றுக் கைது செய்துள்ளோம் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 50 மில்லிக் கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டது. விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26)

# வவுனியாவில் இன்று மஹிந்த ராஜபக்ஷ!

வவுனியா இரட்டை பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள பரகும் மகா வித்தியாலத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று வருகை தரவுள்ளார். குறித்த பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடம் ஒன்றை இன்று காலை திறந்து வைப்பதுடன், பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் முதன்மை அமைச்சராக பதவி ஏற்றபின்பு மஹிந்த வடக்குக்கு மேற்கொள்ளும் முதல் பயணமாக இது அமைந்துள்ளது. (ம-110)

## பிளவுக்கே...

தமிழ்மொழியில் தேசிய கீதம் பாட வேண்டாம் எனவும், தனிச் சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம் பாட வேண்டும் எனவும் அரசு கூறுவதானது மீண்டும் இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்த வித்திடுவதாக அமையும்' இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகளில் நாம் இன்று (நேற்று) கலந்துகொண்டிருந்தோம். வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பிரதேசத்தில் நான் கலந்துகொண்டிருந்த நிகழ்வில் தேசியகீதம் சிங்கள மொழியில் மாத்திரம் பாடப்பட்டது.

அந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியும் இருந்தார். இதுவரை காலமாக தமிழில் பாடப்பட்ட தேசிய கீதமானது இப்போது புதிய அரசு வந்த பின்னர் நிறுத்தப்பட்டுள்ளது. இன்று தமிழ் மக்கள் முழுமையாகப் புறக்கணிக்கப்படும் விதத்தில் இந்த அரசு செயற்படுகின்றது. இதனை நான் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி முன்னிலையிலேயே கூறினேன். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்து அமைத்துள்ள புதிய அரசு செய்துவரும் மாற்றங்கள் எதுவும் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

நாம் கடந்த காலங்களில் நல்லிணக்கம் உருவாக்கப்பட வேண்டும், தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் மிகவும் பொறுமையாகச் செயற்பட்டு பேச்சுகள் மூலமாக சுமுகமாக நிலைமைகளைக் கையாண்டு வந்தோம். ஆனால், இன்று அரசு தமிழ் மக்களை இலக்கு வைத்து முன்னெடுக்கும் செயற்பாடுகள் தமிழ் மக்களை பொறுமை இழக்க வைக்கும் விதத்தில் அமைகின்றது.

'இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த போதிலும் தமிழ் மக்களுக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை' என்று தந்தை செல்வா ஒருமுறை கூறினார். அதை மீண்டும் மீண்டும் உறுதிப்படும் வகையில் இந்த அரசு செயற்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் தமிழ் மக்கள் நிம்மதியாகச் சுவாசிக்க சற்று இடம் கிடைத்தது. அதற்குள் மீண்டும் இந்த அரசு இனவாதம், பிரிவினைவாதக் கொள்கைகளை முன்னிறுத்தி தமிழ் இனத்தை ஓரங்கட்ட நினைக்கின்றது. இந்த நாட்டில் பிளவுகள் ஏற்பட வேறு யாரும் காரணம் அல்ல. அரசே இவை அனைத்துக்கும் பொறுப்புக்கூற வேண்டும்.

ஒருவேளை வருகின்ற சுதந்திர தினத்தன்று தமிழ் மொழியில் தேசிய கீதம் பாட வேண்டாம் என அரசு கூறுமானால் அன்றில் இருந்து இந்த நாட்டில் இன முரண்பாடுகள் மற்றும் பிளவுகள் பலமடையும் என்பதை ஜனாதிபதிக்கும் இந்த அரசுக்கும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்' - என்றார். (ம-22)

## பொலிஸாருக்கு...

யாணை பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்னவைத் தேடிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து கொழும்பு 07இல் உள்ள அவரதுவீட்டைநேற்றும்முற்றுகையிட்டுச் சோதனை நடத்தினர்.

ஜனாதிபதித் தேர்தல் காலமான கடந்த நவம்பர் 10ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை இரு நபர்களுடன் இணைந்து நடத்தி வெள்ளை வான் கடத்தல் தொடர்பில் போலியான விடயங்களை முன்வைத்தார் என்று ராஜித சேனாரத்னவுக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவைக் கைதுசெய்யுமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தது. சட்டமா அதிபர் திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தின் மேலதிக நீதிவான் பண்டார நெலும் தெனிய இந்த உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

அதற்கிணங்க குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று, நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.15 மணியளவில் கொழும்பு 07இல் உள்ள ராஜிதவின் வீட்டுக்குச் சென்று சோதனை நடத்தினர். சுமார் 20 நிமிடங்களின் பின்னர் அவர்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர். அந்தச் சந்தர்ப்பத்தில் ராஜித வீட்டில் இருக்கவில்லை எனத் தகவல் வெளியானது.

அத்துடன், ராஜிதவுக்குச் சொந்தமான பேருவளை - ஹெட்டிமுல்ல பிரதேசத்திலுள்ள வீட்டையும் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் மாலை சோதனையிட்டனர். இந்தச் சோதனை நடவடிக்கைகளின்போது வீட்டிலிருந்த காவலாளியிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறிருக்க நேற்றும் ராஜிதவைத் தேடிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து கொழும்பு 07இல் உள்ள அவரது வீட்டை முற்றுகையிட்டுச் சோதனை நடத்தினர். எனினும், ராஜித அங்கு இருக்கவில்லை.

இந்த நிலையில், தன்னைக் கைது செய்யுமாறு கோரி பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணையை மீள அழைக்குமாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் சார்பில், மனுவொன்று நேற்று தாக்கல் செய்யப்பட்டு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்பிணை கோரி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் மூன்றாவது தடவையாக ராஜித சேனாரத்ன தாக்கல் செய்திருந்த மனு எதிர்வரும் 30ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## நல்லிணக்கத்துக்கு...

தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் ஐக்கிய தேசியக்கட்சி உள்ளது என்று அந்தக் கட்சியின் உப தலைவரான ரவி கருணாநாயக்க 'உதயனிடம்' தெரிவித்தார்.

இலங்கையின் 72ஆவது சுதந்திர தின நிகழ்வு 2020ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி கொழும்பு, சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது சிங்கள மொழியில் மட்டும் தேசிய கீதம் இசைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'தனக்குப் புரிந்த தாய்மொழியில் தேசிய கீதம் பாடப்படும்போதுதான் தேசம் மீதான பற்று உணர்வுடன் கலக்கின்றது. அது நல்லிணக்கத்தையும் வலுப்படுத்தும். இதனை உணர்ந்துதான் ஐக்கிய தேசியக்கட்சி அரசு இருமொழிகளிலும் தேசிய கீதத்தை இசைக்கும் நடைமுறையை சுதந்திர தினத்தில்கூட பின்பற்றியது. எனவே, அந்த நடைமுறையை புதிய அரசும் கடைபிடிப்பதே சிறந்த அணுகுமுறையாக அமையும். இலங்கையின் அரசமைப்பில் இரு மொழிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அந்த மொழிகள் ஊடாக தேசிய கீதம் இசைப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை. சுதந்திர தினத்தில் தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டும்தான் இசைக்கப்படும் என்று அரச தரப்பிலிருந்து இன்னும் அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியாகவில்லை. அவ்வாறு வெளியான பின்னர் எமது அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் என்னவென அறிவிக்கப்படும். எது எப்படியிருந்த போதிலும் இரு மொழிகளிலும் தான் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம்'- என்றார். (ஒ,5,44)

## தீ...

தொகுதியில் நேற்று மாலை ஏற்பட்ட தீயால் 3 விற்பனை நிலையங்கள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளன.

மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையம், காலணி விற்பனை நிலையம், களஞ்சியம் ஆகியனவே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளன. யாழ் மாநகர சபை தீயணைப்பு பிரிவினர், பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு இழப்பு ஏற்பட்டது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-9,159,131,26)

## அகாலச்...

லிருந்த குப்பையைக் கொழுத்துவதற்காக வீட்டிலிருந்த குப்பி விளக்கை கொழுத்தி கொண்டு சென்ற பொழுது வீட்டுக்குள்ளேயே குப்பி விளக்கு தவறி அவர் மேலேயே விழுந்து தீப்பற்றியுள்ளது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

**அச்சுவேலி**

அச்சுவேலியில் வசித்துவந்த கசிபன் கீர்த்தனா (வயது- 29) என்ற குடும்பப் பெண் தீக்காயங்களுக்கு ஆளாகியிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார். நான்கு வயது ஆண்பிள்ளையின் தாயான இவர் கடந்த 18ஆம் திகதி தீக்காயங்களுக்கு உட்பட்டிருந்தார். மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தபோதிலும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

**கொழும்புத்துறை**

கொழும்புத் துறையைச் சேர்ந்த சின்னத்துரை யோகராணி (வயது- 65) என்ற பெண் நேற்று கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். குறித்த நபரை நீண்ட நேரமாகக் காணவில்லை என்று தேடியபோது அவர் கிணற்றுக்குள் விழுந்திருப்பது தெரியவந்தது. உடனடியாக அவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்த போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி ஊரியான் குளத்தில் மகனுடன் நீச்சலிட சென்றவர் சடலமாக மீட்கப்பட்டார். கிளிநொச்சி முரசுமோட்டையை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் நவநீதன் (வயது- 41) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று நண்பகல் ஒரு மணியளவில் மகனுடன் குளிக்க சென்றவர் குளத்தில் காணாமல் போயுள்ளார். பொலிசார் மற்றும் கிராம அலுவலருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவரை முதலை இழுத்து சென்றதாக நம்பப்பட்டு பொது மக்களுடன் இராணுவத்தினரும் தொடர்ந்து தேடிய நிலையில் நீண்ட நேரத்தின் பின் காணமல் போனவர் சடலமாக மீட்கப்பட்டார்.

(ம-26,6,213,104,9,159,7)






# இன்றைய நாள்

**மேடம்:** மாறுபட்ட சூழ்நிலை தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் புதிய அணுகு முறையால் வளர்ச்சி ஏற்படும். பண பரிவர்த்தனையில் பாதுகாப்பு பின்பற்றவும். சீரான ஓய்வு உடல் நலம் காக்கும்.

**இடபம்:** பொறாமை மனதுடன் பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் வருகிற இடையூறுகளை தாமதமின்றி சரிசெய்யவும். பண வரவை விட செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

**மிதுனம்:** நண்பர் சொன்ன கருத்தின் நியாயத்தை உணருவீர்கள். மனம், செயலில் நல்லதொரு மாற்றம் உருவாகும். சுய கௌரவம் பாதுகாக்க தாராள அளவில் பணம் செலவு செய்வீர்கள்.

**கடகம்:** செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். ஆதாய பண வரவு கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு உண்டாகும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிம்மம்:** நண்பரின் கருத்துகளை ஏற்க தயங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் வேலைபளு அதிகரிக்கும். சேமிப்பு பணம் செலவுகளுக்கு பயன்படும். குடும்பத்தில் ஒற்றுமை மிகவும் தேவையாகும்.

**கன்னி:** உங்கள் மனதில் அகந்தை வராமல் தவிர்க்கவும். பணிகளில் கூடுதல் கவனம் வேண்டும். தொழிலில் உற்பத்தி, விற்பனை இலக்கை அடைய கால அவகாசம் தேவைப்படும். அளவான பண வரவு கிடைக்கும்.

**துலாம்:** விவகாரங்களில் சுமுக தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம்:** சி லர் உங்களை புகழ்ந்து பேசுவர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திக்கான பணம் கிடைக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள்.

**தனுசு:** உற்சாக மனதுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். பெறுகிற நன்மையின் அளவு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி வந்து சேரும்.

**மகரம்:** சிலர் சொல்லும் ஆலோசனை சங்கடம் உருவாக்கும். செயல்களில் நிதானம் வேண்டும். கூடுதல் உழைப்பால் தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராகும்.

**கும்பம்:** நிம்மதி நிறைந்த வாழ்வியல் சூழல் உருவாகும். தொழில் அபிவிருத்தியில் புதிய வளர்ச்சி பரிமாணம் ஏற்படும். பண வரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**மீனம்:** நண்பருக்கு இயன்ற அளவில் உதவி புரிவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூல காரணி பலம் பெறும். தாராள அளவில் பண வரவு கிடைக்கும்.





# பாலன் பிறந்த மண்ணில் எழுச்சிக் கொண்டாட்டம்

ஜெருசலேம், டிசெ. 27

இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினமான டிசெம்பர் 25ஆம் திகதி உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்களால் கிறிஸ்மஸ் திருநாள் ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிறது.

அவர் பிறந்த் பெத்லகேம் நகரம் தற்போது இஸ்ரேல் நாட்டு ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. இயேசு கிறிஸ்து பிறந்த மாட்டுத் தொழுவம் அமைந்திருந்த இடத்தின் அருகாமையில் மிகப்பழமை யான தேவாலயம் அமைந்துள்ளது.

'யுனெஸ்கோ' நிறுவனத்தால் உலகின் பழங்கால நினை வுச்சின்னமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இந்த தேவாலயத்தை தரிசிக்கவும், இங்கு வழிபடவும் ஆண்டுதோறும் உலகம் முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான மக்கள் வந்து செல்கின்றனர்.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மிகவும் மூத்த தலைலமை மதகுருவான ஆர்ச்பிஷப் பியர்பட்டிஸ்ட்ட பிஸ்ஸபல்லா தலைமையில் இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினமான டிசெம்பர் 25ஆம் திகதியான நேற்றுமுன்தினம் இஸ்ரேல் நாட்டில் உள்ள மக்களும், வெளிநாடுகளை சேர்ந்தவர்களும் 'நேட்டிவிட்டி' தேவாலயத்தில் நடைபெற்ற கிறிஸ்மஸ் தின சிறப்பு ஆராதனை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, துதி பாடல்களைப் பாடி, மனமுருகிப் பிரார்த்தனை செய்தனர். பாலஸ்தீனம் நாட்டின் தலைவர் மஹ்மூத் அப்பாஸசம் இதில் பங்கேற்றார். சரியாக நள்ளிரவு 12 மணிக்கு பெத்லகேம் நகரம் முழுவதும் மணியோசை ஒலித்தது. தேவாலயத்தின் வாசலில் மின் விளக்கு அலங்காரத்தில் ஜொலித்த 15 மீற்றர் உயரமுள்ள கிறிஸ்மஸ் மரத்தின் முன்னால் சிலர் குழுவாக நின்று 'செல்பி' எடுத்து மகிழ்ந்தனர். (ஒ.5)



# பிரேசில் ஜனாதிபதி வழுக்கி விழுந்ததால் நினைவிழந்தார்

பிரேசிலியா, டிசெ. 27

பிரேசில் நாட்டின் தலைநகர் பிரேசிலியாவில் உள்ள அல்வொராடா மாளிகையில் அந்த நாட்டின் ஜனாதிபதி ஜெயீர் போல்சனரோ குடும்பத்துடன் வசித்து வருகிறார். கடந்த திங்கட்கிழமை இரவு மாளிகையில் உள்ள குளியலறைக்கு சென்ற போல்சனரோ திடீரென வழுக்கி விழுந்தார். அவருக்கு பின் தலையில் அடிபட்டது.

அவர் உடனடியாக பிரேசிலியாவில் உள்ள இராணுவ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். சுமார் 10 மணி நேரம் மருத்துவர்களின் கவனிப்பில் இருந்த அவர் பின்னர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பினார். இது குறித்து போல்சனரோ தனியார் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்தார்.

'என் தலை தரையில் மோதியதால் நான் நேற்று என்ன செய்தேன் என்பது உள்பட பழைய நினைவுகள் அனைத்தையும் இழந்துவிட்டேன். சிகிச்சைக்கு பிறகே படிப்படியாக எனது நினைவுகளை மீட்டெடுத்தேன். தற்போது தான் நலமாக இருக்கிறேன். கடவுளுக்கு நன்றி' என கூறினார். கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரையின்போது போல்சனரோ கத்தியால் குத்தப்பட்டமை நினைவுகூரத்தக்கது. (ஒ.5)

## பிலிப்பைன்ஸில் புயல் தாண்டவம்

# கிறிஸ்மஸ் நாளில் பெரும் சோகம்

மணிலா, டிசெ. 27

பிலிப்பைன்ஸ் நாட்டில் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை குலைக்கும் வகையில், சக்திவாய்ந்த பான்போன் புயல் தாக்கியது. நாட்டின் மத்திய பகுதியில் உள்ள தொலைதூர கிராமங்கள் மற்றும் கடற்கரைகள் உள்ளிட்ட பிரபல சுற்றுலா மையங்களை புயல் தாக்கியது.



மணிக்கு 195 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியதுடன், பலத்த மழையும் பெய்தது. இதன் காரணமாக கடலோரப் பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. புயலால் ஏராளமான வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. மின் கம்பங்கள், மரங்கள் சாய்ந்தன. பல்வேறு பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மோசமாகப் பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் இணையதளம் மற்றும் செல்போன் வசதிகளும் துண்டிக்கப்பட்டன. விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. தொடர்ந்து மழை பெய்து வருகிறது. விசாயாஸ் தீவுகளைச் சேர்ந்த கிராமங்கள் மற்றும் நகரங்களில், புயலால் 16 பேர் உயிரிழந்திருக்கின்றனர் என்று அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். புயல் தாக்குவதற்கு முன்பாக, 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள், வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஒ.5)

# சோழர்கள் - சிங்கப்பூர் தொடர்பு ஆயிரம் ஆண்டுகள் முந்தியது

## ஆய்வில் கண்டறிவு



**சிங்கப்பூர், டிசெ. 27**

**ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர் வரலாற்று ஆராய்ச்சியாளர் இயன் சின்கிளேர். சிங்கப்பூரில் கடந்த 7ஆம் திகதி சிங்கப்பூர் - இந்தியா பாரம்பரிய மையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசினார்.**

சிங்கப்பூருக்கும், தமிழகத்தை ஆண்ட சோழ வம்சத்துக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்த வர்த்தக, அரசியல் தொடர்பு குறித்து அவர் கருத்தரங்கில் விளக்கினார்.

அவர் தெரிவித்ததாவது:


சிங்கப்பூரில் கிடைத்த பழமையான கல் தொடர்பில் எனக்குத் தகவல் கிடைத்தது. அதன்படி 1843ஆம் ஆண்டு சிங்கப்பூர் ஆற்றின் கரையில் மிகப்பெரிய பாறைகள் இருந்தன. அப்போது படகுகள் சென்று வர வசதியாக சிங்கப்பூர் ஆற்றின் கரையில் இருந்த பாறைகளை அப்போது சிங்கப்பூரை ஆண்ட பிரிட்டிஷ்; உடைத்து எறிந்தது.

பாறையிலிருந்து ஒரு பகுதி மட்டும் கிடைத்தது. அந்தத் துண்டுப் பாறையில் பழங்கால கல்வெட்டு வாசகங்கள் இருந்தன. கல்வெட்டு வாசகங்கள் அடங்கிய அந்தப் பாறைத் துண்டு 'சிங்கப்பூர் ஸ்டோன்' என்றே அழைக்கப்படுகிறது. அதில் இருந்த கல்வெட்டு வாசகங்களை யாராலும் சரியாக படித்து அறிந்துகொள்ள முடியவில்லை. இந்தக் கல்வெட்டு எழுத்துக்கள் 'கவி' என்று அழைக்கப்படுகின்றன.



தற்போது அந்த வாசகங்களைக் கண்டறிந்துள்ளோம். அதில் 'கேசரிவ'என்ற எழுத்து இருந்தது தெரியவந்துள்ளது. உடைந்த பகுதியாதலால் அதில்பாதியளவு எழுத்துகள் மட்டுமே இருந்தன. இதில் கேசரிவ என்று குறிப்பிடப்படுவது தமிழ்நாட்டைச் சேர்ந்த சோழ அரசர்களின் பட்டங்களாகும். பிற்காலச் சோழர்கள் தங்கள் பெயருக்கு முன்னால் ராஜகேசரி, பரகேசரிவர்மன் என்ற பெயரை பட்டமாக சூட்டிக் கொண்டனர்.

இந்தக் கல்வெட்டானது சோழ வம்சத்துக்கும், சிங்கப்பூருக்கும் இருந்த தொடர்பைக் குறிக்கிறது என்பது புலனாகிறது. இதன்மூலம் சிங்கப்பூருக்கும், சோழ வம்சத்துக்கும் இடையே வர்த்தகத் தொடர்பு, அரசியல் தொடர்பு இருந்தது தெரியவருகிறது. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே சோழ வம்சத்துக்கும், சிங்கப்பூருக்கும் இடையே தொடர்பு இருந்தது தெட்டத்தெளிவாகப் புலனாகிறது. இந்தக் கல்வெட்டானது 11ஆம் நூற்றாண்டில் வடிக்கப்பட்டதாக இருக்கலாம். (ஒ.5)



# கொள்ளையடித்த பணத்தை வீசியெறிந்த கொள்ளையன்

வொஷிங்டன், டிசெ. 27

அமெரிக்காவில் வங்கியில் கொள்ளையடித்த பணத்தை பொது மக்களை நோக்கி வீசியெறிந்த முதியவரை பொலஜஸார் கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தில் வங்கியில் புகுந்த முதியவர் தன்னிடம் பயங்கர ஆயுதம் இருப்பதாகக் கூறி ஊழியர்களை மிரட்டி பல லட்சம் டொலர்களைக் கொள்ளையடித்தார். பொதி நிறைய பணத்துடன் வெளியே வந்த அவர் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடத்துக்குச் சென்று டொலர்களை அள்ளி வீசியுள்ளார்.

'வெள்ளைத் தாடியுடன் காணப்பட்ட அந்த முதியவர் திடீரென்று கத்தை கத்தையாக டொலர்களை அள்ளி வீசியதும் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. நான் உட்பட அங்கிருந்தோர் அனைவரும் விழுந்தடித்து பணத்தை எடுத்தோம். அந்த முதியவர் 'எல்லோரும் சந்தோசமாக கிறிஸ்மஸ் கொண்டாடுங்க' என்று கூறிவிட்டு மாயமானார் என சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் அதிகாரி ஒருவர், முதியவர் பணத்தை கொள்ளையடித்த தகவல் கிடைத்ததும் வங்கிக்கு சென்று ஆய்வு செய்து விட்டு பணத்தை அள்ளி வீசிய இடத்தில் விசாரித்தோம். இதைத் தொடர்ந்து அந்த முதியவரை தேடிய போது அவர் ஒரு கடையில் தேநீர் அருந்திக் கொண்டிருந்ததைக் கண்டோம்.

உடனே அவரை கைது செய்தோம். அவர் பெயர் டேவிட் வேன் ஒலிவர். அனைவரும் சந்தோசமாக கிறிஸ்மஸ் கொண்டாட வங்கியில் கொள்ளையடித்ததாக ஒப்புக் கொண்டார். இப்போது அவர் சிறையில் கிறிஸ்மஸ் கொண்டாடுகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

இதனிடையே முதியவரின் பணத்தை எடுத்த பலர் பொலிஸ் விசாரணைக்கு அஞ்சி வங்கியில் பணத்தை திரும்ப ஒப்படைத்துள்ளனர். ஆனால் 'பல லட்சங்கள் இன்னும் வந்து சேரவில்லை' என்று வங்கி தெரிவித்துள்ளது. (ஒ.5)

## அச்சு அசலாக

# மைக்கல் ஜக்சன் மாதிரி இருக்கிறாரே!





பார்சிலோனா, டிசெ. 27

பொப் உலக மன்னன் மைக்கல் ஜக்சன். இவருக்கு உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர். 2009ஆம் ஆண்டு, மருந்துகளை அளவுக்கு அதிகமாக உட்கொண்டதால் உயிரிழந்தார்.

இந்த நிலையில் அர்ஜென்டினாவின் பார்சிலோனாவில் பிறந்தவரும், தற்போது பொப் உலகில் வளர்ந்து வரும் கலைஞரான செர்ஜியோ கோர்டெஸ், மைக்கல் ஜக்சனின் உருவத்துடன் அச்சு அசலாக உள்ளார்.

உலகம் முழுவதும் பல்வேறு இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்று மைக்கல் ஜக்சனின் பாடல்களுக்கு நடனம் ஆடி வருகிறார். மைக்கல் ஜக்சனின் தோற்றத்துடன் இருக்கும் செர்ஜியோ கோர்டெஸ் தற்போது புகழ்பெற்று வருகிறார்.

செர்ஜியோ கோர்டெஸ் வெளியிட்ட வீடியோ சமூக வலைதளங்களில் பரவியது. அதில் அவர், அனைத்து மைக்கல் ஜக்சன் ரசிகர்களுக்கும் வணக்கம். நான் உங்களை நேசிக்கிறேன். எனது இசை நிகழ்ச்சியை பாருங்கள் என்று கூறி இருந்தார்.

இந்த நிலையில் செர்ஜியோ கோர்டெஸ் தான், உண்மையான மைக்கல் ஜக்சன் என்று ரசிகர்கள் சந்தேகத்தை எழுப்பி உள்ளனர். மைக்கல் ஜக்சன் மறைந்து வாழ்வதற்காக தான் இறந்து விட்டதாக நாடகம் ஆடுகிறார் என்றும் செர்ஜியோ கோர்டெஸ் தான் மைக்கல் ஜக்சன் இல்லை என்பதை நிரூபிக்க டி.என்.ஏ. பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் ரசிகர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

செர்ஜியோ கோர்டெஸ், என்னை பார்த்த ஒரு பத்திரிகையாளர், நான் மைக்கல் ஜக்சன் தோற்றத்தில் இருப்பதாக கூறினார். என்னை மைக்கல் ஜக்சன் போன்று அழகுபடுத்தி அவரது பத்திரிக்கையில் வெளியிட விரும்பினார்.

நான் அதை வேடிக்கையாக செய்தேன். பின்னர் அவர் என்னை சில சுவிஸ் தயாரிப்பாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார். அவர்கள் எனது புகைப்படத்தை வாசனை திரவிய விற்பனைக்கு பயன்படுத்த விரும்பினர். இது எல்லாம் எனது அன்றாட வாழ்க்கையில் தற்செயலாக நடந்தது, என்றார். (ஒ.5)

## கண்ணீர் அஞ்சலிகள்

### ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்

**[நூலகர்- யாழ்ப்பாணப் பல்கலைக்-கழக நூலகம், முன்னைநாள் தலைவர்- இலங்கை நூலகச் சங்கம், நிறுவுனர்- நூலக விழிப்புணர்வு நிறுவகம், இயக்குநர் - அறிவுதூண்டல் மையம்]**



தோற்றம் 08.04.1961 மறைவு 25.12.2019

25.12.2019 புதன்கிழமை காலமான ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.12.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 5 மணிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இறுதிமரியாதைக்காக வைக்கப்படுமென்பதை அறியத்தருகின்றோம்.

**நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## மினி ஒலிம்பிக் தேசிய எறிபந்தாட்ட அணியில்

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவிகள் ஐவர்



யாழ்ப்பாணம்,டிசெ.27

பாடசாலைகளுக்கு இடையிலான இரண்டாவது ஆசிய மினி ஒலிம்பிக் எறிபந்தாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவிகள் ஐவர் இலங்கைப் பாடசாலைகள்தேசிய அணியில்விளையாடவுள்ளனர்.

இரண்டாவது ஆசிய மினி ஒலிம்பிக் போட்டிகளின் ஓர் அங்கமான எறிபந்தாட்டத் தொடர் இன்று தொடக்கம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை மலேசியாவில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் இலங்கை பாடசாலைகள் தேசிய அணியைப் பிரதிநிதித்துவம் செய்த தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவிகளான பா.சதுர்ஜா, ப.ரேணுகா, க.றம்மியா, ஈ.டக்சனா, த.குயின்சிகா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பெண்கள் அணி கடந்த வருடம் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட போட்டிகளில் 17 வயதுப் பிரிவினர் தங்கப் பதக்கத்தையும், 20 வயதுப் பிரிவினர் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (23-422)

## மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை நாளைமறுதினம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை நாளையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

இதில் 28ஆம் திகதி காலை 6 மணிக்கு அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் மத்தியஸ்தர்களுக்கான வகுப்புகள் இடம்பெறும். ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் உடற்தகுதி காண் பரீட்சை இடம்பெறவுள்ளது என யாழ்.கால்பந்தாட்ட லீக்கின் செயலர் அஜித்குமார் தெரிவித்துள்ளார்.(23)


## றேஞ்சர்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.27

சூரியமஹால் அனுசரணையுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 7பேர் பங்கு பற்றும் வைத்தியர் மயில்லேறும் பெருமாள் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றுமொரு ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி 6 :1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)





## இலங்கை – இந்திய போட்டிக்கு ரிக்கெட் விலை ரூ.500

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையேயான ரி-20 தொடருக்கு இந்திய ரூபாய் மதிப்பில் ரூபா 500 விலையில் ரிக்கெட் விற்பனை செய்யப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அணி ஜனவரி மாதம் இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20 போட்டிகளில் விளையாடவுள்ளது.


இந்தப் போட்டி இடம்பெறும் இந்தூர் ஹோல்கர் மைதானம் 27 ஆயிரம் இருக்கை வசதி கொண்டது. இந்த ஆட்டத்துக்கான குறைந்த பட்ச ரிக்கெட் இந்திய ரூபா மதிப்பில் ரூ.500க்கும், அதிகபட்சமாக ரூ.4,920க்கும் விற்கப்படவுள்ளன.

## பூப்பந்தாட்ட லீக் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.27

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையிலான "லேடன் பூப்பந்தாட்ட லீக்" பூப்பந்தாட்ட தொடர் நாளை சனி மற்றும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை அரியாலை சரஸ்வதி சன சமூக நிலைய உள்ளக அரங்கில் இடம் பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் வெற்றி பெற்று முதலாமிடம் ப்பெறும் அணிக்கு 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும், இரண்டாம் இடம்பெறும் அணிக்கு 30 ஆயிரம் பணப் பரிசும், மூன்றாம் இடம் பெறும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணப் பரிசும்,தனிநபர்களுக்கு விருதுகளும் வழங்கப்படவுள்ளன. (23)



### டோனி ரசிகர்களால்

## யாழ். மருத்துவமனையில் இரத்த தானம் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.27


மகேந்திர சிங் டோனி இந்திய அணிக்காக விளையாட ஆரம்பித்து 15 ஆண்டு நிறைவு பூர்த்தியை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள டோனி ரசிகர் மன்றத்தினர் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்த தானம் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கைதடி சாந்தி முதியோர் இல்ல முதியோருக்கு மதிய உணவும் வழங்கினர் யாழ்ப்பாண டோனி ரசிகர் மன்றத்தினர். தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக இவ்வாறான நற்செயல்களில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (23)



### லாபஸ்சாக்னே, ஸ்டீவ் சிமித் அரைச்சதம் அடித்தும்

# முதல்நாளில் 257 ஓட்டங்களையே எட்ட முடிந்தது ஆஸ்திரேலியாவால்




லாபஸ்சாக்னே, சிமித் அரைச்சதம் அடித்தாலும் நிதானமான ஆட்டத்தால் முதல் நாளில் 4 இலக்குகளை இழந்து 257 ஓட்டங்களே சேர்க்க முடிந்தது ஆஸ்திரேலியா அணியால்.

நியூசிலாந்து அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்று 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ள நிலையில் இரு அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் நேற்று ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் ஆஸ்திரேலியா அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. ஆஸ்திரேலியா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வோர்னர், பேர்ன்ஸ் களமிறங்கினர். களமிறங்கி அணி ஓர் ஓட்டத்தை பெற்ற நிலையில் அணியின் முதலாவது இலக்கைச் சரித்தார் போல்ட். பேர்ன்ஸ் ஓட்டமெதனையும் பெறாது போல்ட் செய்யப்பட்டு வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினார். இணைந்தார் லாபஸ்சாக்னே. இருவரும் பொறுப்புடன் ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். வோர்னர் தனது அரைச் சதத்தைத் தவற விட்டு 41 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்தார் சிமித். இவர் லாபஸ்சாக்னேயுடன் இணைந்து நல்லதொரு இணைப்பாட்டத்தை அணிக்கு வழங்கினார். இவர்கள் இருவரின் இணைப்பாட்டத்தை நியூசிலாந்து பந்துவீச்சாளர்களால் எளிதில் பிரிக்க முடியவில்லை. இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் ஓட்டங்களை பெரிதாகக் குவிக்க முடியாமல் போனது. லாபஸ்சாக்னே 63 ஓட்டங்களில் ஆட்டமிழக்க அணி 144 ஓட்டங்களையே எட்டியது. அணி நேற்றைய நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றது. சிமித் 77 ஓட்டங்களுடனும், ட்ராவிஸ் ஹெட் 25 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர்.

பந்து வீச்சில் கிராண்ட்ஸ்ஹோம் 2 இலக்குகளையும், போல்ட், வாக்னர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



### இங்கிலாந்து அணியின் பந்து வீச்சால்

# முதல் நாளே தடுமாறும் தென்னாபிரிக்கா அணி



இங்கிலாந்து அணியின் பந்து வீச்சாளர்கள் இலக்குகளைச் சரிக்க தென்னாபிரிக்கா அணி முதல்நாள் முடிவில் 277 ஓட்டங்களுக்குள் 9 இலக்குகளை இழந்து தடுமாறி வருகின்றது.

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் போட்டிகள், ஒரு ரி-20 போட்டிகளில் விளையாடுகின்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று செஞ்சூரியனில் ஆரம்பமாகியது.

பூவா, தலையா பார்த்ததில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்று முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. தென்னாபிரிக்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக எல்கர், மார்க்கரம் களமிறங்கினர். களமிறங்கிய முதல் பந்திலேயே அணி ஓட்டமெதனையும் பெறாது முதலாவது இலக்குச் சரிக்கப்பட்டது. அது தென்னாபிரிக்கா அணிக்கு பெரும் இக்கட்டாக அமைந்தது. அன்டர்சன் முதலாவது இலக்கைக் கைப்பற்றி இங்கிலாந்து அணிக்கு புதிய உத்வேகத்தை அளித்தார். அடுத்து இணைந்த ஹம்சா, மார்க்கரம் இணை ஓரளவு நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அணி 100 ஓட்டங்க்ளை எட்டுவதற்குள்ளேயே 4 இலக்குகள் சரிக்கப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் பந்துகளை அளவுக்கதிகமாக வீணடித்து ஓட்டங்களைப் பெற்றதைக் காணக் கூடியதாக இருந்தது. தென்னாபிரிக்கா வீரர்கள் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்களே தவிர ஓட்டங்களை சேர்ப்பதில் கவனம் செலுத்தவில்லை. ஒருமுனையில் டீ குக் அணியின் நிலை உணர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்தார். அவரும் 95 ஓட்டங்களைப் பெற்று சதத்தைத் தவற விட்டு ஆட்டமிழந்து வெளியேற, பின்வரிசை வீரர்கள் ஓரளவு ஓட்டங்களைப் பெற அணி நேற்றைய நாள் முடிவில் 277 ஓட்டங்களுக்குள் 9 இலக்குகளை இழந்தது. பிலண்டர் 28 ஓட்டங்களுடன் களத்திலுள்ளார்.

பந்து வீச்சில் சாம் கரன் 4 இலக்குகளையும், புரோட் 3 இலக்குகளையும், அன்டர்சன், ஆர்ச்சர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



## மோசமான சாதனையை பதிவு செய்த டீன் எல்கர்

செஞ்சூரியன் டெஸ்டில் முதல் பந்தில் ஆட்டமிழந்ததன் மூலம் 21 வருட காலத்துக்குப் பின்னர் மோசமான சாதனையில் இணைந்தார் டீன் எல்கர்.

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான பாக்சிங் டே டெஸ்ட் செஞ்சூரியனில் நேற்று ஆரம்பமாகியது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டீன் எல்கர், மார்கிராம் களம் இறங்கினர். முதல் பந்துப்பரிமாற்றத்தை அன்டர்சன் வீசினார். முதல் பந்திலேயே டீன் எல்கர் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

இதன்மூலம் கேரி கிர்ஸ்டனுக்குப் பிறகு 21 ஆண்டுகளின் பின்னர் முதல் பந்தில் ஆட்டமிழந்த தென்னாபிரிக்கா வீரர் என்ற மோசமான சாதனையை பதிவு அவர் செய்துள்ளார்.

21 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிராக கேப்டவுனில் நடைபெற்ற போட்டியில் தென்னாபிரிக்கா வீரர் கேரி கிர்ஸ்டன், அம்புரோஸ் பந்தில் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

**SLAS-(OP/Ltd)**
இறுதிக்கருத்தரங்கு-02
29.12.2019 ஞாயிறு
9AM - 4PM
R. திரவியராஜ் SLAS
9AM - 3PM
(பொது விவேகம்)
முகாமைத்துவ விவேகம்
எதிர்பார்க்கை
வினாத்தாள் விடைகள்
3PM - 4.30PM
NEC
பெருமாள் கோவிலடி.
077 166 1986
077 111 6739

**SLAS (Op/Lt)**
இறுதிக் கருத்தரங்கு 1
28.12.2019 சனி
9Am-4Pm
P.கமல்தாசன் - SLPS
9Am-1.00Pm
எதிர்பார்க்கை
சுருக்கம், கட்டுரை,
தனிவாக்கியம்
S.இந்திரகுமார்
(இருமொழி மூல வளவாளர்)
1Pm-4.30Pm
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி
076 166 1986, 077 111 6739

**வேலையாள்கள் தேவை**
**வெல்டிங் வேக்**
தொடர்பு: 077 221 5167

**பணியாள்கள் தேவை**
தங்கிநின்று வீடு பராமரிப்பதற்கும்,
சமையல் வேலைகள் செய்வதற்கும்
பணியாள்கள்தேவை. (ஆண், பெண்
இருபாலாரும் விரும்பத்தக்கது)
077 251 4981, 077 251 4983, 077 251 4986

**வேலைவாய்ப்பு**
அனுபவம் வாய்ந்த **பைவர் கிளாஸ்**
வேலை தெரிந்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(ஆண், பெண்) இருபாலாரும்.
077 592 5088, 021 222 8680
இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

**SLAS Open & Limited**
உமாசங்கர்& வளவாளர்கள்
இறுதி கருத்தரங்கு தொடர் 3
- பொதுஅறிவு
- நுண்ணறிவு
- முகா.உளச்சார்பு
} உமாசங்கர்
- விடய ஆய்வு - சிவராசா
29.12.2019 ஞாயிறு
9am- 4.30 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
G.K Essay, SL, World
நூல் பெற்றுக்கொள்ளலாம்.
நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
076 166 1986, 077 741 7143

**SLAS Open & Limited**
உமாசங்கர்& வளவாளர்கள்
இறுதிக் கருத்தரங்கு தொடர் 2
- கிரகித்தல் - பௌநந்தி
- நுண்ணறிவு - நவநீதன்
28/12/2019 சனி
9am- 4.30 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
NEC கல்வி நிறுவனம்
மணிக்கூட்டு வீதி,
பெருமாள் கோயிலடி.
076 186 1986, 077 741 7143

**களஞ்சியசாலை தேவை**
நீண்டகால குத்தகை அல்லது வாடகைக்கு, ஆகக்குறைந்தது **5000** சதுரஅடிக்கு கூடிய விஸ்தீரணமுள்ள களஞ்சியசாலை யாழ் நகரில் இருந்து **10**கிலோ மீற்றர் சுற்று வட்டாரத்தில் தேவை. பிரதான சாலைகளுடன் போக்குவரத்துக்கான வசதிகளுடன் போதியளவு வாகன தரிப்பிட வசதிகளும் இருப்பது அவசியம். பாதுகாப்பு மதிலுடன் இருப்பது விரும்பத்தக்கது. வெள்ளத்தால் பாதிக்கப்படாத பகுதியாகவும் இருக்கவேண்டியது அவசியம்.
தொடர்பு:- 071 411 5002

FLC FRENCH LANGUAGE CENTRE
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
பிரெஞ்ச் Courses
V. Jegan (Trained in France) DELF A1,A2,B1,B2
40, பலாலி வீதி, ஸ்ரீரியகுளம், 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 04.01.20 சனி 10 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 ஆரம்பம் 20.01.20 3.30 மணி
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

**FACTORY FOR SALE - VAVUNIYA**
**A Fully Equipped welding electrodes Manufacturing Factory with state of the Art Buildings, all plant and Machinery Situated at the Vavuniya, Northern Province is available for sale.**

**Location**
The state of the art factory is located in Chettikulam Vavuniya. It is about 25 minutes drive from Mathavachiya Town.

**Description**
The factory premise is situated on 2 acres of land comprises of a state of the art building with a floor area of 16,220 sq.ft. The building is solidly built using imported steel. has high parapet wall of front side & a high green mesh fence on the other sides.

**Facilities**
The factory is sold including plant and machinery with the production capacity of 100 MT per month generating revenue of Rs. 350 Million per annum.

**Expected Price :- Rs. 80 Million**
**if interested, please contact the seller as listed below**

**Contact Details**
**Name of the Seller** ESL Electrodes (Pvt) Ltd
**Mobile** (+94) 710 156 156
**Email** eslelectrodes@gmail.com
(IN/12072)(11)

# ஐசிசி தரவரிசை மதிப்பீட்டை விமர்சித்த மைக்கேல் வான்

ஐசிசி தரவரிசை மதிப்பீடுகள் ஒரு முழுக் குப்பை என்று இங்கிலாந்து முன்னாள் அணித் தலைவர் மைக்கேல் வான் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இந்தியா தற்போது ஐசிசி டெட்ஸ் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளது. அடுத்தடுத்த இடங்களில் நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா அணிகள் உள்ளன.

நியூஸிலாந்தும், இங்கிலாந்தும் 2 மற்றும் 4ஆம் இடத்தில் இருக்க தகுதியானதல்ல, ஏனெனில் கடந்த 2 ஆண்டுகளில் போதிய டெஸ்ட் வெற்றிகளை அவர்கள் பெறவில்லை என்கிறார் மைக்கேல் வான்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

நான் ஐசிசி தரவரிசை குறித்து கடுமையான நேர்மையில் கருத்துக் கூறுகிறேன். அது முழுக்க முழுக்க குப்பை. நியூஸிலாந்து கடந்த 2 ஆண்டுகளில் ஏகப்பட்ட தொடர்களை வென்று விட்டனரா என்ன. இரண்டாம் இடத்தில் இருக்க. அல்லது இங்கிலாந்து கடந்த 34 ஆண்டுகளாக டெஸ்ட் தொடர்களில் கடுமையாக திணறி வருகிறது. குறிப்பாக அயல் நாடுகளில், இங்கிலாந்து எப்படி 4ஆம் நிலையில் இருக்கலாம்.

இங்கிலாந்து உள்நாட்டு டெஸ்ட் தொடர்களில் வென்றுள்ளது. அதுவும் இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரை தங்கள் மண்ணிலேயே சமநிலைப்படுத்தவே முடிந்துள்ளது. எனவே இந்த புள்ளி விவரத்தில் குழப்பமாக உள்ளது. அதே போல் நியூஸிலாந்து 2ஆவது சிறந்த டெஸ்ட் அணியாக எப்படி இடம்பெற முடியும். ஆஸ்திரேலியாதான் நிச்சயம் சிறந்த அணியாக இருக்க முடியும்.

இப்போதைக்கு இந்தியா, ஆஸ்திரேலியா இரண்டு அணிகள்தான் உலகின் சிறந்த டெஸ்ட் அணிகள். இதில் கேள்வியே இல்லை. ஆஸ்திரேலியாவுக்கு வந்து அந்த அணியை கடும் நெருக்கடிக்கு உள்ளாக்கிய அணி 12 மாதங்களுக்கு முன்பாக எது என்றால் இந்தியாதான். தொடரை ஆஸியில் வென்றனர்.

ஆனால் அப்போது சிமித், வோர்னர், லபுஷேன் ஆகியோர் இல்லை. அடுத்த முறை இந்தியா இங்கு வரும்போது அனைவரும் உடற்தகுதியுடன் இருப்பார்கள் என நினைக்கிறேன் - என்றார்.

# ஜேம்ஸ் ஆண்டர்சன் புதிய சாதனை

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 150 போட்டிகளில் விளையாடிய ஒரே வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையை ஜேம்ஸ் ஆண்டர்சன் பெற்றுள்ளார்.

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் செஞ்சூரியனில் நேற்று ஆரம்பமாகியது. இங்கிலாந்து அணியில் வேகப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன் இடம் பிடித்திருந்தார்.

இது அவருக்கு 150ஆவது டெஸ்ட் போட்டியாகும். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றிலேயே 150 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய ஒரே வேகப் பந்து வீச்சாளர் என்றபெருமையை அவர் பெற்றார். இவர் 149 போட்டிகளில் 575 இலக்குகளை வீழ்த்தியுள்ளார்.

2003ஆம்ஆண்டு ஜிம்பாப்வே அணிக்கெதிராக லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அறிமுகம்ஆனார். சமீபத்தில் ஆஷஸ் தொடரின்போது காயத்தால் வெளியேறினார். அதன் பின் தற்போது அணிக்கு திரும்பியுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் மெக்ராத் (563 இலக்குகள்), மேற்கிந்தியத்தீவுகளின் வால்ஷ் (519), இங்கிலாந்தின் ஸ்டூவர்ட் பிராட் (471) கைப்பற்றியுள்ளனர்.

**மரண அறிவித்தல்**

பிறப்பு 08 . 04 . 1961



இறப்பு 25 . 12 . 2019

**திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி சிவநேசன்**
(பிரதம நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி சிவநேசன் நேற்றுமுன்தினம் (25.12.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவநேசன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் ஜெயலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற திரு. திருமதி நடராஜா தம்பதியரின் மருமகளும், குபேரானந்தஉதயன் (கனடா), ஸ்ரீகாந்தரூபி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஆனந்த லட்சுமி (ஆசிரியர் - இணுவில் மத்திய கல்லூரி) மற்றும் ஆனந்த வதனி (லண்டன்), குகதாஸ் (கனடா), காலஞ்சென்ற முகுந்தன் ஆகியோரின் சகோதரியும், பிரியதர்சினி (கனடா), சிவானந்தராஜா (பிரான்ஸ்), சிவாஸ்காந்தன் (வர்த்தகர்), சிவரூபன் (லண்டன்), ஜெனித்தா (கனடா), கமலராணி (ஓய்வுபெற்ற அதிபர் - யா/இராமநாதன் கல்லூரி), சிவகுமார் (சி.க. கூட்டுறவு) ஆகியோரின் மைத்துனியும், யுதிஸ்ரானந், அதிஸ்ரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், ஆரபி, குந்தவி, ராம் (பிரான்ஸ்) ஆதிசன், ஆருசன், அபிஷயன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
கணவர் - 077 9985950, தாய்மாமன் - 077 514 9556



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.